விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 08 வெள்ளிக்கிழமை (22.06.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 186

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## நவநீதம்பிள்ளைக்கு இலங்கை வர அனுமதி

### மெல்ல அழைக்கிறது அரசு

(கொழும்பு)



இலங்கையில் போருக்குப் பின்னரான தற்போதைய நிலைமைகளை அறிந்து கொள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளைக்கு ஜெனிவாவுக்கான இலங்கைப் பிரதிநிதிகளால் விடுக்கப்பட்ட இந்த அழைப்பை அவர் ஏற்றுக் கொள்வார் என தாம் நம்புவதாக (19ஆம் பக்கம் பார்க்க)

### சென்னையில் சம்பிக்கவுக்கு எதிர்ப்பு

## சிங்கத்தை கண்டித்து சிறுத்தைகள் போராட்டம்

இலங்கை அமைச்சர் சம்பிக்கவின் கருத்துக்கு இந்திய நாடாளுமன்றத்தில் கண்டனம் தெரிவிக்க வேண்டும். இலங்கை அரசாங்கத்துடனான உறவுகளை இந்தியா துண்டிக்க வேண்டும். அமைச்சர் சம்பிக்க ரணவக்கவை கைது செய்ய இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு நேற்று சென்னையில் விடுதலைச் சிறுத்தைகள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கோசங்கள் எழுப்பப்பட்டுள்ளன.


இலங்கை தமிழரசுக் கட்சியின் 14-வது தேசிய மாநாட்டில் அதன் தலைவர் இரா. சம்பந்தன் நிகழ்த்திய உரையை விமர்சித்து அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்த கருத்துக்கு கண்டனம் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சம்பிக்க ரணவக்கவின் உருவப் (19ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையை தட்டிக் கேட்கவே

# மேனனை அனுப்புகிறது இந்தியா

### பொறுமையை சோதித்துவிட்டது இலங்கை: இந்திய ஊடகம் தகவல்



**இலங்கையின் மெத்தனப் போக்கை பொறுத்துப் பொறுத்துப் பார்த்த இந்திய அரசு இங்கு இத்தனை மாறுதல்கள் ஏன் என்று நேரிலேயே விளக்கம் கேட்க முடிவு செய்துள்ளது. இதற்காகவே சிவ்சங்கர் மேனனை கொழும்புக்கு அனுப்புவுள்ளது. இவ்வாறு தமிழ்நாட்டில் இருந்து வெளியாகும் தினமணி நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.**

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் இலங்கை அரசுக்கு எல்லா வகையிலும் உதவிகளைச் செய்திருந்தாலும் சமீபகாலமாக இந்திய அரசையே அலட்சியப்படுத்துகிறது இலங்கை அரசு. இந்தியாவுடன் செய்துகொண்ட உடன்பாடுகளை ரத்து செய்யவும் கொடுத்த வாக்குறுதிகளைக் காலில் போட்டு மிதிக்கவும் தயாராகி வருகிறது.

அத்துடன் சீனாவுடன் மிக நெருக்கமாகவும் உறவைப் பேண தொடங்கிவிட்டது. பொறுத்துப் பொறுத்துப் பார்த்த இந்திய அரசு இலங்கையின் (19ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய தலைவர்களை சம்பந்தன் சந்திப்பார்



மருத்துவ சிகிச்சைக்காக சென்னை சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் புதுடில்லியில் இந்திய அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேச வாய்ப்புக்கள் உள்ளதாக இந்து நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் இரா.சம்பந்தன் நிகழ்த்திய உரையை அடுத்து அவரைக் கைது செய்யுமாறு சிங்களப் பேரினவாதக் கட்சிகள் குரல் எழுப்பியிருந்தன.

இந்த (19ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்த வந்தவுடன் சம்பந்தனுக்கு அழைப்பு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடு திரும்பியதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்இரா.சம்பந்தனை நேரடியாக அழைத்து நாடாளுமன்ற தெரிவுக்குழுவை அமைப்பது தொடர்பாக பேசவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெ்ரிவிக்கின்றன.

தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடம்பெறுவதற்குரிய யோசனை ஒன்றை எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சில வாரங்களுக்கு முன்னர் கையளித்த நிலையில் சந்திப்பு (19ஆம் பக்கம் பார்க்க)

## வேலணை சாட்டியில் குண்டு வெடித்தது!

(யாழ்ப்பாணம்)

வேலணை சாட்டி சித்தாந்திரை மாதா கோவிலுக்கு அருகாமையில் பாரிய சத்தத்துடன் நேற்று அதிகாலை குண்டு ஒன்று வெடித்துள்ளது.

இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் பாரிய சத்தத்துடன் வெடித்த இந்தக் குண்டினால் அப்பகுதியில் தீ பரவியது.

அப் பகுதியிலிருந்தவர்களினால் தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டிருந்ததோடு பெற்றோல் குண்டே வெடித்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாட்டி கடற்கரையிலுள்ள மாதா கோவிலுக்கு அருகாமையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக (19ஆம் பக்கம் பார்க்க)

## கழிவு எண்ணெய் அரசியலையே அரசு வடக்கில் நடத்துகிறது

### ஆய்வுக்கு மேனனும் வருவார்-மனோ

(கொழும்பு)

மக்களின் ஜனநாயக வழிப்போராட்டங்களுக்கு எதிராக வடபகுதியில் கழிவு எண்ணெய் அரசியல் நடத்துவதை இலங்கை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மன்னார் கடலில் எண்ணெய் ஆய்வு நடத்தும் இந்திய நிறுவனங்கள் இனிமேல் யாழ்ப்பாண நிலப்பரப்பிலும் எண்ணெய் அகழ்வு வேலைகளை ஆரம்பிக்கலாம். அடுத்த வாரம் இலங்கை வரும் சிவ்சங்கர் மேனனுக்கு இந்த ஆலோசனையை நாம் வழங்க வேண்டும் என்று சொல்லும் அளவிற்கு இந்த விவகாரம் இன்று சந்தி சிரிக்கும் உண்மையாகி விட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் பொதுமக்கள் மீது கழிவு எண்ணெய் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில்,

தமது மண் உரிமைக்காக சாத்வீக போராட்டம் செய்ய விளையும் மக்கள் மீது கழிவு எண்ணெய் வீசப்படுகிறது. அவர்கள் பயணம் செய்யும் வாகனங்கள் (19ஆம் பக்கம் பார்க்க)

## அறிவிப்பில்லா மின்வெட்டு; வடமராட்சி மக்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் நேற்றும் நேற்று முன்தினமும் மின்சாரம் தடைப்பட்டிருந்ததனால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகினர்.

எந்தவித முன்னறிவித்தலும் இன்றி மின்சாரம் தடைப்பட்டிருந்ததாகவும் அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டி (19ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பல்குழலைப் பார்த்து ஆச்சரியப்படுகிறது இராணுவம்

விடுதலைப்புலிகள் தயாரித்த பல்குழல் எறிகணை செலுத்தி ஒன்றை முள்ளிவாய்க்காலுக்கு அருகாமையில் இராணுவம் மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரே நேரத்தில் ஆறு எறிகணைகளைச் செலுத்தக்கூடிய பல்குழல் எறிகணைகளை புலிகள் உள்ளூரில் தயாரித்துள்ளனர். இதனைக் கண்டு இராணுவத்தினர் வியப்படைந்துள்ளதாக மேலும் அறியப்படுகிறது.

இறுதி யுத்தத்தில் அவை பாவிக்கப்படவில்லை என்றும், இதனைப் புலிகள் ஏன் பாவிக்கவில்லை என்று தமக்குத் தெரியவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

உள்ளூரில் கிடைக்கும், மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தி, இவ்வகையான கனரக ஆயுதங்களை புலிகள் மிக நுணுக்கமாக தயாரித்துள்ளனர் என்று தெரிவித்துள்ள இராணுவத்தினர், புலிகளின் ஆயுத உற்பத்தி தொழிற்சாலை ஒன்றையும் கண்டுபிடித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

(ந-2)

## அகதிகள் படகு விபத்து 75 பேர் வரை உயிரிழப்பு

### இலங்கையரும் இருக்கலாம் என அச்சம்

(சிட்னி)

அவுஸ்திரேலிய கிறிஸ்மஸ் தீவுக்கு அருகில் 200 பேரைக் கொண்ட அகதிகள் படகொன்று விபத்துக்குள்ளாகியுள்ளதாக மேற்கு அவுஸ்திரேலிய பொலிஸ் ஆணையாளர் கார்ல் ஒகல்லஹான் தெரிவித்துள்ளார்.

விபத்துக்குள்ளான அகதிகள் படகில் இலங்கையர்களும் உள்ளடங்கியிருக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அதில் பயணித்தவர்களில் சுமார் 75 பேர் உயிரிழந்திருப்பதாக அவுஸ்திரேலிய பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மேலும் 110 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக மேற்கு அவுஸ்திரேலிய பொலிஸ் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

அதிக (19ஆம் பக்கம் பார்க்க)

## தேநீர்க் கடையில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

தேநீர் கடையொன்றினுள் மர்மமான முறையில் இறந்து காணப்பட்ட குடும்பஸ்தரின் சடலமொன்று பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை மன்னார் விடத்தல்தீவு பள்ளமடு எனும் இடத்திலுள்ள தேநீர் கடையொன்றிலிருந்தே மீட்கப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸாரினால் மீட்கப்பட்ட சடலம் மன்னார் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மருத்துவப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்படவுள்ளது.

மீட்கப்பட்ட சடலம் அதே இடத்தினைச் சேர்ந்த முருகன் அருமைத்துரை (வயது-41) என இனங் காணப்பட்டுள்ளது. (ந-4)

## இலங்கையின் அறிக்கை ஜெனிவாவில் சமர்ப்பிப்பு

ஜெனிவாவில் இடம்பெற்ற வருகின்ற 20 ஆவது மனித உரிமைகள் மாநாட்டில் அரசாங்கம், சுகாதாரம் மற்றும் கல்வி துறை சார்ந்த அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

இலங்கை சார்பில் இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ள பிரதிநிதிகள் இந்த விசேட அறிக்கையை தாக்கல் செய்துள்ளனர்.

இலங்கையில் கல்வித்துறை மற்றும் சுகாதார சேவைகள் என்பன இலவசமாக வழங்கப்படுவதாக இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8)

# வடக்குக் கிழக்கில் நடைபெறும் அநீதிகளுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பு ஏற்க வேண்டும்

## பிரி. தமிழர் ஒன்றியம் கண்டனம்

(கொழும்பு)

தமிழர் தாயகத்தின் வட பகுதியில் அமைந்துள்ள யாழ்.தெல்லிப்பழை பகுதியில் தமது வாழ்வுரிமையை வலியுறுத்தியும் தமது சொந்த இடங்களில் குடியமர அனுமதி கோரி ஜனநாயக முறையில் போராட்டம் நடத்திய மக்கள் மீது காட்டுமிராண்டித்தனமான முறையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு பிரித்தானிய தமிழர் ஒன்றியம் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

ஆயுதப் போராட்டத்திற்கு முந்திய காலத்தில் எமது தமிழ் மக்கள் எவ்வாறு அகிம்சை வழியிலான போராட்டங்களை முன்னெடுத்தார்களோ அவ்வாறானதொரு போராட்டத்தை தற்போது நிலவுகின்ற முன்னைய அடக்கு முறைகளையும் மீறிய கொடூர அடக்கு முறைக்கு மத்தியில் முன்னெடுத்தனர்.

இந்தவேளையில் இலங்கை அரசானது தனது கொடிய கரங்கொண்டு போராட்டத்தை தடுத்து மக்களை அச்சுறுத்தியதோடு மறைமுகமான வழியில் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீது கழிவுதிரவத்தை ஊற்றியும் கற்களாலும் தாக்குதல் மேற்கொண்டமையானது மிகவும் கீழ்த்தனமான செயலாகும்.

போர் முடிவுற்று 3 ஆண்டுகள் கடந்துள்ள போதும் மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்காததும் மக்களின் வாழ்விடங்களில் தொடர்ந்தும் இராணுவம் நிலை கொண்டிருப்பதும் தமிழர்களை தொடர்ந்தும் அடிமைகளாக அடக்கியாள சிங்களம் முயல்வதையே எடுத்துக் காட்டுகின்றது.

அத்தோடு முழுமையான இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள இலங்கைத் தீவில் குறிப்பாக தமிழர் தாயகமான வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தொடரும் தமிழர்கள் மீதான அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள், கடத்தல்கள், பாலியல் பலாத்காரங்கள், கலாசார சீரழிவுகள், கொலைகள் மற்றும் மர்ம மரணங்கள் என அனைத்துக்கும் இலங்கை அரசும் அரசப் படைகளுமே காரணமாகும்.

போரின் வடுக்களும் ரணங்களும் இன்னமும் மாறாது வாழும் மக்களை சொந்த இடங்களில் இயல்பு வாழ்வுக்குக் கூட அனுமதிக்காது, தொடர்ந்தும் உயிர் அச்சுறுத்தல்களுக்குள்ளும் அடிமைவாழ்விற்குள்ளும் வாழ நேரிடின் ஒவ்வொரு மக்களும் அடக்கு முறைக்கு எதிராக கிளர்ந்தெழுவதை யாராலும் தவிர்க்கவோ தடுக்கவோ முடியாது.

கடந்த காலங்களில் இவ்வாறான அடக்கு முறைகளுக்கு எதிராக தமிழர்கள் கிளர்ந்தெழுந்து போராடியபோது அப் போராட்டத்தை தவிர்த்து ஜனநாயக வழியில் உரிமைகளைப் பெறலாம் எனக் கூறிய நபர்களும், நாடுகளுமே தமிழர்களின் இன்றைய இந்த அவல நிலைக்கு பதில் கூறவேண்டியவர்கள் என்பதோடு மீண்டும் ஒரு போராட்டம் உருவாகும் பட்சத்தில் அதற்குப் பொறுப்பானவர்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். (அ-2)

## வாள் வெட்டிற்கு இலக்கான இளைஞன் பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞன் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

இந்த வாள் வெட்டுச் சம்பவம் கடந்த 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 11.30 மணியளவில் யாழ்.திருநெல்வேலி இர்ராமலிங்கம் வீதியில் இடம்பெற்றிருந்தது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அதே இடத்தினைச் சேர்ந்த பி.ரஜீவன் (வயது-21) என்ற இளைஞனனே சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞனை வாளினால் வெட்டி காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அப்பகுதியைச் சேர்ந்த ஒருவரை பொலிஸார் ஏற்கெனவே கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட நபரை யாழ்.நீதவான் நீதிமன்றில் நீதவான் மா.கணேசராஜா முன்னிலையில் கடந்த 19 ஆம் திகதி கோப்பாய் பொலிஸார் ஆஜர்படுத்தியிருந்தனர்.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார். இந்நிலையில் வாள்வெட்டுக்கு இலக்கான இளைஞன் நேற்று உயிரிழந்துள்ளார். (ந-4,11)

# திருட்டு நாயகனுக்கு பரிசாக விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

தொடர் திருட்டுக்களில் ஈடுபட்டவரும் ஊடகவியலாளர் ஒருவரைத் தாக்கியவருமாகிய இரத்தினசிங்கம் சந்திரகுமார் என்பவருக்கு யாழ்.நீதிமன்றம் விளக்கமறியல் விதித்துள்ளது.

2000 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக 6 திருட்டுச்சம்பவங்களில் ஈடுபட்டுவந்த குறித்தநபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு கடந்த தை மாதம் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

குறித்த நபர் பிணையில் விடுவிக்கப்பட்ட காலம் முதல் மன்றில் நடைபெற்று வரும் வழக்குகளிற்கு சமுகம் தராது தலைமறைவாகியுள்ளார்.

அண்மையில் குறித்த நபர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சாகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது குறித்த நபர் பிணையில் விடுவிக்கப்பட்டு இருந்த காலப்பகுதியில் மேலும் இரு களவில் ஈடுபட்டிருந்தமை தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் வழக்கனை விசாரணை செய்த யாழ்.நீதவான் மா.கணேசராசா குறித்த நபரினை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விட்டார்.

மேலும் குறித்த நபருக்கெதிராக மல்லாகம், சாவகச்சேரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய நீதிமன்றங்களிலும் வழக்கு நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

## இறுதிச் சுற்றுப் பேச்சுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு கல்வித்திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் கோட்டமட்டத்தில் நடத்தப்பட்ட மூன்று பிரிவுகளைக் கொண்ட பேச்சுப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களிடையே இருந்து வலய மட்டத்தில் தகுதியான வெற்றியாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான இறுதிச் சுற்றுப் பேச்சுப்போட்டி வலிகாம வலய மாணவர்களுக்காக நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.இராமநாதன் கல்லூரியிலும் தீவகவலய மாணவர்களுக்காக நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். வேலணை மத்திய கல்லூரியிலும் இடம்பெறவுள்ளது.

இப்போட்டி தொடர்பாக அறிவித்தல்கள் யாவும் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கும் பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தகுதி பெற்ற அனைத்துப் போட்டியாளர்களும் மேற்படி இறுதிச் சுற்றுப் போட்டியில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் திருமதி யே.கணேசமூர்த்தி கேட்டுள்ளார். (ந-8)


### பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் புதிதாக திறக்கப்பட்டுள்ள நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு இடம் பெறவுள்ளது.

1. Accounts Clerk
2. Traveling Assistant

} பெண்


தகுதிவாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் சுயவிபர கோவையுடன் (23.06.2012) சனிக்கிழமை நேரில் வரவும்.

**Rainbow Travels**

30/2, 3rd Lane,
Power House Rd, Jaffna.

(C-308)


## சத்திரசிகிச்சை உபகரணம் ஒன்றை யாழ்.போதனாவுக்கு வழங்கியது 'அம்டா'




(யாழ்ப்பாணம்)

யப்பான் நாட்டின் அம்டா நிறுவனத்தினால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஓட்டோகிளேவ் (Autoclave) என்னும் உபகரணம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட சென்.ஜோன் அம்புலன்ஸின் ஏற்பாட்டில் இந்த உபகரணம் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். போதனா வைத்தியசாலையின் 15ஆம் இலக்க விடுதியில் இடம்பெற்றது.

அம்டா நிறுவனத்தின் இலங்கைக்கான இணைப்பாளர் சரத்சமரகே இந்த உபகரணத்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராசாவிடம் கையளித்தார்.

சத்திரசிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களை சுத்திகரிப்பு செய்வதற்கான இந்த உபகரணம் சுமார் 5 லட்சம் ரூபாய் பெறுமதியானது என்பது குறிப்பிடத்தக்கது. (ந-8)


### செல்லா சினிமா- யாழ்ப்பாணம்



இன்று முதல்

கார்த்தி, ப்ரணீதா, சந்தானம் மற்றும் பலர் நடித்த

சகுனி

இலங்கை இந்திய ஒரேதின வெளியீடு

10.30, 2.30, 6.30, 9.30

D.T.S


## சட்டவிரோத கருக்கலைப்பு இரு பிள்ளைகளின் தாய் மரணம்

(யாழ்ப்பாணம்)


சட்டவிரோத கருக்கலைப்பை மேற்கொண்ட இரு பிள்ளைகளின்தாயார் அதிக இரத்தப்போக்குகாரணமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. இதில் சங்கானையைச் சேர்ந்த 42 வயதுடைய குடும்பப் பெண் ஒருவரே யாழ்.போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணின் கணவன் இத்தாலி நாட்டில் பணிபுரிந்து வருகின்ற நிலையில் குறித்த பெண் கருத்தரித்துள்ளார். அக்கரு நன்கு வளர்ச்சியடைந்த பின்னர் அவர் சட்டவிரோத கருக்கலைப்பு செய்துள்ளார்.

இதன் போது ஏற்பட்ட அதிக இரத்தப் போக்கு காரணமாக குறித்த பெண் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளது. (ந-4)

வடமாகாண கல்வி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட கல்வி முகாமைத்துவக்குழுக்கூட்டம் நேற்று வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர். விஜயலக்சுமி உரையாற்றுவதையும் ஆளுநரின் செயலாளர் இ. இளங்கோவன், கல்வி அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் ஆகியோர் அருகில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர் சங்க பிரதிநிதிகள், கல்வி அபிவிருத்திக்குழுவினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# நவீனமுறையில் அமையவுள்ள கோம்பயன்மணல் மயானம்

## 20 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் மயானத்தினை நவீன முறையில் புனரமைப்பு செய்வதற்காக 20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபைக்குட்பட்ட இந்த மயானத்தினை நவீன முறையில் புனரமைப்புச் செய்வதற்கான நிதியினை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஒதுக்கீடு செய்துள்ளார்.

மக்களின் வேண்டுகோளுக்கு அமைவாக இந்த மயானம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படக் கூடிய வகையில் இந்த மயானம் காணப்படுவதனால் கட்டாயமாக புனரமைப்புச் செய்யப்பட வேண்டியுள்ளது.

மின்சாரம் ஊடாக உடல்களைத் தகனம் செய்யும் போது சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதை கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-6)

# கசிப்பு விற்பனையில் இருவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

(கரவெட்டி)

வல்வெட்டித்துறைப் பிரதேசத்தில் இரு வெவ்வேறு இடங்களில் கசிப்பு விற்பனை செய்த இருவருக்கு 50ஆயிரம் ரூபா அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

வல்வெட்டித்துறைப் பிரதேசத்தில் இரு வெவ்வேறு இடங்களில் கசிப்பு விற்பனை செய்யப்படுவதாகக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் குறித்த இரு நபர்களையும் கைது செய்தனர்.

குறித்த நபர்களை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகளாகக் கண்டு இருவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (அ-3-24)

# நன்னீர் மீன்பிடியிலும் தென்னிலங்கையர்கள்

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் நன்னீர் மீன்பிடியிலும் தென்னிலங்கை மீனவர்களின் ஆதிக்கம், அடாவடிகள் அதிகரித்துள்ளதாக நன்னீர் மீன்பிடி மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதியில் நன்னீர் மீன்பிடியை நம்பி அதிகளவான மீனவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த யுத்தகாலத்தில் அங்கு பணியாற்றிய இராணுவத்தில் இருந்து விலகிய சிலரின் உதவியுடன் நன்னீர் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

யுத்தத்தினாலும் சுனாமி அனர்த்தத்தினாலும் அனைத்தையும் இழந்த நாம் இன்று மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர் நன்னீர் தொழிலையே நம்பியுள்ளோம்.

தென்னிலங்கை மீனவர்கள் இரவு வேளைகளில் தடைசெய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி அதிகளவான மீன்களைப் பிடிக்கின்றனர்.

அதுமட்டுமன்றி தென்னிலங்கைக்கு அனுப்புவதாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் மற்றும் நன்னீர் மீன்பிடித் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே இச்செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த உரிய அதிகாரிகள் முன்வர வேண்டுமென அப்பகுதி மீனவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-24)

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை முதன்மை நிலை ஒன்று இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் சு. தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய பாடசாலை வேலைகள் பகுதி பொறியியலாளர் தே. சுரேஸ்குமார், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் திட்டமிடல் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் தி. ஞானசுந்தரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)

# மஹோற்சவம்

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை அருள்மிகு சித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை சப்பறத்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறும்.

3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.45 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9-78)

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அருள்மிகு வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு சப்பைரதத்திருவிழாவும் இடம்பெறும்.மறுநாள் திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் இடம்பெறும்.

3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழா நடைபெறும் என ஆதீனகர்த்தா அறிவித்துள்ளார். (அ-9)




# வீதி மற்றும் கட்டடம் அமைக்க 15 இலட்சம் ரூபா ஒதுக்கீடு

## வடமராட்சி தெற்குமேற்கு பிரதேசசபை அறிவிப்பு

(கரவெட்டி)

நெல்லியடி பொதுச்சந்தை வெளியகக் கட்டடம் மற்றும் கொம்மாந்தறை வீதி புனரமைக்கப்படவுள்ளதாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் பொ. வியாகேசு தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக இவ்வீதிக்கென 15 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமின்றி மக்களின் நீண்டகால கோரிக்கைக்கு அமைவாக நெல்லியடி பொதுச் சந்தையின் பழக்கடை, தேய்காய்க் கடை, வெற்றிலைக்கடை போன்ற வியாபாரிகளுக்கு கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இக்கட்டடம் அமைப்பதற்காக எட்டு இலட்சம் ரூபாவும் கொம்மாந்தறை வீதிக்கென 7 இலட்சம் ரூபாவும் சபை நிதியில் ஒதுக்கப்பட்டுள்ளது.இவ்வேலைத்திட்டம் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-24)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பொறியியலாளர் வைத்தியலிங்கம் சண்முகலிங்கம் கலந்து கொள்வார்.திருமதி சோபனா சண்முகலிங்கம் பரிசில் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (அ-9)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்ப்பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலிநகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# மாவைக்கந்தனுக்கு காம்யோற்சவப் பெருவிழா

(இருபாலை)

மாவிட்டபுரம்- மாவையாதீனம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய காம்யோற்சவப் பெருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை காலை 6.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளதாக ஆலய ஆதீனகர்த்தா அறிவித்துள்ளார்.

மேலும் ஆடி அமாவாசைத்தினத் தீர்த்தோற்சவமாகையால் அடியார்களின் வசதி கருதி வடபிராந்திய போக்குவரத்து சபையினரும் தனியார் போக்குவரத்து சேவையினரும் போக்குவரத்து ஒழுங்குளை மேற்கொண்டுள்ளதாகவும் அறிவித்துள்ளனர். (அ-9-136)

## இன்று ஒரு தகவல்

### மாலுமியற்ற மரக்கலம்

அமைதியான ஒரு கடலில் மிதந்து போய்கொண்டிருந்தது அந்தக் கப்பல்.

திடீரென அலைகள் எல்லாம் உயரமாக எழும்ப ஆரம்பித்தன. காற்றின் வேகம் அதிகரிக்க மெல்லமெல்ல அலைகள் உயரமாக எழும்ப ஆரம்பித்தது.

காற்று மெல்லமெல்ல வலுவடைந்து புயலாக, சூறாவளியாக மாறுகிறது.

அமைதியாக போய்க்கொண்டிருந்த கப்பல் இப்போது அவதிக் குள்ளாகிறது. இப்போது மரக்கலம் தடுமாறுகிறது.

கடுமையான காற்றில் சிக்கிய கப்பல் திசை தெரியாமல் தடுமாறிப் போகிறது.

அதில் பயணித்தவர்களுக்கு எந்தப்பக்கம் போய்க் கொண்டிருக்கிறோம் என்பது தெரியாது.

மிகவும் நெருக்கடியான நிலையில் கப்பல் பயணிக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் கப்பலின் மாலுமி மிகவும் சாமர்த்தியமாகச் செயற்பட்டார். தனது அறிவாற்றலால் முழுமையாகக் கப்பலை கட்டுப்படுத்தினார்.

ஒருவாறாக அந்தச் சூறாவளியில் இருந்து கப்பலை காப்பாற்றி கரைக்குச் கொண்டு வந்து சேர்த்தார்.

மாலுமி என்ற ஒருவர் இல்லையென்று வைத்துக் கொள்ளுங்கள். அந்தக் கப்பலின் கதி என்னவாக இருக்கும்? யோசித்துப் பாருங்கள்.

ஒரு கோபக்காரனின் நிலையும் அப்படித்தான்!

"கோபக்காரன்- என்பவன் ஒரு மாலுமி இல்லாத மரக்கலம் போன்றவன்" என்றார் நபிகள் நாயகம்.

கொந்தளிக்கும் கடலிலே... அல்லல்படும் மரக்கலத்தை விட மோசமானது கோபக்காரனின் நிலைமை என்பது அவரது கருத்து.

ஒரு கப்பல் கடலில் தடுமாறினால் அதை கரையொதுக்க மாலுமி இருக்கிறார்.

ஆனால், கோபக்காரனின் நிலைமை அப்படியில்லை.

மனித மனம் ஒரு மரக்கலம். அறிவு அதிலே இருக்கிற மாலுமி. மாலுமி மரக்கலத்தைச் செலுத்த அது கட்டுப்பட்டு ஓடுகிறது.

ஆனால், கோபக்காரன் என்ற மனிதனிடத்திலே அறிவு என்னும் மாலுமி சீராக வேலை செய்யமாட்டான்.

ஏன் என்றால் கோபம் அந்த மாலுமியின் கண்களை அவித்து விடும்... காதுகளையும் கேட்காதவாறு செய்துவிடும்.

கண்ணையும் காதையும் மூடிவிட்டு கப்பலை ஓட்டு என்றால் எப்படி ஓட்டுவது? ஆகவே கோபக்காரன் என்பவன் மாலுமி இல்லாத மரக்கலம்.

புனித குர் ஆன் என்ன சொல்கிறது?

"தீமையை, நன்மையைக் கொண்டே தடுத்துக்கொள்ளும். "திருவள்ளுவர் என்ன சொல்கிறார்; "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்"

ஓர் ஊரில் ஒரு செல்வந்தர் இருந்தார். அவரிடம் அதிகளவான ஆடுகள் இருந்தன. அவற்றினை மேய்ப்பதற்கு ஒரு சிறுவன் இருந்தான். செல்வந்தர் ஒருநாள் ஆடு மேய்க்கிற சிறுவனை அழைத்தார்.

"நீ நேராகப் போய் ஓர் ஆட்டின் மிகவும் நல்ல பகுதி எதுவோ அதை எடுத்துக் கொண்டு வா" என்றார்.

இவன் போய், ஓர் ஆட்டின் உடம்பிலே இருந்த நாக்கு, இருதயம் இவை இரண்டையும் கொண்டு வந்து கொடுத்தான்.

அவர் அதை வாங்கிக் கொண்டு மறுபடியும் அவனை நோக்கி, "இப்பொழுது நீ போய் இன்னொரு ஆட்டின் கெட்ட பகுதி எதுவோ அதை எடுத்துக் கொண்டு வா" என்றார்.

மீண்டும் அவன் அதையே கொண்டு வந்தான்.

அவரிடம் கொடுத்தான்.

"என்ன இது மறுபடியும் இதையே கொண்டு வந்திருக்கிறாய்?"என்றார்.

இவன் சொன்னார்; "ஐயா! ஓர் உடம்பிலே இருக்கிற மிக நல்ல பொருளும் இதுதான்! மிகக் கெட்ட பொருளும் இதுதான்.

கோபப்படாமல் இருந்தால் இவை இரண்டும் நன்றாகவே வேலை செய்யும்! கோபமடைந்தால் இவை இரண்டும் மோசமாக வேலை செய்யும்.

எனவே, வாழ்க்கையில் வெற்றி பெறவேண்டும் என்று நினைக்கிறவர்கள் முதலில் கோபத்தை விரட்ட வேண்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 70 வயதினை பூர்த்தி செய்தோருக்கு ஆயிரம் ரூபா கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியன்று 70 வயதினைப் பூர்த்தி செய்த முதியோர்களுக்கு அரசால் அறிவிக்கப்பட்ட ஆயிரம் ரூபா கொடுப்பனவிற்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படவுள்ளதாக கோப்பாய் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார்.

பொதுசன மாதாந்த உதவிப் பணம், சமுர்த்தி கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும் இந்த முதியவர்கள் 70 வயதுக்கும் மேற்பட்டவர் என்பதை உறுதிப்படுத்தும் ஆவணம் (தேசிய அடையாள அட்டை/ முதியோர் அடையாள அட்டை/ பிறப்புச் சான்றிதழ்/ பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்/ உத்தேச வயதுச் சான்றிதழ்), பொதுசன மாதாந்த உதவி/ சமுர்த்தி வங்கிப் புத்தம் என்பவற்றின் போட்டோப் பிரதி, கூட்டுக்கணக்கை ஆரம்பிக்க விரும்பின் அவை தொடர்பான விபரங்கள் (பதிலாள்) போன்ற ஆவணங்களை சமர்ப்பித்து விண்ணப்பப் படிவங்களை பூரணப்படுத்த முடியும்.

இதற்கமைய இன்று வெள்ளிக்கிழமை ஜே/257,ஜே/258, ஜே/259, ஜே/260, ஜே/261, ஜே/262 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்திலும் ஜே/268, ஜே/269, ஜே/270, ஜே/271, ஜே/272, ஜே/279 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் நீர்வேலி தெற்கு மாதர் அபிவிருத்திச் சங்கத்திலும் பதிவுகளை மேற் கொள்ள முடியும்.

மேலும் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை ஜே/263, ஜே/264, ஜே/265, ஜே/266, ஜே/267 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் உரும்பிராய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் ஜே/273, ஜே/274, ஜே/275, ஜே/276, ஜே/277, ஜே/278, ஜே/280 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் புத்தூர் மேற்கு கிராம அலுவலர் அலுவலகத்திலும் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜே/281, ஜே/282, ஜே/283, ஜே/284, ஜே/285, ஜே/286, ஜே/287 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் அச்சுவேலி பல நோக்கு மண்டபத்திலும் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-9)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை- தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறுமென ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (அ-9)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 85 | 100 | 70 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 90-100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 220 | 200 | 90 | 250 |
| தக்காளி | -- | 120 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 60 | 60 | 60 | 70 |
| கரட் | 100 | 120 | 120 | 170 |
| பூசணி | 60 | 80 | 50 | 60 |
| புடோல் | 60 | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 40-50 | 50 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 100-150 | 100 | 120-200 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 110 | 100 |
| பாகற்காய் | 100 | 140 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 90 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | -- | 100 | 70 | -- |
| பயற்றங்காய் | 120 | 180 | 100 | 80 |
| லீக்ஸ் | 150 | 140 | 150 | 170 |
| பீற்றூட் | 70 | 70 | 85 | 80 |
| கறிமிளகாய் | -- | 170 | 170 | 170 |
| முருங்கைக்காய் | 120 | 200 | 100 | 140 |
| போஞ்சி | -- | 200 | 130 | 200 |
| கத்தரிதம்புள்ள | -- | 80 | 50 | -- |
| கீரை - 1 பிடி | 8 | 15 | 20 | 15 |
| தேசிக்காய் | 100-150 | 110 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 20 | 20 | 16-20 |

## இராசி பலன்

*22.06.2012*
*(ஆனி 08, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு*
*திருதியை முன்னிரவு 10.57 மணிவரை*
*புனர்பூசம் பின்னிரவு 4.49 மணிவரை*
*இராகுகாலம் 10.24-11.54 மணிவரை*
*சுபநேரம் 5.54-7.24 மணிவரை*

**மேடம்** பெற்றோரின் ஆதரவால் பெருமை காண்பீர்கள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், பயணத்தால் அலைச்சல் ஏற்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க நினைப்பீர்கள்.

**இடபம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலம் உண்டு. நாடிவந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழும் நாள், ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கௌரவமான நாள்.

**மிதுனம்** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், சுபகாரிய பேச்சுக்கள் முடிபாகி மன நிம்மதியைக் கொடுக்கும், பொருள் வரவிற்கு அடித்தளம் இடுவீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், மாமன், மைத்துனர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** தொழில் நன்மை கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை பெறுவீர்கள், பயணங்களினால் பலன் கிடைக்கும், அம்பிகை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், கனிவான பேச்சுக்களால் காரியம் சாதிப்பீர்கள்.

**சிங்கம்** தாராளமாக செலவு செய்து மகிழும் நாள், தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களை செய்ய முன்வருவீர்கள், மாலை நேர ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள்.

**கன்னி** எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும், குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** அருமையான நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பொதுவாழ்வில் புகழ்கூடும், எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம். விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** எதிர்பார்த்த காரியம் ஒன்று இன்று நடைபெற்று மகிழ்சியைத்தரும், பயணங்களினால் பலன் உண்டு, வியக்கும் செய்திகள் வீடுவந்து சேரலாம், பூர்வீகச் சொத்து தகராறுகள் நல்ல முடிபுக்கு வரும்.

**தனுசு** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், கௌரவ குறைவான நிலையுண்டு, பயணத்தால் மன உழைச்சல்கள் ஏற்படலாம், திட்டமிட்ட காரியங்களில் திடீர் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், பேச்சில் கனிவு பிறக்கும், உறவினர்களும், நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தொழில் முன்னேற்றம் உண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணுவீர்கள்.

**கும்பம்** உடல் நலம் சீராகி உற்சாகம் பெறுவீர்கள், உள்ளொன்றுவைத்து புறமொன்று பேசுபவர்களை இனம் கண்டு கொள்வீர்கள், செய்தொழிலில் முன்னேற்றம் உண்டு, புதிய திட்டங்கள் கைகூடும்.

**மீனம்** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாடுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, யோசிக்காமல் செய்த வேலைகளில் கூட வெற்றி பெறுவீர்கள், வியாபார விருத்தியுண்டு.

வளவன்

# தேசத்திற்கு மகுடம் வீடுகளுக்கு மலசலகூட வசதிகள் இல்லை

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(அநுராதபுரம்)

அநுராதபுரம் ஒயமடுவஓயவில் தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்காக நிர்மாணிக்கப்பட்ட 18 வீடுகளுக்கு மலசலகூட வசதிகள் இல்லை என நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவிக்கப்பட்டது.

இவ்வீட்டுத்திட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவி னால் திறந்து வைக்கப்பட்டது என அநுராதபுர மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பி. ஹரிசன் கூறியுள்ளார்.

எனினும் இவற்றில் 32 வீடுகளுக்கு தண்ணீர் வசதி இல்லை எனவும் 33 வீடுகளுக்கு மின்சாரம் இல்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

இது ஜனாதிபதிக்கு வெட்கக்கேடாகும். முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாச ஏழை மக்களுக்காக வீட்டுத் திட்டங்களை அமைத்த போது அனைத்து அடிப்படை வசதிகளும் வழங்கப்பட்டன. நிரந்தர காணி உறுதிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன என அவர் கூறினார்.

இது தொடர்பாக உண்மைகளைக் கண்டறியும் பயணமொன்றை தன்னுடன் இணைந்து மேற்கொள்ளு மாறு அமைச்சர்களுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

வீடமைப்புத்துறை பிரதியமைச்சர் லசந்த அழகிய வண்ண பதிலளிக்கையில், இவ்விடயத்தை தான் ஆராய் ந்து குறைபாடுகளை தீர்க்க நடவடிக்கை மேற்கொள் வதாக கூறினார். (அ-2)

# ஜனாதிபதியுடன் இணைந்தார் தூதுவர் தமரா குணநாயகம்



ஐக்கிய நாடுகள் ஜெனிவாவிற் கான இலங்கை நிரந்தரப் பிரதிநிதி

தமரா குணநாயகம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கியூப விஜயத்தில் இணைந்து கொண்ட தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கியூபாவின் ஹவானா நகரில் நடைபெற்ற முக்கிய சந்திப்புக்க ளில் ஜனாதிபதியின் பிரதிநிதிகள் குழுவில் தமராவும் இணைந்து கொண்டிருந்தார் எனக் குறிப்பிடப் படுகின்றது.

எதிர்வரும் ஜூலை மாதத்துடன் தமராவின் ஐக்கிய நாடுகள் நிரந் திரப் பிரதிநிதி பதவி முடிவடைவ துடன் அதன் பின்னர் அவர் கியூபா விற்கான தூதுவராக கடமைகளை பொறுப்பேற்பார் என வெளிவிவகார அமைச்சு அறிவித்திருந்தது.

எனினும் கியூபாவிற்கான தூதுவர் பதவியை ஏற்றுக்கொள்ளப்போவதி ல்லை என அவர் முன்னர் அறிவித்தி ருந்தார்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய தமரா குணநாயகம் கியூபா விற்கான தூதுவராக நியமிக்கப்பட் டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின் றது. (அ-2)

# தெற்காசிய நாடுகளில் குழந்தைகளுக்கு பாலூட்டுவதில் இலங்கைக்கு முதலிடம்

(கொழும்பு)

குழந்தைகளுக்கு தாய்ப்பால் ஊட்டுவதில் தெற்காசிய நாடுகள் மத்தியில் இலங்கை முன்னிலை வகிப்பதாக யுனி செப் அமைப்பின் விசேட போசாக்கு நிபுணர் ஜூலியா க்ரெசவெக் தெரிவித்துள்ளார்.

தெற்காசியாவில் தாய்ப்பாலூட்டும் நடைமுறை மற்றும் சிறுவர்களின் போசாக்குத் தொடர்பாக காத்மண்டுவில் அண்மையில் நடைபெற்ற செயலமர்வொன்றிலேயே அவர் இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

தாய்ப்பாலூட்டும் பழக்கத்தை அதிகரிப்பது தொடர்பில் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது சம்பந்தமாக இச் செயலமர்வில் ஆராயப்பட்டது.

உலக வங்கியின் 2007 ஆம் ஆண்டு தகவல்களுக்கு அமைய பிறந்த நாள் முதல் ஐந்து மாதம் வரையான குழந்தைகளுக்கு 76 வீதமான தாய்மார் தாய்ப்பாலூட்டும் அதேநேரம், பாகிஸ்தானில் 37 வீதமும், நேபாளத்தில் 53 வீதமும், இந்தியாவில் 46 வீதமும் பங்களாதேஷில் 43 வீதமுமே பதிவாகியுள்ளன.

தாய்ப்பாலூட்டுவது அனைத்து தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் தாய்ப்பாலூட்டுவதை அதிகரிப்பதன் மூலம் தெற்காசிய நாடுகளில் காணப் படும் போஷாக்கின்மையைக் குறைக்க முடியும் என இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

தெற்காசியாவில் தாய்ப்பாலூட்டுவதை அதிகரிப்பத ற்கு அங்கத்துவ நாடுகளின் அரசாங்கங்கள் கொள் கைகளைப் பலப்படுத்துவதுடன், திட்டங்களை வகுக்க வேண்டும் என்றும் இச் செயலமர்வில் வலியுறுத் தப்பட்டது.

தாய்ப்பால் குழந்தைகளின் வளர்ச்சிக்கு நேரடியாக வும் மறைமுகமாகவும் உறுதியளிக்கும். குழந்தை பிறந்தது முதல் ஆறு மாதங்களுக்குத் தாய்ப்பாலூட் டுவது குழந்தைகளின் எதிர்காலத்தில் எவ்வாறு பயன ளிக்கிறது என்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



### நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

**இன்று நான்காம் திருவிழா**

### பஞ்சகிருத்தியமும் நீயே தாயே!

படைப்பவள் நீயே உயிர்கள் நின் உன்னத படைப்பே
கொடியேற்றம் படைத்தலையே உணர்த்துகிறது
காப்பவள்நீயே கலியுகத்திலும் அழியாது காப்பவள் நீயே
வேட்டைத்திருவிழா காத்தலையே உணர்த்துகிறது
அழிப்பவள் நீயே பகைவரை அழிப்பவள் நீயே
தேரேறி பவனி வந்து சங்காரத் தொழிலை செய்பவளே
மறைப்பவள் நீயே தீர்த்தத் திருவிழா உணர்த்துகிறது
தீர்த்தம் ஆடி மும்மலங்களையும் நீக்குபவளே
அருளாட்சிபுரிபவள் நீயே பஞ்ச கிருத்தியமும் நீயே
நின் அருளால் மழை பொழிந்திடுவாய் தாயே!
மழையின்றி யமையாது எதுவும்

ஈழநல்லூர் க.கனகராசா

### நயினையம் பதிக்கு வாருங்கள்

நயினையம் பதிக்கு வாருங்கள்
நாளுமவள் புகழ் பாடுங்கள்
கருணையுள்ளங் கொண்ட தேவியவள்
கர்மவினையறுப்பாள் பாருங்கள்

அலை கடல் மீதினிலே வீற்றிருப்பாள்
அன்பரின் குறைதனை தீர்த்திடுவாள்
அநாதியாய் வரலாறு கொண்ட அபிராமியவள்

அண்டங்களையாளும் அகிலேஸ்வரிதாயவள்
தாயக மண்ணின் தலப் பெருமையானவள்
தீவக கற்பத்தின் தீந்தமிழாய் திகழ்பவள்
நாகப் படுக்கையில் நர்த்தன மாடுபவள்
நயினையில் கோயில் கொண்ட நாகபூஷணி தாயவள்

சண்டிலிப்பாய் க.நாகேஸ்வரா


றூபா பன்முக வர்த்தகம்



Colombo-office:
176A,central Road,
colombo-12
Tel:0115-8302147,0115-83219
fax:0112392412

இல.104A ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
Tel:-0212228330
Fax:-021-2227036


# உடுவில் பிரதேச செயலகத்தின் கலை,இலக்கியப்போட்டி முடிவுகள்

(உடுவில்)

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலகத்தினால் பிரதேச மட்டத்தில் நடத்தப் பட்ட தேசிய இலக்கியப்போட்டி முடிபுகளை பிரதேச செயலாளர் எம். நந்தகோபாலன் அறிவித்துள்ளார்.

இதில் முதல் 3. இடங்களைப் பெற்றவர் கள் விபரம் வருமாறு,

**கனிஷ்ட பிரிவு**

**கவிதைப்போட்டி**

ஜெ. சஞ்சிகா (யா/ தாவடி இ.த.க. பாட சாலை), த. துளஷிகா (யா/ இணுவில் மத்திய கல்லூரி), பா. விதுஷிகா (யா/ இணுவில் மத்திய கல்லூரி)

**கட்டுரைப்போட்டி**

த. அருட்செல்வி (யா/ இணுவில் மத்திய கல்லூரி),சி. சங்கநிதி (யா/ ஏழாலை சைவ மகாஜன வித்தி), அ.அணுஷாலினி (யா/ (இணுவில் மத்திய கல்லூரி)

**கவிதைப்பாடல்**

த. அனோஸன் (யா/ இணுவில் மத்திய கல்லூரி),ச.அஜீவன் (யா/ இணுவில் மத்திய கல்லூரி),சி.ராஜ்கவிதன் (யா/ இணுவில் மத் திய கல்லூரி)

**கையெழுத்துப்போட்டி**

ப. சங்கவி (யா/ இணுவில் மத்திய கல் லூரி), கு. தயாளநீதினி (யா/இணுவில் மத்திய கல்லூரி), தயாளரூபினி (யா/ இணுவில் மத் திய கல்லூரி)

**சிரேஷ்ட பிரிவு**

**கவிதைப்போட்டி**

பா. காஞ்சனா (யா/ தாவடி இ.த.க. பாட சாலை), ம.மஞ்சுகா (யா/ இணுவில் இந்துக் கல்லூரி),வ.துவாரகன் (யா/ இணுவில் இந் துக்கல்லூரி)

**கட்டுரைப்போட்டி**

வ.துவாரகன் (யா/ இணுவில் இந்துக் கல்லூரி), கு. சங்கீர்த்தனா (யா/ இணுவில் மத்திய கல்லூரி), ம.மஞ்சுகா (யா/ இணுவில் இந்துக்கல்லூரி)

**கவிதைப்பாடல்**

நா.சுபாங்கரி (யா/ இணுவில் இந்துக் கல் லூரி), லோ.சிந்தஜா(யா/ இணுவில் இந்துக் கல்லூரி), க.துவாரகா(யா/ இணுவில் இந்துக் கல்லூரி)

**திறந்தபிரிவு**

**பாடல்ஆக்கப்போட்டி**

அ.நேதிகா (இணுவில் மேற்கு), செ. பரம நாதன் ( தாவடி தெற்கு),பா. பாலச்சந்திரன் (மயிலணி, சுன்னாகம்)

**நாட்டார் கலை கற்றல் போட்டி**

பா.பாலச்சந்திரன் (மயிலணி, சுன்னாகம்), செ. பரமநாதன் ( தாவடி தெற்கு),சீ. சண்முக வடிவேல் (ஏழாலை மேற்கு)

**விவரணப்போட்டி**

பு.சசிறஜனி (சுன்னாகம் தெற்கு), பா.பாலச் சந்திரன் (மயிலணி, சுன்னாகம்),வே. பிரசில்லா ராதிகா (ஏழாலை கிழக்கு)

**சிறுகதைப்போட்டி**

செ. பரமநாதன் (தாவடி தெற்கு),அ.நேதிகா ( இணுவில் மேற்கு),பா.பாலச்சந்திரன் (மயி லணி, சுன்னாகம்)

**கவிதைப்போட்டி**

செ. பரமநாதன் (தாவடி தெற்கு),பா. பாலச் சந்திரன் (மயிலணி, சுன்னாகம்),அ.நேதிகா (இணுவில் மேற்கு)

**சிறுவர் கதைப்போட்டி**

இ.குகேனி ( சுன்னாகம் தெற்கு),வே. பிரசில்லா ராதிகா (ஏழாலை கிழக்கு), பா.பாலச் சந்திரன் (மயிலணி, சுன்னாகம்)

**ஆங்கிலமொழிமூலம்**

**பாட்டுப்போட்டி**

பா.பாலச்சந்திரன் (மயிலணி, சுன்னாகம்)

**திறனாய்வுப்போட்டி**

பா.பாலச்சந்திரன் (மயிலணி, சுன்னாகம்)

**சிறுகதைப்போட்டி**

பா.பாலச்சந்திரன் (மயிலணி, சுன்னாகம்)

**கவிதை**

பா.பாலச்சந்திரன் (மயிலணி, சுன்னாகம்)

(அ)

# நல்வழியை போதிக்கின்ற அறநெறிக் கல்வி செயற்பாடுகள் மேம்படுத்தப்பட வேண்டும்

## அலென்ரின் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

**சர்வமத ரீதியாக அறநெறிப் பாடசாலைகளை விரிவுபடுத்தி அப் பாடசாலைகளின் சகல கற்றல், கற்பித்தல் உபகரணத் தேவைகளைப் பூர்த்தி செய்து விஞ்ஞான தகவல் தொழில்நுட்ப மாற்றத்தால் மழுங்கடிக்கப்பட்டு வருகின்ற அறநெறிக் கல்வியை மேம்படுத்துகின்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் அறநெறிக் கல்வி செயற்பாடுகள் மழுங்கடிக்கப்பட்டு வருவதுடன் அறநெறிக் கல்வியை போதிக்கின்ற ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் போதுமானதாக இல்லையென குறித்த பிரேரணை மீதான விவாதத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார உரை நிகழ்த்தினார்.

இப் பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்து உரையாற்றுகையிலேயே ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் அலென்ரின் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நல்வழியைப் போதிக்கின்ற அறநெறிக் கீல்விச் செயற்பாடுகள் மழுங்கடிக்கப்பட்டு வருகின்றது. இத் துன்பியல் நிலையை நீக்க அறநெறிப் பாடசாலைகளை அரசு பதிவு செய்து அப் பாடசாலைகளின் தளபாடம் உள்ளிட்ட சகல கற்றல், கற்பித்தல் உபகரணங்களை வழங்கி மஹிந்த சிந்தனை செயற்றிட்டத்தின் கீழ் அறநெறிக் கல்வியை மேம்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இந்து, கிறிஸ்தவம், பௌத்தம், இஸ்லாம் என சகல மதங்களையும் போதிக்கின்ற அறநெறிக் கல்வியினூடாக சமூக மற்றும் கலாசார சீரழிவுகளால் அழிவடைந்து வருகின்ற பண்பாட்டு விழுமியங்களை பேணிப்பாதுகாக்க முடியும். இளஞ்சிறார்களின் மனதில் மனித நேயப் பண்புகளை வளர்த்தெடுக்க இவ் அறநெறிக் கல்வி பெருந்துணை புரிகின்றது.

இந்து கலாசார மற்றும் அலுவல்கள் திணைக்களத்தால் அறநெறி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவை அதிகரிப்பதுடன் இக் கொடுப்பனவு சகல அறநெறிப் கல்வி ஆசிரியர்களுக்கு சீரான முறையில் வழங்குவதற்கான செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## மீளாய்வுக்கூட்டம்

(மல்லாவி)

வடமாகாணத்திற்குட்பட்ட 12 கல்வி வலயங்களிற்கு கீழ் இயங்கும் ஆசிரிய மத்திய நிலையங்களில் கடமையாற்றும் முகாமையாளர்கள்மற்றும் இணைக்கப்பட்டுள்ள தொழில் வழிகாட்டல், ஆங்கிலம் தொடர்பான அலுவலர்கள் ஆகியோருக்கான இந்நிலையங்களின் செயற்பாடுகள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார்மடத்தில் உள்ள வடமாகாண கல்வித் திணைக் களத்தில் நடைபெறும்.

ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் சமூகம் தரும்போது நடப்பாண்டுக்குரிய இதுவரையுமான மாதாந்த பணி நிறைவேற்று அறிக்கையின் பிரதிகளை தவறாது எடுத்து வரவேண்டுமென வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (அ-3-15)

## தொலைக்காட்சி நாடகங்கள் ஒளிபரப்பால் 789 மில்லியன் வருவாய்

(கொழும்பு)

வெளிநாட்டு தொலைக்காட்சி நாடகங்களை இலங்கை தொலைக்காட்சிகளில் ஒளி பரப்புவதற்கான வரியாக பெற்ற 789.5 மில்லியன் ரூபாவை அம்பாந்தோட்டையின் ரன்மினித்தென்னவில் மஹிந்த ராஜபக்ஷ தொலைக்காட்சி சினிமா பூங்காவின் நிர்மாணத்திற்கும் பராமரிப்பிற்கும் அரசாங்கம் செலவு செய்தது என நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இவ்விபரங்களை தெரிவித்துள்ளார்.

கடந்த 2006 ஜூலை முதலாம் திகதியிலிருந்து அரசாங்கம் இவ்வரியை அறிமுகப்படுத்தியது. சிங்களம், தமிழ் ,ஆங்கிலம் ஆகிய மொழி களில் மொழிமாற்றம் செய்யப்பட்டு ஒளி பரப்பப்படும் தொலைக்காட்சி நாடகங்களின் 30 நிமிட அத்தியாயத்திற்கு 90 ஆயிரம் ரூபா வீதம் வரி விதிக்கப்படுகிறது. 30 நிமிடங்களுக்கு மேற்பட்ட ஒவ்வொரு 5 நிமிடத்திற்கும் 15 ஆயிரம் ரூபா வீதம் வரி விதிக்கப்படுகிறது.

ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட நாடகங்களின் 30 நிமிட அத்தியாயத்திற்கு 10 ஆயிரம் ரூபாவும் அதற்கு மேற்பட்ட 5 நிமிடங்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபாவும் வரி விதிக்கப்படுவதாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (அ-2)

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் டிப்ளோமாவிற்கான சான்றிதழ் வழங்கல்

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரிய பயிற்சியை முடித்துக் கொண்டு ஆசிரியர்களாக கடமையாற்றும் 2005, 2006, 2007,2008 ஆம் கல்வியாண்டிற்கான டிப்ளோமாதாரிகளுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இதில் சான்றிதழ் பெற்றுக் கொள்ளும் மேற்கூறிய கல்வியாண்டிற்கான ஆசிரியர்கள் தம்மை பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

யாழ்.மாவட்ட ஆசிரியர்கள் நேரடியாகவும் வெளி மாவட்டத்தவர் கடித மூலமும் பதிவு செய்தல் வேண்டும். இப்பதிவுகளை எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் மேற்கொள்வதன் மூலம் இந்நிகழ்வில் கலந்து கொள்ள முடியும் என பீடாதிபதி எஸ். கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் 021 2230036 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். (அ)



சம்பள உயர்வு கோரி தற்போது வேலை நிறுத்தத்தை மேற்கொண்டுள்ள பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் ஆர்ப்பாட்டம் வோர்ட் பிளேசிலுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு முன்னால் நேற்றுமுன்தினம் இடம்பெற்றதை படத்தில் காணலாம்.

## கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினர் ஜயலத் எம்.பியை விசாரித்தனர்

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும் தேசிய சேவைச் சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன நேற்று கோட்டையில் உள்ள தேசிய சேவைச் சங்கத்தின் தலைமையகத்தில் வைத்து அங்கு வருகை தந்த கொழும்பு குற்றத்தடுத்து பிரிவின் உதவி பொலிஸ் அதிகாரி ஒருவரும் பொலிஸ் பரீட்சகர் ஒருவரும் விசாரணை செய்துள்ளனர்.

பெப்ரவரி மாதம் கொழும்பு புறக்கோட்டை மத்திய ரயில் நிலையத்துக்கு முன்பாக ஐக்கிய தேசியக் கட்சி உட்பட எதிர்க்கட்சிகள் இணைந்து அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பில் விசாரணை செய்யப்பட்டார்.

அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் அதற்கெதிராக உயர் நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த மனு மீதான பரிசீலனை தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் இதன் போது அவர் குறிப்பிட்டார். (அ)

## நூறு இலங்கை அகதிகள் கிறிஸ்மஸ்தீவில் தஞ்சம்

(கொழும்பு)

இலங்கை புகலிட கோரிக்கையாளர்களை ஏற்றிய படகொன்று அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவை சென்றடைந்துள்ளதாக அவுஸ்திரேலிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவுஸ்திரேலிய கடற்படையினர் குறித்த படகை நேற்றுமுன்தினம் சுமார் 100 பேருடன் கைப்பற்றியுள்ளனர். ஒரு மாதத்தில் அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரிச் சென்றவர்களின் தொகை இரண்டாவது தடவையாக ஆயிரத்தை எட்டியுள்ளது.

இதற்கு முன்னர் 2001 ஆம் ஆண்டு டம்பா கலவரத்தில் ஒரு மாதத்தில் ஆயிரம் பேர் வரையில் அகதி அந்தஸ்து கோரி அவுஸ்திரேலியாவில் தஞ்சம் புகுந்தனர்.

இப் படகில் இலங்கை ஆண்கள் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய கடற்படையினர் நடத்திய சோதனையின் பின்னர் அகதிகள் பேருந்தில் ஏற்றப்பட்டதாக தி அவுஸ்திரேலியன் இணையம் செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

## சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு புதிய சட்டம்!

சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு புள்ளிகளை வழங்கும் புதிய சட்டம் ஒன்றை கொண்டு வர மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.எச்.ஹரிச் சந்திரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கலந்துரையாடலின் பின் கொழும்பு மாவட்டத்தில் முதலாவதாக இத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தச் சட்டம் தொடர்பான மாதிரியொன்று முன்வைக்கப்பட்டு அதனை பொலிஸ் திணைக்களத்தில் காட்சிப்படுத்தி அதன் குறைபாடுகள் தீர்க்கப்படவுள்ளன.

புதிய சட்டத்தின் படி 24 புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் சாரதிகளின் அனுமதிப் பத்திரங்களை ஒருவருட காலத்திற்குத் தடை செய்வதற்கான கொள்கை வகுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# விக்கிலீக்ஸ் ஸ்தாபகருக்கு சட்ட உதவி வழங்க தமிழ் ஆலோசகர் முனைப்பு

பிரித்தானியாவின் நீதிமன்றங்களின் தீர்ப்பின்படி சுவீடன் நாட்டுக்கு நாடு கடத்தப்படும் நிலையில் உள்ள சர்ச்சைக்குரிய விக்கிலீக்ஸ் ஸ்தாபகர் யூலியன் எசேன்ச் (வயது 40) 2 இலட்சத்து 40 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்ட்ஸ் பிணையில் விடப்பட்டுள்ளார்.

எனினும்தான் சுவீடனுக்கு கடத்தப்படும் நிலையிலிருந்து விடுபடுவதற்காகவும் பாதுகாப்பு காரணங்களுக்காகவும் பிரித்தானியாவில் உள்ள எக்குவாடோர் தூதரகத்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார்.

மேலும் அவர் தனக்கு சட்ட உதவி தேவைப்படுகிறது என்று பிரித்தானிய பத்திரிகைகள் மூலம் வேண்டுகோள் விடுத்ததையடுத்து பிரித்தானியாவில் குடிவரவு சட்ட நிறுவனம் ஒன்றை நடத்தி வரும் குலேந்திரன் தனது நிறுவனம் மூலம் யூலியனுக்கு சட்ட உதவிகளை இலவசமாக வழங்க முன் வந்துள்ளார்.

தனது விருப்பம் தொடர்பாக பிரித்தானியாவில் உள்ள எக்குவாடோர் தூதரக உயர் அதிகாரிக்கு எழுதியுள்ள கடிதத்தில் யூலியன் எசேன்ச் அகதி கோரிக்கை தொடர்பான விவகாரத்தில் தனது நிறுவனம் சட்ட உதவிகளை வழங்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் யூலியன் எக்குவாடோர் நாட்டின் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தன்னை அமெரிக்காவுக்கு நாடு கடத்தினால் அங்கு தனக்கு மரணதண்டனை வழங்கப்படும் என்று தான் அஞ்சுவதாக குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் முக்கிய தலைவர் தொடர்பான சில இரகசிய குறிப்புகளை தனது விக்கிலீக்ஸ் இணையத்தளத்தில் யூலியன் வெளியிட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சர்வதேச விளையாட்டு பயிற்சிகளை பெறும் முன்னாள் போராளிகள்

(மட்டக்களப்பு)

புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் விளையாட்டு சார் திறனை வெளிக்கொண்டு வருவதற்கும் மேலும் வலுவூட்டுவதற்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுத் துறை அமைச்சு, சிறைச்சாலை மற்றும் புனர்வாழ்வு அமைச்சு, புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பணிமனை ஆகியன இணைந்து மேற்கொள்ளும் இந்நிழ்ச்சித் திட்டம் சுகததாஸ விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

விளையாட்டுத்துறையில் திறமையுள்ள இவ் இளைஞர்களுக்கென நிபுணத்துவம் பெற்ற பயிற்சியாளரர்களால் கட்டமைக்கப்பட்ட விளையாட்டு பயிற்சி திட்டம் நடத்தப்படவுள்ளது.

கரப்பந்து, காற்பந்து, கிரிக்கெட், நீச்சல், கராத்தே, துப்பாக்கிச் சூடு, பாரம் தூக்குதல் மற்றும் பல விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கான பயிற்சிகள் இங்கு வழங்கப்படவுள்ளன.

முழுமையான தகைமை பெற்ற சர்வதேச மற்றும் தேசிய விளையாட்டு பயிற்சியாளர்களால் இவர்கள் ஒவ்வொருக்கும் தனித்தனியாக கவனம் செலுத்தப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வுகளில் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹின்தானந்த அளுத்கமகே, சிறைச்சால்ல மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தர்ஸன ஹெட்டியாராச்சி மற்றும் பல அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (அ-2)

# வவுனியாவில் மாபெரும் சிரமதானம்

(பூந்தோட்டம்)

வவுனியா நகரசபையும் வவுனியா பொலிஸாரும் இணைந்து அண்மையில் மாபெரும் சிரமதானப் பணியினை வவுனியா நகர சபை எல்லைக்குள் மேற்கொண்டிருந்தனர்.

இச்சிரமதானப் பணி பற்றி நகர சபையின் பொது சுகாதார பரிசோதகர் தியாகலிங்கம் தெரிவிக்கையில்,

வவுனியா நகர மக்கள் வீதிகளிலும் வெற்றுக்காணிகளிலும் குப்பைகளை போடுவதை வழக்கமாக்கியுள்ளனர். பல தடவை இது தொடர்பில் விழிப்புணர்வு வழங்கப்பட்ட போதிலும் மக்கள் காலத்திற்கு காலம் தெளிவுற்று செல்லும் நிலை காணப்படுகின்றது.

எனவே, பொலிஸார் மற்றும் நகரசபையினருடன் இணைந்து மேற்கொள்ளப்படும் இச் சிரமதானத்திற்கு பின்னர் வீதிகளில் குப்பைகளை இடுபவர்கள் மற்றும் வீதியையும் சூழலையும் அசுத்தப்படுத்துபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

சுமார் 400 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிவில் பாதுகாப்பு குழுப்பிரதிநிதிகள், நகர சபை ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்ட இந்த சிரமதானப் பணியில் வவுனியாவின் அனைத்து வீதிகளும் துப்புரவு செய்யப்பட்டதுடன் கழிவுகள் உடனடியாக உழவியந்திரங்களில் ஏற்றப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-9-266)




★ 1593-குரொவெசியர்கள் சிசாக் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் துருக்கியர்களை வென்றனர்.

★ 1633-அண்டத்தின் மையம் பூமி அல்ல சூரியன் என்ற தனது அறிவியல் கொள்கையை கலிலியோ கலிலி ரோமின் அரசுப் படைகளின் வற்புறுத்தலின் பேரில் திரும்பப் பெற்றுக் கொண்டார்.

★ 1658-போர்த்துக்கேயரிடம் இருந்து ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர்.

★ 1783-ஐஸ்லாந்தின் லாக்கி எரிமலையிலிருந்து வெளியேறிய நச்சுவளி பிரான்சின் ல ஹாவ்ரா நகரைத் தாக்கியது.

★ 1812-முதலாம் நெப்போலியன் ரஷ்யாவின் மீது போரை அறிவித்து முற்றுகையிட்டான்.

★ 1815-நெப்போலியன் பொனபார்ட் இரண்டாம் தடவையாக பதவியிழந்தான். 4 வயதான இரண்டாம் நெப்போலியன் இரண்டு வாரங்களுக்கு ஆட்சியில் அமர்ந்தான்.

★ 1825-பிரித்தானிய நாடாளுமன்றம் நிலமானிய முறையை நீக்கியது.

★ 1848-பாரிசில் தொழிலாளர்களின் ஜூன் நாட்களின் எழுச்சி ஆரம்பமாயிற்று. ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

★ 1866-ஆஸ்திரிய- புரூசிய போரில் ஆஸ்திரிய இராணுவம் இத்தாலிய இராணுவத்தைத் தோற்கடித்தது.

★ 1893-காம்பர்டவுன் என்ற ரோயல் கடற்படைக் கப்பல் ஒன்று விக்டோரியா என்ற பிரித்தானிய மத்தியதரைக் கடற்படைக் கப்பலுடன் மோதியதில் 358 மாலுமிகள் உயிரிழந்தனர்.

★ 1898-ஸ்பானிய- அமெரிக்கப் போர்: அமெரிக்கக் கடற்படையினர் கியூபாவில் தரையிறங்கினர்.

★ 1911-ஐந்தாம் ஜோர்ஜ் ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடிசூடினான்.

★ 1940-இரண்டாம் உலகப் போர்: பிரான்ஸ் கட்டாயமாக நாசி ஜேர்மனியுடன் அமைதி உடன்பாட்டுக்கு ஒப்புக் கொண்டது.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனிப் படையினர் சோவியத் ஒன்றியத்தை முற்றுகையிட்டனர்.

★ 1941-சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிரான லித்துவேனியாவின் விடுதலைப் போர் ஆரம்பமானது.

★ 1962-எயார் பிரான்சின் போயிங் விமானம் மேற்கிந்தியத் தீவுகளில் கௌதலூபே தீவில் விபத்துக்குள்ளாகியதில் 113 பேர் உயிரிழந்தனர்.

★ 1976-கனடாவில் மரணதண்டனை வழங்கப்படுவது நிறுத்தப்பட்டது.

★ 1978-புளூட்டோவின் சாரண் என்ற துணைக்கோள் கண்டுபிடிக்கப்பட்டது.

★ 1986-மெக்சிக்கோவில் இடம் பெற்ற உலகப்கோப்பை காற்பந்தாட்டப் போட்டியில் ஆர்ஜென்டீனிய வீரர் மரடோனா நூற்றாண்டுக்கான கோலைப் போட்டார்.

★ 2002-மேற்கு ஈரானில் இடம் பெற்ற 6.5 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 261 பேர் உயிரிழந்தனர்.


### பிறப்புக்கள்

★ 1962-க்ளைட் ட்ரெக்ஸ்லர், முன்னாள் அமெரிக்கக் கூடைப் பந்து ஆட்டக்காரர்

★ 1964-டான் ப்ரவுன், ஆங்கில எழுத்தாளர்

### இறப்பு

★ 1990-ஈலியா பிராங்க், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய இயற்பியலாளர் (பி.1908)



★ 1974-தென்னிந்திய நடிகர் விஜயின் பிறந்த தினம்

# உங்கள் கணனியில் நண்பரின் கணனியை இயக்க முடியுமா?




உங்கள் கணனியில் அமர்ந்து கொண்டே எங்கோ இருக்கும் உங்கள் நண்பரின் கணனியை இயக்க முடியுமா? முடியும் என்ற வார்த்தையை பதிலாய் சொல்லுவதை விட Team Viewer என்று பதில் சொல்லலாம். ஆம் Remote Control வசதியை முழுக்க முழுக்க இலவசமாக வழங்கும் Team Viewer மென்பொருள் பற்றி இன்று பார்ப்போம்.

மேலே சொன்னது போல உங்கள் நண்பரின் கணனி அல்லது உங்கள் வீட்டு / அலுவலக கணனி போன்றவற்றை நீங்கள் இருந்த இடத்தில் இருந்தே இணைய இணைப்பின் மூலம் இயக்க வைக்கும் மென்பொருள் தான் இது. Remote Control வசதி மூலம் குறிப்பிட்ட கணனியில் இருக்கும் பிரச்சினைகளை நீங்கள் சரி செய்ய முடியும். அந்தக் கணனியில் உள்ள மென்பொருட்களை இயக்க முடியும்.

இதை தரவிறக்க இங்கே Team Viewer 7.0 க்கு செல்லவும். பின்னர் இதை இன்ஸ்டோல் செய்து கொள்ளவும். இன்ஸ்டோல் செய்யும் போது Non -Commercial Use என்பதை தெரிவு செய்யவும்.

### எப்படி இதை பயன்படுத்துவது?

Install செய்த நண்பர்கள் உங்கள் கணனியில் Team Viewer ஐ ஓபன் செய்யவும். மேலே படத்தில் உள்ளது போல உங்களுக்கென ID& Password கொடுக்கப்பட்டு இருக்கும். அதை நீங்கள் உங்கள் நண்பருக்கு தந்தால் அவர் இணைய இணைப்பில் உள்ள உங்கள் கணனியை இணைய இணைப்பு உள்ள அவரது கணனியில் இருந்து Access செய்ய இயலும்.

நீங்கள் Access செய்ய வேண்டும் என்றாலும் உங்கள் நண்பரின் இந்த தகவல்களை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். உங்கள் நண்பர் கணனியின் ID தெரிந்தால் அதை Partner ID என்ற இடத்தில் கொடுத்து Connect To Partner என்று கொடுக்க வேண்டும். இப்போது வரும் குட்டி விண்டோல் அவரது Password வி ஐ தர வேண்டும். இப்போது உங்கள் நண்பரின் கணனி உங்கள் கண் முன் விரியும்.

இதில் இரண்டு வசதிகள் உள்ளன என்று சொல்லி இருந்தேன். இரண்டாவது File Transfer என்பது File களை Transfer செய்ய என்றும் சொல்லி இருந்தேன். இந்த File Transfer வசதி மூலம் நீங்கள் Access செய்யும் கணனியில் இருக்கும் உங்களுக்கு / அவருக்கு தேவைப்படும் File களை நீங்கள் / அவர் நேரடியாக உங்கள் / தனிப்பட்ட கணனிக்கு எடுத்துக் கொள்ள முடியும்.

உங்கள் தனிப்பட்ட பயன்பாடுகளுக்கு இது இலவசம். உங்கள் Password ஐ மாற்ற Team viewer ஓபன் செய்து Refresh போன்ற பட்டன் (Password க்கு அடுத்து) கிளிக் செய்து வைக்கலாம். சில நேரங்களில் நீங்களே தொடர்பு கொள்ள வேண்டி இருக்கலாம். மாறும் Password வேண்டாம். நினைவில் உள்ள மாதிரி நீங்களே வைத்துக் கொள்ள அதே பட்டனில் Set Predefined Password) என்பதில் இதை நீங்கள் செய்யலாம்.

இனி உங்கள் கணனியில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டும். உங்களுக்கு தெரியவில்லை என்றால் உங்கள் நண்பர் ஒருவரை இதன் மூலமே செயற்பட வைக்க முடியும்.




இதில் முக்கியமான விடயம் உங்கள் கணனியை உங்கள் நண்பர் Access செய்யும் போது அதை நீங்கள் பார்க்க முடியும். அவர் ஓபன் செய்யும் ஒவ்வொன்றும் உங்கள் கணனி திரையில் தெரியும். எனவே பாதுகாப்பு பற்றி கவலைப்பட தேவை இல்லை. இருப்பினும் நம்பிக்கையான நபரை மட்டும் இதுபோன்ற செயல்களை செய்ய அனுமதியுங்கள்.

# குரூப் பிரச்சினையா? இதோ ஒரு வழி

facebook | join our group +

இளைய சமுதாயத்தையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் பேஸ்புக்கில் உள்ள பயனுள்ள வசதிகளில் ஒன்று பேஸ்புக் குரூப் வசதி. இந்த வசதியின் மூலமும் நண்பர்கள் ஒன்றாக இணைந்து தங்களுக்குள் கருத்துக்கள்ள பரிமாறிக் கொள்ளலாம்.

ஆனால், நாளடைவில் நீங்கள் பேஸ்புக் இந்தக் குரூப்பில் அப்டேட்களை விரும்பா விட்டாலும் நீங்கள் அந்த குழுமத்தில் இருந்து விலகாதவரை அந்த குழுமத்தின் அப்டேட்ஸ் தொடர்ந்து உங்களுக்கு வந்து கொண்டே இருக்கும்.

இதனால் சில முக்கிய அப்டேட்ஸ்களையும் தவற விட்டு விடுவோம். இந்த பிரச்சினையை நீக்க அந்த பேஸ்புக் குழுமத்தில் இருந்து விலகுவதுதான் நல்லது.

இதற்கு முதலில் பேஸ்புக் தளத்திற்குச் சென்று உங்களுக்கு வேண்டாத பேஸ்புக் குரூப்பை ஓபன் செய்து கொள்ளுங்கள்.

அதில் வலது பக்கத்தில் settings பட்டனை அழுத்தினால் ஒரு மெனு ஓபன் ஆகும். அதில் உள்ள leave Group என்பதை அழுத்தவும்.

அடுத்துவரும் விண்டோவில் leave Group என்ற பட்டனை அழுத்தினால் நீங்கள் அந்த குழுமத்தில் இருந்து விலக்கப்படுவீர்கள்.

இனி அந்த குழுமத்தின் எந்த அப்டேட்ஸ்ம் உங்களுக்கு வராது. இனி அந்த குழுமத்தில் இருப்பவர்கள் உங்களை உறுப்பினராக சேர்க்க முடியாது. ஆனால், நீங்கள் நினைத்தால் எப்பொழுது வேண்டுமானாலும் இந்த குழுமத்தில் மறுபடியும் சேர்ந்து கொள்ளலாம்.

# இன்டர்நெட் எக்ஸ்புளோரரை முந்தியது கூகுள் குரோம்

Google Chrome

இணைய உலாவிகளில் அதிகம் பயன்படுத்தப்படுவதில் இது வரை இன்டர்நெட் எக்ஸ்புளோரர் தான் முதலிடத்தில் இருந்தது.

ஆனால், அண்மையில் ஸ்டார் கவுண்டர் என்ற அமைப்பு எடுத்த கணக்கெடுப்பின்படி குரோம் பிரவுசர் முதல் இடத்திற்கு வந்துள்ளது.

மேமாத இறுதியில் குரோம் பிரவுசர் பயன்பாடு 32.8% ஆகவும் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பயன்பாடு 31.9% ஆகவும் இருந்தது.

தற்போது தொடர்ந்து ஒரு வாரம் அதுவே அதிகம் பயன்படுத்தப்படுவது தெரியவந்துள்ளது.

பயர்பொக்ஸ் 25.5% பங்குடன் மூன்றாவது இடத்திலும் ஆப்பிள் நிறுவனத்தின் சபாரி மற்றும் ஆப்பரா அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.

# Screen Camera

பலீ சந்தர்ப்பங்களில் எமது கணனியில் ஆற்றப்படும் வேலைகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படலாம். இதற்கு பல்வேறு மென்பொருட்கள் காணப்படுகின்றன.

எனினும் Screen Camera 3.0.4 எனும் இலவச மென்பொருள் புதிதாக வெளியிடப்பட்டிருக்கின்றது. இம் மென்பொருள் மூலம் கணனியின் டெஸ்டொப்பை வெப் கமரா மூலம் விரும்பியவர்களுடன் நேரடியாகப் பகிர்ந்து கொள்ள முடியும். தவிர குறித்த கணனியில் மேற்கொள்ளப்படும் வேறு செயற்பாடுகளையும் வீடியோ பதிவாகவும் புகைப்பட பதிவாகவும் சேமித்து பயன்படுத்த முடியும் என்பது விசேட அம்சமாகும்.

# புதிய பதிப்பு skype 4.0

லினக்ஸ் இயங்கு தளத்தை பயன்படுத்தும் நபர்களுக்காக நீண்ட நாட்களுக்கு பின்னர் Skype 4.0 என்ற புதிய பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஸ்கைப் நிறுவனத்தை மைக்ரோசொப்ட் வாங்கிய பின்னர் இனி லினக்ஸ் பயனாளிகள் ஸ்கீகப் மென்பொருளை உபயோகிக்க முடியாது என்றும் இந்த சேவையை விரைவில் நிறுத்தி விடும் என்றும் தகவல்கள் வெளியானது. இதற்கு ஏற்றாற் போல் எந்தவித புதிய தொகுப்பும் வெளியிடப்படாமல் இருந்தது.

இந்நிலையில் லினக்ஸ் பயனாளர்களுக்காக புதிய மாற்றங்களுடன் Skype 4.0 என்ற புதிய பதிப்பை வெளியிட்டுள்ளது மைக்ரோசொப்ட் நிறுவனம். அதில் உள்ள புதிய அம்சங்கள்:

New Conversations View, New Call View, Better call quality, Improved Video call quality, Improved chat synchronization, New Presence and emoticon icons, Store and view phone numbers in a skype contacts profile இந்த புதிய பதிப்பை உபயோகிக்க 1GHz processor, 256 MB RAM, and 100 MB இருந்தால் போதும்.

தரவிறக்கு முகவரி:

**http://www.skype.com/intl/en/get-skype/on-your-computer/linux/**

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 165

மார்ச் 25 ஆம் திகதி இரவு 53-வது மற்றும் 7-வது கார்டு படைகளின் முன்னணி பட்டாலியன்கள் எதிரி எதிர்பாரா விதமாக- 17 கி.மீ. நீளமுள்ள போர்முனையில் வெள்ளப் பெருக் கெடுத்தோடிய கிரோன் ஆற்றைக் கடந்து ஒருசில தாக்கு முனைகளைக் கைப்பற்றின. தாக்குதலின் முதல் நாளன்றே படைகளின் பிரதான சக்திகள் இங்கு அனுப்பப்பட்டன. மார்ச் 26 ஆம் திகதி பிளவினுள் அனுப்பப்பட்ட ஜெனரல் பிளீயெவின் குதிரைப்படை- இயந்திரப்படை பிரிவு எதிரி தற்காப்பின் ஆழத்தினுள் துணிவுடனும் உறுதியாகவும் முன்னேற ஆரம்பித்தது. மார்ச் 28 ஆம் திகதிவாக்கிலேயே பிளவு 150 கி.மீ. நீளம் வரையிலும் 40 கி.மீ. ஆழத்திற்கும் விரிவாக்கப்பட்டது.


மேற்கொண்டு நடந்த கடுமையான சண்டைகளின்போது துருப்புகள் எதிரியினுடைய பெரும் படைத்திரட்டின் எதிர்ப்பைச் சமாளித்து அதற்குப் பெரும் தோல்வியை ஏற்படுத்தின; பிராதிஸ்லாவா முன்நின்றது. எதிரி இதன் தற்காப்பிற்கான பரிபூரண ஏற்பாடுகளில் இறங்கியிருந்தான்.

நகரத்தை அழிவிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு இதைவிட மேற்கிலிருந்து சுற்றிச் செல்லுமாறு சோவியத் யூனியனின் மார்ஷல் மலினோவ்ஸ்கிய் கட்டளையிட்டார். சுற்றி வளைக்கப்படும் அபாயத்தின் கீழ் எதிரி பின்வாங்க ஆரம்பித்தான்.



இரவு நேரத்தில் கடைமையாற்றும் சோவியத் குண்டுவீச்சு விமானிகள் ரெஜிமென்ட்

ஏப்ரல் 4 ஆம் திகதி 7-வது கார்டு படையின் துருப்புகள் ஜெனரல் ஷுமிலவின் தலைமையில், ரியர் அட்மிரல் ஹாலாஸ்தியாக்கோவின் துனாய் இராணுவ ப்ளீட்டின் உதவியோடு கூட ஸ்லொவாக்கியாவின் தலைநகரமாகிய பிராதிஸ்லாவை விடுவித்தன. பாசிஸ்டுகள் மொராவா ஆற்றிற்குப்பின்னால் சென்றனர். வியென்னா பிரதேசத்திலிருந்து 6-வது எஸ்.எஸ் டாங்கிப் படை உடனடியாக இங்கு அனுப்பப்பட்டது. ஆனால், சோவியத் துருப்புகளின் தாக்குதல் வேகத்தை எதனாலும் தடுத்து நிறுத்த இயலவில்லை. ஏப்ரல் 12-ஆம் திகதி மொராவா தற்காப்பு எல்லை பிளக்கப்பட்டது. 2-வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் முன்னேறி, அளவிலும் முக்கியத்துவத்திலும் இரண்டாவது பெரிய செக்கோஸ்லொவாக்கியத் தொழிற்துறை மையமாகிய பிர்னோவை விடுவிப்பதில் இறங்கின. ஏப்ரல் 23 ஆம் திகதி நகரத்தின் நுழைவாயில்களில் கடுமையான சண்டைகள் மூண்டன. இங்கே எதிரி பலமான தற்காப்பை ஏற்படுத்தியிருந்த தோடு கூட மற்ற பகுதிகளிலிருந்து 6 டிவிசன்களை இங்கு அனுப்பியிருந்தான். நகரத்தை எல்லா பக்கங்களிலும் மாகச் சுற்றிவளைத்த சோவியத் துருப்புகள் ஏப்ரல் 25 ஆம் திகதி தாக்குதலைத் தொடங்கின. எதிரியால் தாக்குப்பிடிக்க இயலவில்லை. அன்றே எதிரி முறியடிக்கப்பட்டான். முன்போன்றே நகரவாசிகள் சோவியத் துருப்புகளுக்குக் கணிசமான உதவி நல்கினர்.



சோவியத் மார்ஷல் ஜுக்கவ்

## பாசிச ஜேர்மனியின் முறியடிப்பு முற்றுப்பெறுதல்




அமெரிக்க ஜெனரல் பாற்றன்

பிர்னோவிலும் சுற்றிலுமிருந்த கிராமங்களிலும் விடுதலை வந்த உடனேயே தேசியக் கமிட்டிகள் தோற்றுவிக்கப்படலாயின. இவை சமாதான வாழ்வை புனரமைத்தன. நகரம் மிக மோசமான நிலையிலிருந்தது: தண்ணீரும் மின் வசதியும் இருக்கவில்லை. உணவுப்பொருட்களும் மருந்துகளும் போதவில்லை. சமூக வாழ்க்கைக்கு அவசியமான எல்லாவற்றையும் நகர மக்களுக்கு வழங்கி சோவியத் படைத் தலைமை உடனடி உதவியளித்தது.

ஏப்ரல் 27 ஆம் திகதி 2-வது உக்ரேனிய சேனையின் 6-வது கார்டு டாங்கிப் படை மற்றும் 53-வது படை ஆகியவற்றைக் கொண்டு, முன்னேறிக் கொண்டிருந்த 4-வது உக்ரேனிய சேனையின் துருப்புகளை நோக்கி, 1-வது பாசிச ஜேர்மனியப் படையின் பக்கவாட்டி லும் பின் னணியிலுமாக ஒலோமோ வுஸ்த் மீது தாக்குதல் தொடுக் கப்பட்டது. சுற்றி வளைக்கப்படும் அபாயம் அவசர அவசரமாக பின்வாங்குமாறு எதிரியைக் கட்டாயப்படுத்தியது.

கிட்டத்தட்ட ஒன்றரை மாத சண்டைகளின் பயனாய் 2-வது உக்ரேனிய சேனையின் துருப்புகள் 200 கி.மீ. தூரம் முன்னேறி எதிரியின் 9 டிவிசன்களை முறியடித்தன. ஸ்லொவாக்கியா முழுவதுமாக விடுவிக்கப்பட்டது; பிராதிஸ்லாவா மற்றும் பிர்னோ தொழிற்துறை பிரதேசங்கள், செக்கோஸ்லொவாக்கிய மக்களுக்கு திருப்பியளிக்கப்பட்டன. செக்கோஸ்லொவாக்கியாவின் மத்தியப் பிரதேசங்களுக்கான பாதை சோவியத் துருப்புகளுக்குத் திறந்து விடப்பட்டது.

மொராவ்ஸ்க- அஸ்த்ராவா நட வடிக்கையைப் போன்றே பிராத்ஸ் லாவா- பிர்னோ நடவடிக்கையும் செக்கோஸ்லொவாக்கியாவின் தலை நகரமாகிய பிரேக் உட்பட நாட்டின் எஞ்சிய பகுதி முழுவதையும் விடுவிப் பதற்கு அனுகூலமான சூழ்நிலைகளைத் தோற்றுவித்தது.



இயந்திரத்துப்பாக்கியுடன் சோவியத் வீராங்கனை

சோவியத் துருப்புகள் மேற்கு நோக்கி முனைப்போடு முன்னேறியதால் உந்தித் தள்ளப்பட்ட அமெரிக்க, பிரிட்டிஷ் ஆளும் வட்டங்கள், ஜேர்மனியப் படைகளின் சரணடைவை ஏற்றுக் கொள்வதற்காகவும் பிரேக் நகரத்தைக் கைப்பற்ற முறலுவதற்காகவும் தமது துருப்புகளை செக்கோஸ்லொவாக்கியாவினுள் அனுப்ப முடிவு செய்தன. குறிப்பாக சர்ச்சில் இதை வற்புறுத்தினார். ஏப்ரல் 30 ஆம் திகதி ட்ருமனுக்கு அனுப்பிய தந்தியில் அவர் இயன்றவரை விரைவாக பிரேக்கை கைப்பற்றுமாறும் இயன்றளவு அதிக மேற்கு செக்கோஸ்லொவாக்கியப் பரப்பைப் பிடிக்குமாறும் கோரினார்.

மே ஆரம்பத்தில் ஜெனரல் பாட்டனின் 3-வது அமெரிக்கப் படை செக்கோஸ்லொவாக்கியப் பரப்பினுள் நுழைந்தது. இப்படை பிடித்த நகரங்களில் உதாரணமாக பெல்சேனில், தேசியக் கமிட்டிகள் கலைக்கப்பட்டன. ஜேர்மனியர்களோடு ஒத்துழைத்த செக்கோஸ்லொவாக்கியர்களுடன் சேர்ந்து ஆக்கிரமிப்பு ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. பெல்சேனில் அமெரிக்கத் துருப்புகள் புகும் முன் நகரம் குண்டு வீச்சிற்கு உள்ளாக்கப்பட்டது. இதில் நகரிலிருந்த வீடுகளில் மூன்றில் இரண்டு பகுதி அழிக்கப்பட்டது. பெருத்த சேதமேற்பட்டது.

(தொடரும்)

# அரசின் பாதகச் செயல்களை இனிமேல் மூடிமறைக்க முடியாது

## ஐ.தே.க. எச்சரிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் அரச ஆதரவில் அரங்கேற்றப்பட்டு வருகின்ற கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பில் சர்வதேசம் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. தமது அராஜக செயல்களை அரசு இனிமேலும் மூடி மறைக்க முடியாது.**

இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்த நாயக்க.

ஆயுதத்தை கையிலெடுத்து அடக்கு முறை செய்வதன் மூலம் நாட்டில் ஏகாதிபத்திய ஆட்சியை நிலைநிறுத்த அரசு முயற்சிக்கின்றதெனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குற்றச்செயல்கள் புரியும் பாதாளக் கொள்ளையர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் அரசு சட்டத்தை கையில் எடுத்துச் செயற்பட முயற்சிக்கின்றது. இந்நிலை நீடித்தால் நாடு அதல பாதாளத்திற்குள்ளே தள்ளப்படும். இதை நாம் ஒரு போதும் அனுமதிக்க கூடாது. இந்த நிலைமையை மாற்றியமைக்க மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து மாபெரும் சக்தியாக உருவெடுத்து நாட்டில் ஜனநாயகத்தை நிலைநிறுத்த வேண்டும்.

அரசால் நாட்டில் அரங்கேற்றப்பட்டு வருகின்ற அராஜகச் செயல்களை அரசிலுள்ள பங்காளிக் கட்சிகள் நன்கு அறிந்து வைத்துள்ளன. இருந்த போதிலும் அரசை எதிர்த்து பேச அவை முன்வர மறுக்கின்றன. அரசின் அராஜகங்களை தட்டிக்கேட்காது வாய்மூடிக் கொண்டு தம்மை பாதுகாத்து கொள்கின்றன.

தம்மை பாதுகாத்து கொள்ள முயற்சிக்கும் அரசிலுள்ள பங்காளிக்கட்சிகள் மக்களின் பாதுகாப்பு நலன் குறித்தும் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (எ-11)

## நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்ப்பாண நிலையத்தினால் நடத்தப்படும் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கை நெறி தரம் 1 (2012/2013) கற்கை நெறிக்கான வகுப்புக்கள் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

மேற்படி வகுப்புக்கள் யா/ இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறுமென இலங்கை நூலகச் சங்க யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார். (அ-9)

## அத்தியாவசியப் பொருட்களுக்கான இறக்குமதி வரிகள் உயர்வடைகின்றன

(கொழும்பு)

அத்தியாவசிய பொருட்களுக்கான இறக்குமதி வரிகள் உயர்த்தப்பட்டுள்ளன. அந்த வகையில் உருளைக்கிழங்கு, சீனி, வெங்காயம் உள்ளிட்ட பல்வேறு முக்கியமான உணவுப் பொருட்களுக்கான விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசிய பொருட்களுக்கான இறக்குமதி வரி கடந்த 12 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஒரு கிலோகிராம் சீனியின் இறக்குமதி வரி 10 ரூபாவினாலும் ஒரு கிலோகிராம் சமன் டின் மீனின் இறக்குமதி வரி 85 ரூபாவினாலும் ஒரு கிலோ கிராம் நெத்தலியின் இறக்குமதி வரி 30 ரூபாவினாலும் உயர்த்தப்பட்டுள்ளது.

ஒரு கிலோ உருளைக்கிழங்கிற்கான இறக்குமதி வரி 30 ரூபாவினாலும் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் இறக்குமதி வரி 35 ரூபாவினாலும் ஒரு கிலோ சிறிய வெங்காயத்தின் இறக்குமதி வரி 25 ரூபாவினாலும் ஒரு கிலோ வெள்ளைப்பூண்டின் இறக்குமதி வரி 40 ரூபாவினாலும் உயர்த்தப்பட்டுள்ளது.ஒரு கிலோ மாசியின் இறக்குமதி வரி 250 ரூபாவினாலும் ஒரு கிலோ கருவாட்டின் இறக்குமதி வரி 100 ரூபாவினாலும் உயர்த்தப்பட்டுள்ளது. (அ-2)

## அழிவடைந்து வருகிறது அல்லிராணி கோட்டை

### மன்னார் மக்கள் கவலை

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் அரிப்புக் கிராமத்தில் அமைந்துள்ள அல்லிராணி கோட்டை பராமரிப்பின்றியும் கடலரிப்பாலும் அழிவடைந்து வருவதாக மன்னார் மக்கள் கவலை வெயியிட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் பிரசித்தி பெற்றதும் சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவரும் விதத்தில் அமைந்ததுமான அரிப்புக் கிராமத்தில் பழைமை வாய்ந்த அல்லிராணி கோட்டை காணப்படுகிறது.

கடற்கரையோரத்தில் அமைக்கப்பட்ட இந்த அல்லிராணி கோட்டை இராவணன் காலத்தில் கட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.


இத்தகைய பெருமை வாய்ந்த அல்லிரா'ணி கோட்டை தற்போது கடலரிப்புக்கு உள்ளாகியுள்ள நிலையில் காணப்படுகின்றது. இதனைப் பார்ப்பதற்கு மிகவும் வேதனையளிப்பதாகப் பலர் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தின் பெருமையையும் சரித்திர சிறப்புக்களையும் காட்டி நிற்கும் இந்த அல்லிராணி கோட்டையைப் பாதுகாத்துப் பராமரிக்க வேண்டியது உரியவர்களின் தலையாய பணியாகும்.

கடந்த யுத்த காலத்தில் கூட இந்தக் கோட்டை பராமரிக்கப்பட்டு வந்தது. ஆனால், தற்போது பராமரிக்கப்படுவதில்லை. கடந்த கால வரலாற்றைக் கூறும் ஞாபகச் சின்னங்கள் பல வடக்கில் குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் காணப்படுகின்றன.

இந்தக் கோட்டை செங்கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. இதனைப் பார்வையிடுவதற்குத் தென்பகுதியில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் பலர் தினமும் வந்து செல்கின்றனர்.

எனவே, அழிவடையும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த அல்லிராணி கோட்டையைப் பராமரிக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-2)



இலங்கை தேசிய பார்வையற்றோர் சம்மேளனம் வெளியிட்ட கலாபூசணம் நாவற்குழியூர் சு.சிவராஜா எழுதிய *சிறகு விரிக்காத பறவைகள்* என்ற சிறுகதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் ரிமர் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் சமூகவியல் பேராசிரியருமான என். சண்முகலிங்கன் நூலாசிரியரை பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் தேசிய பார்வையற்றோர் சம்மேளனத்தின் வடமாகாணத் தலைவர் கு.தர்மசேகரம் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## வானொலி நாடக ஒலிபரப்பு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலை, ஒஸ்மானியாக்கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் எழுதி மூத்த வானொலிக் கலைஞர்களுடன் இணைந்து நடித்த பத்து வானொலி நாடகங்கள் யாழ். சேவையில் ஒலிபரப்பப்படவுள்ளன.

வானொலி நாடக ஒலிபரப்பு எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஜூலை மாதம் 5 ஆம் திகதி வியாழக் கிழமை வரை பிற்பகல் 6.30 தொடக்கம் 7 மணிவரை அலைவரிசை எவ்.எம். 92.2 மற்றும் எவ்.எம். 102.0 ஆகியவற்றில் தினமும் ஒலிபரப்புச் செய்யப்படும்.

வானொலி நாடகத்தினை கேட்டு தங்களின் மனப்பதிவுகளை சுருக்கமாக பின்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு 0757171124 எஸ். எம்.எஸ். செய்யுங்கள். தொடர்ந்து பத்து நாடகங்கள் பற்றி மனப்பதிவுகளை எஸ்.எம்.எஸ். செய்யும் அதிர்ஷ்டசாலிகளுக்கு 20 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் பரிசாக வழங்கப்படும்.

தபால் மூலம் விமர்சனங்களை எழுதி அனுப்ப விரும்பியோர் இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றம், (SDJF)8/5 லியனகே மாவத்தை, நாவல ராஜகிரிய என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும். மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ள விரும்புவோர் info@idjf.org என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும் என யாழ். மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே. ஈழவேந்தன் அறிவித்துள்ளார். (அ)

## காசநோய், எயிட்ஸ், மலேரியாவை கட்டுப்படுத்த விசேட வேலைத்திட்டம்

(கொழும்பு)

ஆசிய வலயத்தில் இருந்து காசநோய், மலேரியா, எயிட்ஸ் ஆகியவற்றை இல்லாதொழிப்பது தொடர்பில் பூகோள நிதியத்தின் உதவியைப் பெற்றுக் கொள்வது குறித்து இலங்கையில் இப்பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் நடத்தப்பட்டுள்ளது.

இதில் பங்களாதேஷ், பூட்டான், கொரியா, இந்தியா, இந்தோனேசியா, மாலைதீவு, மியன்மார், நேபாளம், தாய்லாந்து மற்றும் தீமோர் ஆகிய நாட்டு சுகாதார செயலாளர்கள் பங்கு பற்றியுள்ளனர்.

இம் மாநாட்டில் கலந்த கொள்ளும் சந்தர்ப்பம் எதிர்வரும் 2 வருடங்களில் இலங்கைக்கு கிடைக்கவுள்ள நிலையில், செயலாளர் பதவி சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் பாலித மஹீபாலவிற்கு கிடைக்கப் பெறவுள்ளது.

ஆசிய வலயத்தில் தற்போது 5 மில்லியன் காச நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு 3.5 மில்லியன் எயிட்ஸ் நோயாளர்களும் 13 மில்லியன் மலோரியா நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் ஆசிய நாடுகளின் விசேட வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும் என சுகாதார செயலாளர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# ஹெரோயினுடன் நால்வர் கைது

தமிழ்நாட்டின் நாகபட்டிணம், வேதராண்யம் பகுதியில் இருந்து இலங்கைக்கு ஒரு கிலோகிராம் ஹெரோயினை கடத்த முற்பட்ட சம்பவம் தொடர்பில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் கைதான அவர்களுள் இலங்கையர் ஒருவரும் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமிழக விசாரணைகள் பிரிவு பொலிஸாரின் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலின்படி அவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் தற்போது காஞ்சிபுரத்தில் வைத்து விசாரணை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட போதைப் பொருட்களின் சந்தைப் பெறுமதி 2 கோடி இந்திய ரூபாய்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# புகலிடக்கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்படுவதற்கு எதிர்ப்பு

## யூ.என்.எச்.சீ.ஆர் அறிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் வசிக்கும் பதிவு செய்யப்பட்ட அகதிகள் மற்றும் புகலிடக்கோரிக்கையாளர்களை இலங்கை நாடு கடத்துமானால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுமென ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.**

14 நாட்களுக்குள் நாட்டை விட்டு வெளியேற வேண்டுமெனவும் அல்லாவிடின் நாடு கடத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட நேரிடுமெனவும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினால் தங்களுக்கு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக நாட்டில் பதிவுகளை மேற்கொண்ட அகதிகளில் பலர் மற்றும் புகலிடக்கோரிக்கையாளர்களிடமிருந்தும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் உறவு அதிகாரி சுலக்ஷ்னி பெரேரா கூறியுள்ளார்.

விசா முடிவடைந்தமையே அண்மைய நாடு கடத்தலுக்கான காரணமென அக்கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அகதிகள் மற்றும் புகலிடம்கோருவோரை திருப்பியனுப்புவது உயிருக்கு அல்லது சுதந்திரத்திற்கு ஆபத்துள்ள இடங்களுக்கு புகலிடம் கோருவோரை திருப்பியனுப்புவதை தடை செய்யும் சர்வதேச சட்டத்திற்கு முரணானதாக அமையுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு நாடு கடத்துவது ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் அரசாங்கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தையும் வெளிவிவகார அமைச்சுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தையும் மீறுவதாகும்.

இந்த ஒப்பந்தங்களின் காரணமாகத்தான் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தால் இலங்கையில் மனிதாபிமான உதவித் திட்டங்களை அமுல்படுத்தவும் புகலிடம் கோருவோர் மற்றும் அகதிகளுக்கான சான்றிதழ் வழங்கவும் முடிகின்றதென ஒரு உயர்ஸ்தானிகர் அதிகாரி கூறினார்.

நாடு கடத்தல் அறிவித்தலை இரத்து செய்து அடைக்கலம் கோருவோரை திருப்பியனுப்புவதை நிறுத்துவதற்காக உரிய அதிகார பீடங்களுடன் பேசவுள்ளதாக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் கூறியுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிவதற்காக வெளிவிவகார அமைச்சுடன் தொடர்பு கொள்ள மேற்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லை (அ-2)




கிளிநொச்சியில் 20 பாடசாலைகளுக்கு தொலைக்காட்சிப்பெட்டி வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் தொலைக்காட்சிபெட்டிக்கான ஆவணத்தை கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன மாணவிக்கு வழங்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.

# ஹஜ் யாத்திரிகர்களிடம் முற்பணம் பெறுவது முறையற்ற செயற்பாடு

## சுற்றாடல்துறை பதில் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் சமய விவகார திணைக்களத்தினால் ஹஜ் யாத்திரிகர்களிடம் முற்பணம் பெறுவது முறையற்ற செயற்பாடாகும் என ஹஜ் குழுவின் இணைத்தலைவரும் சுற்றாடதுறை பதில் அமைச்சருமான அப்துல் காதர் தெரிவித்துள்ளார்.

யாத்திரிகர்களிடம் பணம் வசூலிப்பதற்கு முஸ்லிம் சமய விவகார திணைக்களம் ஒரு வர்த்தக நிறுவனம் அல்ல எனவும் இதற்கு வருத்தம் தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பண வசூலிப்பிற்கு ஹஜ் ஏற்பாட்டு குழு பொறுப்பு கூற முடியாது. ஆனால் யாத்திரிகள் பிரச்சினை ஏற்படாதிருப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக பதில் அமைச்சர் காதர் கூறியுள்ளார்.

ஹஜ் கடமையை கண்காணிப்பதற்கான இலங்கை ஹஜ் குழுவின் இணைத்தலைவராக தன்னை தவிர வேறு யாரையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கவில்லை என ஹஜ் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக புனித மக்கா நகர் சென்று நாடு திரும்பிய, நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதமர் தி.மு ஜயரட்னவின் கடிதத்தை சவுதி அரேபிய ஹஜ் விவகார அமைச்சின் செயலாளர் பைஸால் பின் அப்துல் அஸீஸ் அல் பிஜானிடம் ஜித்தா நகரில் வைத்து கையளித்த போது 2012 ஆம் ஆண்டு 6 ஆயிரம் ஹஜ் கோட்டாவை வழங்குமாறு தான் கோரிக்கை விடுத்ததாக பதில் அமைச்சர் காதர் குறிப்பிட்டார்.

புனித ஹஜ் காலத்தில் இலங்கை யாத்திரிகர்கள் புனித மக்கா நகர் செல்வதற்காக குறைந்தது 10 விசேட விமான சேவையினை ஏற்படுத்துமாறு ஏயர்லைன்சிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# வர்த்தகரின் வீட்டில் பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் திருட்டு

## குருமன்காட்டில் சம்பவம்

(பூந்தோட்டம்)

வவுனியா குருமன்காட்டில் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் கடந்த 19 ஆம் திகதி அதிகாலை திருடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

வற்றாப்பளை கோவில் திருவிழாவுக்குச் சென்று வீடு திரும்பியவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளையிலேயே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றதாக சம்பவத்தில் பாதிப்படைந்த வர்த்தகர் தெரிவித்தார்.

பல இலட்சம் பெறுமதியான நகைகள் மற்றும் பணம் என்பனவே திருடப்பட்டுள்ளதாகவும் வீட்டின் முன் கதவு வழியாகவே திருடர்கள் உள் நுழைந்திருப்பதாக சந்தேகம் கொள்வதாகவும் தெரிவித்தார்.

எனினும் அவர்கள் பொருட்களை திருடும் வரையில் தமக்கு எந்தவித சத்தமும் கேட்கவில்லை எனவும் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த ஒருவர் வீட்டினுள் யாரோ ஒருவர் நடமாடுவதை கண்டு மற்றவர்களை எழுப்பியதாகவும் தம்மால் எவரையும் பிடிக்கமுடியவில்லை எனவும் தெரிவித்தார்.

இதேவேளை வவுனியா பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் தேடுதலில் ஈடுபட்டதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

(அ-9-266)

# வடகிழக்கில் காணி சுவீகரிப்பா? பொய் என்கிறது இராணுவம்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் படையினரால் தமிழர்களின் காணிகள் சுவீகரிக்கப்படுவதாக சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களை இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய மறுத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இருந்து மீட்கப்பட்ட காணிகளை படையினர் பொது மக்களிடம் கையளித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காணி சுவீகரிப்புக்கு எதிராக தமிழ்க்கட்சிகள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வரும் நிலையிலேயே இந்த மறுப்பை இராணுவத்தினர் வெளியிட்டுள்ளனர்.

எனினும் படையினரால் வசப்படுத்தப்பட்டுள்ள சில தனியார் காணிகளுக்கு நட்டஈடுகள் வழங்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் சர்வதேச ரீதியாக காணி சுவீகரிப்பு தொடர்பாக சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)




யாழ் மண்ணில்....

கல்யாணமாலை

KALYANA MALAI

( சர்வதேச இலவச திருமண சேவை)



இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(பழைய எக்ஸ்போ ஏயார் விமான சேவை அலுவலகம்)
எனும் முகவரியில் இயங்குகின்றது
பதிவுக்கட்டணம்
ரூ.1000/- மட்டுமே

அலுவலக நேரம்: வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில்
காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை

குறிப்பு: பதிவை மேற்கொள்ளும் போது சாதகம், போட்டோ என்பன அவசியம். திருமணத் தரகர்கள் பதிவு செய்ய முடியாது.

# பூகோள, பிராந்திய அரசியலும் இலங்கையின் இன முரண்பாடும்

இலங்கையின் இனப்பிரச்சினை என்பது அடிப்படையில் ஓர் இந்திய உபகண்டப் பிரச்சினை. சிங்கள மக்களிடமும், சிங்கள பௌத்த மகா சங்கத்திடமும் மற்றும் சிங்கள நிறுவனத்திடமும், சிங்கள அரசிடமும், சிங்கள அறிவியலாளரிடமும் மற்றும் சிங்கள ஊடகங்களிடமும் இந்திய எதிர்ப்பு வாதம் வரலாற்று பூர்வமாய் வேர் ஊன்றியுள்ளது. தமிழ் மக்களை இந்தியாவுடன் இணைத்து அடையாளம் காண்பதால், இந்தியாவுக்கு எதிரான தமது எதிர்ப்பை தமிழ்மக்கள் மீது சிங்கள ஆட்சியாளர்களும் மத நிறுவனங்களும் மற்றும் பரந்துபட்ட மக்களும் காட்டுகின்றனர்.

இந்தியாவை இலங்கைத் தீவிற்கு எதிரான ஓர் ஆக்கிரமிப்புச் சக்தியாக சித்தரிக்கும் சிங்கள மக்கள் இந்தியாவுக்கெதிரான தமது யுத்தத்தை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஈழத்தமிழ் மக்களின் மீது புரிகின்றனர். இப்பிரச்சினையை விளங்கிக்கொள்ளும் வெளிநாட்டு அரசுகள் இந்துசமுத்திரம் தழுவிய, உலகளாவிய தமது நலன்களுக்கு ஒரு பகடைக்காயாய்ப் பயன்படுத்துகின்றனர். தற்போது சீன – அமெரிக்க பூகோள வியூகத்திற்குள்ளும் இந்தியா சார்ந்த பிராந்திய வியூகத்திற்குள்ளும் இப்பிரச்சினை அகப்பட்டு திருப்பாற்கடலில் வெண்ணெய் கடைவதுபோல கடையப்படுகிறது.

ஈழத்தமிழரை இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் கருவியாக எண்ணும் சிங்களவர்கள் இந்திய ஆதிக்கத்தை இலங்கையில் இல்லாது செய்வதற்கு ஈழத்தமிழரை அழிப்பதே ஓர் இலகுவான தீர்வென நினைக்கின்றனர். இது விடயத்தில் தம்முடன் கைகோர்க்கக் கூடிய எல்லா நாடுகளையும் சிங்கள அரசு பயன்படுத்துகிறது.

இனப்பிரச்சினைகளுக்கான தீர்வு என்னவென்று இலங்கையின் முன்னாள் தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலியிடம் அவரது ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக சகாவான டாக்டர் டேவிட் சல்போன் 1984 ஆம் ஆண்டு கேள்வி கேட்டபோது *தமிழர்களின் தலைகளை நொருக்குவதுதான் தீர்வு*, என அதிர்ச்சியூட்டும் பதிலை அவர் அளித்தார். சர்வதேச வியூகத்தால் சுற்றிவளைத்து, சர்வதேச சம்மட்டியால் தமிழரின் தலைகளை ராஜபக்ஷாக்கள் நொருக்கியிருக்கிறார்கள். இதனைக்கண்டு லலித்தின் ஆத்மா சாந்தி அடையும் எனக் கருதலாம்.

நீண்டகாலக் கண்ணோட்டத்துடன் இந்து சமுத்திரத்திற்குள் சீனாவின் பிரவேசம், இதைக்கண்டு அமெரிக்கா அடையும் சீற்றம், இந்தியாவின் பிராந்திய நலன் என்பன இலங்கையின் இனப்பிரச்சினையில் மையம் கொண்டுள்ளன. முள்ளிவாய்க்கால் யுத்தம் தொடர்பாக வெளிவராத இரகசியங்கள் ஏராளம் உள்ளன. அதாவது, முள்ளிவாய்க்கால் இரத்த சகதிக்குள் அதிர்ச்சி அளிக்வல்ல சர்வதேச அரசியல் இரகசியங்கள் நிறையவே புதைந்துள்ளன. தமிழர் தாயக விடுதலைப் போராட்டம் சர்வதேச அரசியற் சூறாவளிக்குள் சிக்குண்டுள்ளதால் அதிலிருந்து தமிழ்மக்கள் மிக நிதானமாகத் தம்மை தற்காத்து மீளவேண்டியுள்ளது. முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் தலையாய பகுதியே சர்வதேச பரிமாணம்தான். ஆதலால் சர்வதேச நிலைமைகளை சரிவர அடையாளம் கண்டு சர்வதேச கண்ணோட்டத்துடன் தமிழ்மக்கள் தமக்கான பாதையையும் பயணத்தையும் நிதானமாகவும் அறிவுப்பூர்வமாகவும் நிர்ணயிக்க வேண்டியுள்ளது.

சர்வதேச வர்த்தக அரசியலானது மக்களின் மனங்களைத் திருடியுள்ளது. அது தனது மனத்தையே மக்களின் மனமாக்கியுள்ளது. அதாவது தனது மனதை எமது மனதாக்கியுள்ளது. சர்வதேச அரசியலில் தலையெடுக்கும் சக்திகள் தங்கள் தீர்மானங்களை எங்கள் தீர்மானங்களாக்குகின்றன. தங்கள் தேவைகளை எங்கள் தேவைகளாக்குகின்றன. தங்கள் நலன்களுக்காக எங்களை இரத்தம் சிந்தச் செய்கின்றன. முள்ளிவாய்க்காலில் ஓடும் எங்கள் இரத்த ஆற்றில் சர்வதேச சக்திகள் தோணிகள் ஓட்டுகின்றன. இந்த வகையில் சர்வதேச அரசியலையும் அதன் உடற்கூற்றியலையும் கவனமாகப் பரிசீலித்து அதற்கேற்ப தமிழ் மக்கள் தமக்குப் பொருத்தமான ஜதார்த்த பூர்வமான ஒரு பாதையை அடையாளம் கண்டு அதன்வழி கரையேற வேண்டும்.

சிங்களத் தலைவர்கள் சர்வதேச அரசியலிலும் அரசியல் ராஜதந்திரத்திலும் கைதேர்ந்தவர்கள். சர்வதேச அரசியல் வியூகத்தால் ஈழத்தமிழரை ராஜபக்ஷாக்கள் தனிமைப் படுத்திச் சுற்றிவளைத்துக் கேட்பாரின்றிக் கொன்று குவித்திருக்கிறார்கள். முள்ளிவாய்க்கால் அரசியல் ஆய்வு கூடத்தில் ஈழத்தமிழர், கினிபிக்ஸ் பிராணிகளாய், தவளைக் குஞ்சுகளாய் பரிசோதனைக்கு உள்ளாகினர். பரிசோதனையின் வெற்றி அதனை மேற்கொண்டோரின் கழுத்தில் பட்டங்களாய் தொங்குகின்றன. ஆனால், தவளைக் குஞ்சுகளோ தோல்வேறு, எலும்பு வேறு, தசை வேறாகின.

தொடர்ந்தும் தமிழர்கள் தவளைக் குஞ்சுகளாய் கினிபிக்ஸ் பிராணிகளாய் வாழ முடியாது. முள்ளிவாய்க்காலில் அரங்கேறிய கொலைக்களத்திற்கான தூக்குமரங்கள் முள்ளிவாய்க்காலில் நாட்டப்பட்டிருந்தாலும், தூக்குக் கயிறுகள் சர்வதேச அரங்கிலிருந்தே தருவிக்கப்பட்டன. ஆதலால் மிக ஆழமாக சர்வதேச கண்ணோட்டத்துடன் ஈழத்தமிழர் பிரச்சினையை அணுக வேண்டியுள்ளது.

**முள்ளிவாய்க்கால் யுத்தம் முற்றிலும் சர்வதேசப் பரிமாணத்தில் நிகழ்ந்துள்ளது; வரப்போகும் ஒரு நூற்றாண்டுக்கான இந்து சமுத்திர அரசியல் வியூகத்தின் தலையாய பகுதியாக இந்த யுத்தம் நிகழ்ந்திருக்கிறது**



ஜனநாயக அணுகுமுறை, சர்வதேச கண்ணோட்டம், இராஜதந்திர நுணுக்கம் ஆகிய இவை மூன்றும் தமிழர் தாயக விடுதலைக்கான தலையாய அடிப்படையாகும் இவை மூன்றும் இன்றி ஈழத்தமிழர் ஒரு போதும் விடுதலை அடைய முடியாது.

ஜனநாயகம் என்று ஒரு வெறும் பசப்பு வார்த்தையால் ஜனநாயகத்தை அடைய முடியாது. முதலில் ஒரு ஜனநாயகக் கலாசாரம் வேண்டும் ஜனநாயகம் என்பது ஒரு கலாசாரமும், வாழ்க்கை முறையுமாகும். அரசியலிலும், அரசியல் அதிகாரத்திலும் மக்களைப் பங்காளிகள் ஆக்கும் ஒரு முறைமைக்குப் பெயரே ஜனநாயகம் என்பதாகும். அதாவது மன்னர்களினதும் தனிமனிதர்களினதும், தீர்மானங்களுக்குப் பதிலாக அரசியல் அதிகாரத்திலும், தீர்மானம் எடுத்தல் முறையிலும் மக்களைப் பங்காளிகள் ஆக்குவதுதான் ஜனநாயகத்தின் தலையாய பொறுப்பு. ஜனநாயகமானது முதலில் செவிமடுத்தலிலும், மற்றையோர் கருத்தை மதிப்பதிலும் ஆரம்பமாகிறது. அதாவது செவிமடுத்தல், கலந்தாலோசித்தல், பொறுப்புக்கூறல், பொது அபிப்பிராயத்திற்கு கட்டுப்படுதல், தனிப்பட்ட விருப்பு வெறுப்பிற்கு அப்பாலான *அறிவார்ந்த அணுகுமுறை* என்பன ஜனநாயகத்திற்கான முக்கிய ஒழுக்க விதிகளாகும்.

நாம் ஓர் அரசிற்குள் மட்டும் வாழவில்லை, கூடவே அரசுகள் எனப்படும் அமைப்பிற்குள்ளும் வாழ்கிறோம். என்ற சர்வதேச விதிபற்றிய புகழ்மிக்க கூற்றை கருத்தில் கொள்ளவேண்டும். சர்வதேச விதியை எழுமாத்திரத்தில் யாரும் மீறமுடியாது. காணப்படும் விதிக்குள் எமக்கான இலக்குகளை எவ்வாறு தேடுவது என்பதே எமது பணி. சூரியன் கிழக்கே தோன்றி மேற்கே மறைவது ஒரு விதி. சூரியனை வடக்கே தோன்றுமாறு ஆணையிட்டுவிட்டு நாம் செயற்படலாம் என்றில்லை. கிழக்கே தோன்றி மேற்கே மறைகின்ற விதியை உணர்ந்து அதில் எமக்குப் பொருத்தமான செயற்பாட்டை நாம் மேற்கொள்ள வேண்டும்.

உலக ஒழுங்கை தன் இஷ்டப்படி மாற்றி அமைக்க ஹிட்லர் புறப்பட்டார். பெரும் இராணுவ பலத்துடனும், ஆசிய, ஐரோப்பிய நாடுகள் தழுவிய கூட்டணியுடனும் ஹிட்லர் ஒரு புதிய உலக ஒழுங்கை உருவாக்கப் புறப்பட்டார். ஆனால், அவர் தொடங்கிய இடத்திற்கு வெகுதூரம் பின்நோக்கி ஜேர்மனியைத் தள்ளினார். இது உலக ஒழுங்கின் மீது செயற்படுவது பற்றிய சிறந்த வரலாற்றுப் படிப்பினையை பெருவல்லரசுகளுக்கும், புத்திஜீவிகளுக்கும் கொடுத்துள்ளது. தக்கன பிழைக்கும் என்ற டார்வின் கோட்பாட்டை நிட்சே *தக்கனதான் பிழைக்க வேண்டும்* என மாற்றினார். நிட்சேயின் இக்கோட்பாட்டை பின்பற்றியே தன் அரசியல், வெளியுறவுக் கொள்கையை வகுத்துக்கொண்ட ஹிட்லர் யதார்த்தத்திற்கு மாறாக எழுமாத்திரத்தில் தன் விருப்பப்படி உலக ஒழுங்கை உருவாக்க முற்பட்டார். இத்தோல்வியிலிருந்து பெரும் வல்லரசுகள் பல பாடங்கள் கற்றுள்ளன என்பது உண்மை. அதாவது, உலக ஒழுங்கு விதியின் பலத்தை உணர்த்த இது ஒரு போதுமான உதாரணமாகும். காணப்படும் உலக ஒழுங்கை சரிவரக் கற்றறிந்து, இதில் எமக்குச் சாதகமான புள்ளிகளை தேர்ந்தெடுத்து அந்தப் புள்ளிகளை இணைப்பதிற்தான் எமது அரசியல் இலக்கும், எதிர்காலமும் தங்கியுள்ளது.

தமிழர் தாயக விடுதலை முற்றிலும் சாத்தியமானது. குறிப்பாக சர்வதேச சூழலை சரிவரக் கையாள்வதிலேயே அது அதிகம் தங்கியுள்ளது. விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் யதார்த்தத்தை அதற்கே உரிய அளவில் எடைபோட்டு அதில் எமது பாத்திரத்தை உணர்ந்து அதற்கேற்ப செயற்படுவதன் மூலம் எமக்குரிய இலக்கை அடைவது சாத்தியம். யுத்தத்தில் ஈழத்தமிழர் தோல்வியடைந்து மூன்று ஆண்டுகள் கழிந்துவிட்டன. ஏற்பட்டுள்ள சாதக பாதகத்தை எடைபோட போதிய வரலாற்று அனுபவமும் கிடைத்துள்ளது. ஆதலால் ஏற்பட்ட நன்மை தீமைகளைப் பொறுப்புணர்வுடனும், நன்நோக்கத்துடனும் நிதானமாக எடைபோட்டாக வேண்டும்.

இனப்படுகொலையில் இருந்து தப்பிப் பிழைக்கவும், இன ஒடுக்குமுறையிலிருந்து விடுபடவும், உரிமையுள்ள மனிதர்களாக இப்பூமியில் வாழவும், ஜீவாதாரத்தின் பெயராலும் பண்பாட்டு வாழ்வின் பெயராலும், ஜனநாயகத்தின் பெயராலும், பிரிந்து சென்று சுதந்திர அரசினை அமைப்பதைத் தவிர வேறொரு மாற்று வழியையும் வரலாறு ஈழத்தமிழருக்கு விட்டுவைக்கவில்லை. அத்துடன் ஈழத்தமிழரின் விடுதலைதான் இந்திய உபகண்டத்தின் பாதுகாப்பிற்கும், இப்பிராந்திய அமைதிக்கும் அடிப்படையாய் அமையும் என்பதை வரலாறு எடுத்துரைக்கிறது. யதார்த்தத்தைக் கணக்கில் எடுத்து நாம் வரலாற்றோடு இருந்தால் வரலாறு எம்மோடு இருக்கும். நாம் வரலாற்றுக்குப் புறம்பாக நடந்தால் வரலாறு எம்மை விட்டு விலகி ஓடி எதிரியின் கையில் அகப்பட்டுவிடும்.

சர்வதேச ஏகபோக வர்த்தகப் போட்டியில் எந்த அரசு ஈடுபடுகிறதோ அந்த அரசு ஏகாதிபத்திய அரசே ஆகும். ஏகாதிபத்தியம் என்ற கோட்பாட்டை ஏகபோகத்திற்குள்ளாற்தான் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது எது ஏகபோகமோ அதுவே ஏகாதிபத்தியமாகும். சர்வதேச உறவுமுறையைப் பொறுத்தவரையில் உலகில் சோஷலிச அரசுகள் என்று எதுவுமில்லை. உள்நாட்டில் ஓர் அரசு சோஷலிச முறையைக் கொண்டிருக்கிறதா இல்லையா என்பதல்ல எமது வாதம். அவை சர்வதேச உறவுமுறையில் சோஷலிச உறவுமுறையைக் கொண்டுள்ளனவா என்பதே கேள்வி. பதில் இலகுவானது. வர்த்தக ஆதிக்கப்போட்டியின் மூலம் சுரண்டலில் ஈடுபடும் எந்தவொரு அரசும் சோஷலிச அரசல்ல. இந்தவகையில் இன்று உலகில் உள்ள வல்லரசுகள், பெருவல்லவர்கள் எல்லாமே ஏகாதிபத்திய அரசுகள்தான். அவை தத்தம் தேவைகளுக்கும், நலன்களுக்கும் ஏற்ப ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களை அணுகுகின்றன. இந்த வகையில் ஏகாதிபத்திய அரசுகளுக்கு இடையே காணப்படும் முரண்பாடுகளை சூழலுக்கு ஏற்ப கையாண்டு தமக்கான விடுதலையை ஈட்டுவதைத்தவிர வேறுவழி, ஒடுக்கப்படும் இனங்களுக்கோ, மக்களுக்கோ இல்லை.

பனிப்போர் முடிந்ததன் பின்பான காலத்தில் மே 1990 இல் இருந்து ஜூலை 2011 வரை பிரிந்து சென்று தோன்றிய சுதந்திர அரசுகளின் தொகை பூமியில் 25 ஆகும். இந்த உலக ஒழுங்கு விதிக்கு ஈழத்தமிழர் எதிரிடையாக நடைபோட முடியாது. எனவே, நிதர்சனமான உலக ஒழுங்கில் பிரிந்து சென்று சுதந்திர அரசுகளை உருவாக்குதல் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சாத்தியமான நடைமுறையாகவே உள்ளது.

இவ்வாறு பிரிந்து சென்று உருவாகிய சுதந்திர அரசுகளை நோக்கினால், அவைகள் நடைமுறைச் சாத்தியமான வெளியுறவுக்கொள்கையைப் பின்பற்றி உள்ளமை தெரியவரும். அவற்றைப் பற்றி எல்லாம் நாம் ஆழமாகக் கற்றறிய வேண்டும். அந்த 25 அரசுகளினதும் வெற்றி தோல்விகளில் இருந்தும், பின்னடைவுகளில் இருந்தும், அவை பின்பற்றிய நடைமுறைகளில் இருந்தும், வெளியுறவுக் கொள்கை சம்பந்தமான சிறந்த படிப்பினைகளை நாம் பெற்றாக வேண்டும்.

மனோரம்மிய கற்பனைகளினாலும், தூய்மை வாதங்களாலும், தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளினாலும், அதீத எண்ணங்களினாலும், யதார்த்த உண்மைகளுக்கு புறம்பான அணுகுமுறைகளினாலும் நாம் எதனையும் சாதித்துவிட முடியாது. எம்மிடம் என்ன இருக்கிறதோ அதைக் கொண்டுதான் எதையாவது செய்தாக வேண்டும் என்ற கூற்றும், நாம் எங்கு நிற்கின்றோமோ அங்கிருந்துதான் பயணத்தை தொடர முடியும் என்ற கூற்றும் எமக்கான நடைமுறைத் திட்டங்களை வகுப்பதற்கு மிகவும் அவசியமானவை.

நன்றி: இணையம்

# அரசியல் பேதமின்றி மரபுரிமை சொத்துக்களை பாதுகாக்க வேண்டும்

## பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் வாழும் பிரதேசத்திலுள்ள மரபுரிமை சொத்துக்களை பாதுகாப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் வரலாற்று துறைத்தலைவரும் பேராசிரியருமான ப.புஸ்பரட்ணம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.மாநகரசபையின் ஏற்பாட்டில் கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்ற யாழ்.மாநகர மரபுரிமைக்கழக அங்குரார்ப்பண கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்கள் வாழும் பகுதிகளிலுள்ள வரலாற்று சின்னங்களான மரபுரிமைச் சொத்துக்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் இதுவரை காலமும் மேற்கொள்ளப்படாமை மிகவும் மனவேதனைக்குரியது.

இருப்பினும் யாழ்ப்பாணம் மாநகரசபை மரபுரிமைச் சொத்துக்களை பாதுகாக்க எடுத்துள்ள இந்த முயற்சி மகிழ்ச்சியோடு திருப்தியையும் அளித்துள்ளது.

இவ்வாறான கழகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை கடந்த 50 வருடங்களுக்கு முன்னரே வைக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் அதை நடைமுறைப்படுத்தவும் உருவாக்கவும் எவரும் முன்வரவில்லை. இதனால் எமது பிரதேசத்திலுள்ள மரபுரிமைச் சொத்துக்கள் எவருக்கும் பெருமையோடு காட்டக்கூடியநிலையில் இல்லை.

தென்னிலங்கையிலிருந்து வரும் வரலாற்றுத்துறை சார்ந்த பேராசிரியர்கள், அறிஞர்கள் வரலாற்று சின்னங்களை பார்க்க விருப்பம் தெரிவிக்கின்ற போதும் அவற்றை காண்பிக்கக்கூடியநிலையில் நாம் இல்லை.

தென்னாசிய நாடுகளில் இலங்கையின் வடபகுதியானது தனித்துவமான பண்பாட்டை கொண்ட பிரதேசமாக விளங்கியுள்ளது என்பது விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்ட உண்மை. பண்பாட்டையிழந்து பெறப்படும் அபிவிருத்தி உண்மையான அபிவிருத்தியாக அமையாது.

இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் சின்னங்களில் 800 இற்கு மேற்பட்டவை வட இலங்கையை சேர்ந்தவை. தமிழர்கள் 7 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றை கொண்டவர்கள் என்று சொல்லிக் கொண்டாலும் அதை நிரூபிக்க முடியாத நிலையில் நாம் உள்ளோம்.

தமிழர்கள் வாழும் பிரதேசத்திலுள்ள வரலாற்று சின்னங்கள் சுற்றுலாத்துறையாக மாற்றப்படும் போது அவற்றை பாதுகாக்க முடியும்.தமிழர்கள் பாரம்பரியமாக பின்பற்றி வந்த பண்பாடு, சடங்கு முறைகள் என்பவற்றிலும் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும் கடற்கரையோரத்தில்உள்ள பிரதேசங்கள் பாதுகாக்கப்படும் போது சுற்றுலாத்துறையில் வளர்ச்சி ஏற்படும்.

எனவே கடந்த தலைமுறைவிட்ட தவறினை நாமும் விடாது அரசியல் வேறுபாடுகள் இன்றி மரபுரிமை சொத்துக்களை பேணி பாதுகாக்க அனைவரும் முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## புத்தகக் கண்காட்சி

(பூந்தோட்டம்)

தேசிய கலை இலக்கிய பேரவையின் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியில் குமரன் புத்தக சாலை வெளியீடுகள், பூபாலசிங்கம் புத்த சாலை வெளியீடுகள்,தேசிய கலை இலக்கிய பேரவையின் வெளியீடுகள் மற்றும் வவுனியா மாவட்ட எழுத்தாளர்களின் வெளியீடுகள் என்பன காட்சிப்படுத்தப்படவுள்ளதாக தேசிய கலை இலக்கிய பேரவையினர் தெரிவித்துள்ளனர். (அ-3-266)



கொழும்பு மறைமாவட்ட ஆயரும் கர்தினாலுமான அதி.வண. மெல்கம் ரஞ்சித்தை முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா நேற்று முன்தினம் சந்தித்து கைலாகு கொடுத்து வரவேற்பதை படத்தில் காணலாம்.

# தேவையற்ற இடத்தில் தேர்தல் வேண்டாம்; வடக்கு மாகாணத்தில் நடத்துங்கள்

## கரு எம்.பி. ஆலோசனை

(கொழும்பு)

வடக்கில் தேர்தல்களை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கருஜய சூரிய கோரிக்கை விடுத்துள்ளார்.

உரிய ஆட்சிக்காலம் பூர்த்தியாவதற்கு முன்னதாக சில மாகாணசபைகளை கலைத்து தேர்தல்களை நடத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது. ஏனைய மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கு முன்னர் வடக்கு மாகாணசபைக்கான தேர்தல்களை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏனைய மாகாணங்களை போன்றே வடக்கு மக்களின் வாக்குரிமையும் உறுதி செய்யப்பட வேண்டும். வடமாகாண சபைக்கான தேர்தல்களை நடத்துவதன் மூலம் இந்த அரசாங்கம் ஜனநாயக ரீதியானது என்பதனை உலகிற்கு உணர்த்த முடியும்.

போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு மூன்றாண்டுகள் கடந்துள்ள நிலையிலும் வடக்கு மக்களுக்கு வாக்களிக்க சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படவில்லை. தேவையற்ற இடங்களில் தேவையற்ற வகையில் தேர்தலை நடத்தாது உரிய நேரத்தில்,உரிய இடங்களில் தேர்தலை நடத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்தி அவற்றில் வெற்றியீட்டி அரசாங்கத்திற்கான மக்கள் ஆதரவு குறைவடையவில்லை என்பதனை உலக சமூகத்திற்கு எடுத்துக் காட்டும் முயற்சியில் ஆளும் கட்சி ஈடுபட்டுள்ளதாக கருஜய சூரிய தெரிவித்துள்ளார்.

கிருலப்பனையில் அமைந்துள்ள அவரது காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# நாகபட்டினம் மீனவர்கள் ஒன்பது பேர் விடுதலை

(கொழும்பு)

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட நாகபட்டினம் அக்கரப்பேட்டை மீனவர்கள் 9 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நாகை மாவட்டம் அக்கரைப்பேட்டை பகுதியை சேர்ந்த மீனவர்கள் 9 பேர் கடந்த 16 ஆம் திகதி கடலுக்கு மீன்பிடிக்க சென்றுள்ளனர். அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது கடல் சீற்றம் காரணமாக இலங்கை எல்லைக்குள் நுழைந்தனர்.

இதனையடுத்து இலங்கை கடற்படையினர் அவர்களை கைது செய்துள்ளனர். நேற்றைய தினம் யாழ்.மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழக மீனவர்கள் 9 பேரும் தற்போது காங்கேசன்துறை துறைமுகத்தில் வைக்கப்பட்டுள்ளனர். இரண்டு நாட்களில் தமிழகம் திரும்புவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# "சிவாயநம" எனும் திருவைந்தெழுத்து மந்திரத்தை கோடி முறை ஓதும் நிகழ்வு

நான்கு வேதங்களும் மெய்ப்பொருளாக திகழ்ந்து விளங்க அதன்கண் சிறப்புடைய நாமமாக திகழ்வது நமசிவாய என்கிற ஈசனின் திருவைந்தெழுத்தாகும். இத்திருவைந்தெழுத்தை அன்பின் மேலிட்டு மனதில் பதித்தும் அதன்வழி கசிந்து உருகிக் கண்ணீர் மல்கி ஓதியும் ஆன்மீகம் வளர்த்தவர்கள் சமயகுரவர்கள். இன்றும் இம்மக்களின் மரபார்ந்த மனமார்ந்த வணக்க பண்பாடும் இதுவே.

அன்பின் மேலீட்டால் ஓதும் தன்மை காதலாகி எனச் சுட்டப்பெற்றது. ஈசனே தனக்கு உறுதுணையாக விளங்கும் தலைவன் என்னும் உணர்வாலும் தனக்கு அவரையன்றி வேறு யாராலும் நன்மை செய்ய இயலாது என்னும் உறுதிப்பாட்டாலும் உயிரினும் ஒப்பற்றதாக பேணுதலாலும் அன்பின் பெருக்கானது காதலாக மலர்வதாயிற்று. வேதத்தின் மெய்ப்பொருளாவது ஈசன் திருநாமம் என்பதும் அது நமசிவாய என்னும் ஐந்தெழுத்தாலும் இவண் உணர்த்தப் பெற்றது.

**நாமும் 16.06.2012- 26.06. 2012 வரை ஸ்ரீ கைலாசப்பிள்ளையார் ஆலயத்தில் அவ்வாறு வழிபாடியற்றுவோம்.**

ஈசனின் திருவடிப்பேறாகிய முக்தியின்பத்தை பெறுவதற்கு உரிய நன்னெறியை கடைப்பிடிக்க வேண்டும் என்பதும் அது ஐந்தெழுத்தை ஓதுதலாகும் என்பதும் கொள்க.

ஓம் நமசிவாய அருளாளர் திருஞானசம்பந்தசுவாமிகளின் இறுதியாக நாட்டு மக்களுக்காக திருவாய் மலர்ந்தருளி பதிகம் மூலம் உணர்த்திய ஓம்நமசிவாய எனும் ஐந்தெழுத்து மந்திரத்தை நாமும் ஓதி சகல துன்பங்களில் இருந்தும் விடுபட்டு பரம் பொருளின் குஞ்சிதபாத திருவருளை பெற்று உய்வோமாக.

சிவனடியார் திருக்கூட்டம்

# போரை நிறுத்துமாறு பல நாடுகள் கூறியபோதும் இலங்கை கேட்கவில்லை

## காங்கிரஸ் கட்சியின் தலைவர் தெரிவிப்பு


(சென்னை)

போர் நிறுத்தம் செய்யுமாறு இந்தியா விடுத்த வேண்டுகோளை இலங்கை அரசாங்கம் காதில் வாங்கிக் கொள்ளவேயில்லை என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஞானதேசிகன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போரை நிறுத்தி ஈழத் தமிழரை காப்பாற்ற தவறியது, முல்லைப்பெரியாறு அணை விவகாரத்தில் நீதியை நிலைநாட்டத் தவறியது போன்ற காரணங்களை சுட்டிக்காட்டி இந்திய குடியரசுத்தலைவர் தேர்தலை புறக்கணிக்க போவதாக தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் அறிவித்திருந்தார்.

இதற்கு பதிலளித்து தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் ஞானதேசிகன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இந்த அறிக்கையிலேயே போரை நிறுத்துமாறு இந்தியா மட்டுமன்றி ஏனைய பல நாடுகள் விடுத்த வேண்டுகோள்களுக்கும் கூட இலங்கை அரசாங்கம் செவி சாய்க்கவில்லை என்று கூறியுள்ளார். அத்துடன் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு இந்திய அரசு ஆதரவு கொடுத்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# சிறுவர் அரங்கம்



138

## மோதிரத்திற்கு உரியவன்

### மரியாதைராமன் கதைகள்

ஓர் ஊரில் இரண்டு வணிகர்கள் இருந்தார்கள். ஒருவன் பெயர் தேனப்பன். இன்னொருவன் பெயர் மலையப்பன்.

விலை உயர்ந்த மோதிரம் ஒன்றைத் தேனப்பன் அணிந்திருந்தான். அது பளபள வென்று மின்னியது.

தேனப்பன் வீட்டிற்கு வந்தான் மலையப்பன்.

நண்பா! என் உறவினரின் திருமணம் வெளியூரில் நடைபெறவுள்ளது. நான் அதற்குச் செல்ல வேண்டும். உன் மோதிரத்தை இரவலாகத் தா. ஊர் திரும்பியதும் திருப்பி தந்து விடுகிறேன்! என்றான்.

மோதிரத்தைக் கழற்றி அவனிடம் தந்தான் தேனப்பன்.

நாட்கள் ஓடின. மோதிரத்தை மலையப்பன் திருப்பித் தரவே இல்லை.

பொறுமை இழந்த தேனப்பன் மலையப்பனைச் சந்தித்தான். உன் விரலில் அணிந்திருக்கும் மோதிரத்தைத் தா! என்று கேட்டான்.

இது என் மோதிரம். எதற்காக உன்னிடம் தர வேண்டும்? என்று கேட்டான் மலையப்பன்.

திகைத்த அவன், திருமணத்திற்குச் செல்ல மோதிரம் கேட்டாய். நானும் தந்தேன். இப்பொழுது இப்படிப் பேசுகிறாயே! என்று கேட்டான்.

என்ன உளறுகிறாய்? இது நான் விலை கொடுத்து வாங்கிய மோதிரம். பல மாதங்களாக என் விரலில் அணிந்து இருக்கிறேன். இதை ஏன் உன்னிடம் இரவல் வாங்கப் போகிறேன்? என்றான் மலையப்பன்.

நண்பன் என்று தந்தேனே. ஏமாற்ற முயற்சி செய்கிறானே. நான் தந்த போது பார்த்த சாட்சிகளும் இல்லையே! என்று தன்னையே நொந்து கொண்டான் அவன்.

நீதிமன்றம் சென்ற அவன் மரியாதைராமனை வணங்கினான். நடந்ததை எல்லாம் சொன்னான்.

மலையப்பனை அழைத்து விசாரித்தார் அவர்.

நீதிபதி அவர்களே! தேனப்



பன் என் நண்பன். நேற்று என் வீட்டிற்கு வந்தான். நான் அணிந்திருக்கும் இந்த மோதிரத்தைக் கேட்டான். நான் எதற்குக் கேட்கிறாய்? என்றேன்.

மோதிரம் என்னுடையது. உன்னிடம் இரவல் தந்தேன். என்னை ஏமாற்றவா பார்க்கிறாய் என்று கூச்சல் போட்டான்.

நான் விலை கொடுத்து வாங்கியது இந்த மோதிரம். பல மாதங்களாக இதை அணிந்து உள்ளேன் என்றான் மலையப்பன்.

இருவரில் யார் சொல்வது உண்மை என்பது தெரியவில்லையே. எப்படிக் கண்டு பிடிப்பது என்று சிந்தித்தார் மரியாதைராமன்.

நல்லவழி ஒன்று அவருக்குத் தோன்றியது.

நாளை நீங்கள் இருவரும் இங்கு வாருங்கள். உங்கள் வழக்கை விசாரிக்கிறேன்! என்றார்.

அரண்மனைப் பொற்கொல்லனை அங்கு வரவழைத்தார் அவர்.

நாளை நீர் இங்கு வர வேண்டும். நான் ஒரு மோதிரம் தந்து மதிப்பிடச் சொல்வேன்.

உரை கல்லில் அதை அதிகம் தேய்த்துப் பார்க்க வேண்டும். அதன் விலையைக் குறைத்துச் சொல்ல வேண்டும்.

மறுநாள் நீதிமன்றம் கூடியது. தேனப்பனும் மலையப்பனும் அங்கு வந்தார்கள்.

அவர்களைப் பார்த்து நீதிபதி மோதிரத்திற்கு இருவருமே உரிமை கொண்டாடுகிறீர்கள். அதனால் மோதிரத்தை விற்கப் போகிறேன். கிடைக்கும் தொகையை உங்கள் இருவருக்கும் பிரித்துத் தந்து விடுகிறேன்! என்றார்.

நீதிபதியே இப்படிச் சொல்கிறாரே என்ன செய்வது என்று வருந்தினான் தேனப்பன்.

மோதிரம் நம்முடையது இல்லை. கிடைத்த வரையில் இலாபம் என்று மகிழ்ந்தான் மலையப்பன்.

பொற்கொல்லனை அழைத்தார் நீதிபதி.

மலையப்பனிடம் இருந்து மோதிரத்தை வாங்கி அவனிடம் தந்தார். இந்த மோதிரம் என்ன விலை பெறும் மதிப்பிட்டுச் சொல்லும் என்றார்.

பொற்கொல்லன் அந்த மோதிரத்தை உரை கல்லில் தேய்த்தான். மீண்டும் தேய்த்தான். தேய்த்துக் கொண்டே இருந்தான்.

இதைப் பார்த்த தேனப்பன், ஐயா! தேய்ப்பதை நிறுத்துங்கள். தேய்த்தே பாதி மோதிரத்தை எடுத்து விட்டீர்களே என்று பதறினான்.

தேய்ப்பதை நிறுத்தினான் பொற்கொல்லன். மோதிரத்தை மேலும் கீழும் உற்றுப் பார்த்தான். இந்த மோதிரம் மாற்றுக் குறைந்த பொன்னால் செய்யப்பட்டது. ஐம்பது பணம் பெறும் என்றான்.

அதிர்ச்சி அடைந்த தேனப்பன், நீதிபதி அவர்களே இந்த மோதிரம் நல்ல தங்கத்தால் செய்யப்பட்டது. இருநூறு பணம் கொடுத்து வாங்கினேன்.

இவர் பாதி மோதிரத்தைத் தேய்த்தே எடுத்து விட்டார். விலையையும் குறைத்துச் சொல்கிறார்.

நண்பன் ஏமாற்றி விட்டான் என்று இங்கு வந்தேன். இங்கும் இவர் என்னை ஏமாற்றுகிறாரே. எல்லாம் என் தலைவிதி என்று புலம்பினான்.

ஆனால் மலையப்பனோ எப்படியும் நமக்கு ஒரு தொகை கிடைக்கப்போகிறது என்று மகிழ்ச்சியுடன் இருந்தான்.

இருவரையும் கவனித்தார் மரியாதை ராமன். குற்றவாளி யார் என்பது அவருக்கு விளங்கியது.

மலையப்பனைப் பார்த்து அவர், பொற்கொல்லர் மோதிரத்தை வாங்கினார். அதை உரைகல்லில் மிகவும் தேய்த்தார். விலையையும் குறைத்துச் சொன்னார்.

இதைக் கேட்டு நீர் எந்தப் பரபரப்பும் காட்டவில்லை. மகிழ்ச்சியாகவே இருந்தீர்.

மாறாகத் தேனப்பனோ துடிதுடித்தார். பொற்கொல்லரைக் குறை சொன்னார். மோதிரத்தின் உண்மையான மதிப்பையும் சொன்னார்.


ஆகவே, மோதிரத்தின் சொந்தக்காரர் தேனப்பன் தான். அவரிடம் மோதிரத்தைத் தருகிறேன்.

நண்பரை ஏமாற்ற முயன்றீர். நீதிமன்றத்தில் பொய் சொன்னீர். இந்தக் குற்றங்களுக்காக உமக்கு ஓராண்டு சிறைத் தண்டனை விதிக்கிறேன் என்றார்.

மோதிரத்தைப் பெற்றுக் கொண்ட தேனப்பன் மகிழ்ச்சியுடன் புறப்பட்டான்.

# யுத்தம் நிறைவடைந்த பின்னரும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தடைகள் இருப்பது வேதனைக்குரியது

## சந்திரகுமார் எம்.பி.சபையில் உரை



(கொழும்பு)

**தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீ றல்கள் பருத்தித்துறை தொடக்கம் முல்லைத்தீவு-கொக்கிளாய் வரையிலான கடற்பிரதேச த்தில் பாரம்பரியமாக கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்ற மக்களின் வாழ்வாதா ரத்தைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் பற்றிய விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

வடக்கு கிழக்கிலே கடந்த யுத்தகால் கட்டங்களில் மீன்பிடி தொடர்பாக இறுக்கமான நடைமுறைகள் இருந்திருக்கின்றன. அதனால் அங்குள்ள கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. யுத்தத்திற்குப் பின்பு நிம்மதியாக அவர்கள் கடலுக்குச் சென்று தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குரிய நடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டன. தொடர்ச்சியாக கடற்றொழிலாளர்களுக்கு மிகவும் அசௌகரியமாக இருந்த சில பிரச்சினைகள் தொடர்ச்சியாகவே இருந்து கொண்டு இருக்கின்றன.

அவர் மேலும் முயற்சி செய்து அந்தத் தடைகளை முழுமையாக அகற்றி அவர்கள் சுதந்திரமாகக் கடலுக்குச் சென்று தொழிலில் ஈடுபடுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டும் என்பதை நான் இங்கே வலியுறுத்த விரும்புகின்றேன்.

எமது வடக்கு கடற்றொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் இன்று இரண்டு பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதில் ஒன்று இந்திய கடற்றொழிலாளர்களின் ஆக்கிரமிப்பு இதனால் தினமும் இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமதியான எமது மீனவர்களது கடற்றொழில் உபகரணங்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அத்துடன் எமது கடல் வளம் அபகரிக்கப்படுகின்றது.

எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாத வகையில் சுமுகமான முறையில் ஒரு நிரந்தரத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை நான் இச்சந்தர்ப்பத்திலே வலியுறுத்துகின்றேன்.

அவர்கள் வந்து கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. எமது கடற்றொழிலாளர்களும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் பெரும்பாலான தென்னிலங்கை கடற்றொழிலாளர்கள் அங்கு படையெடுத்து வந்து எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரங்களைப் பாதிக்கும் வகையில் அவர்களது தொழிலைக் கட்டுப்படுத்தும் அல்லது மறுக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவது தவிர்க்கப்பட வேண்டும்.

அடுத்த வடமராட்சி கிழக்கிலுள்ள நாகர் கோவில் பகுதிக்குக் கிழக்காகச் சுண்டிக்குளம் என்ற பிரதேசம் இருக்கின்றது. அந்தப் பிரதேசத்தில் மீளக்குடியேற முடியாமல் 350 கடற்றொழிலாளர் குடும்பத்தினர் இன்னமும் இடம்பெயர்ந்த நிலையிலேயே இருக்கின்றார்கள்.

இவர்களது மீள்குடியேற்றத்தைத் தடுக்கின்ற அதேவேளையில் 200 இற்கும் மேற்பட்ட தென்னிலங்கை கடற்றொழிலாளர்கள் இராணுவ அதிகாரிகளின் பாதுகாப்புடன் அவர்களது அனுசரணையுடன் அங்கு கடல் அட்டை மற்றும் சங்கு பிடித்தல் போன்ற தொழில்களில் ஈடுபடுகிறார்கள். அத்தோடு அவர்கள் டயனமைட் போன்ற மிகவும் ஆபத்தான வெடி மருந்துகளைப் பாவித்தும் தொழிலில் ஈடுபடுகின்றார்கள். இது எந்த வகையில் நியாயம்.

இன்று மாதகல் மேற்கு உயர் பாதுகாப்பு வலயம் விடுவிக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டிருந்தாலும் அம்மக்கள் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக் குடியேறி தமது சொந்தக் காணிகளைத் துப்புரவு செய்வதனை அங்குள்ள கடற்படையினர் தடை செய்து வருகின்றார்கள்.

இருபது வருட காலமாக வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணமும் இன்று நிறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் தமது சொந்தப் பிரதேசங்களில் மீள்குடியேறி தமது வாழ்வாதாரத்துக்கென கடற்றொழில் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாமல் தடுக்கப்படுகிறார்கள்.

அதுமட்டுமல்ல மாதகல், மயிலிட்டி, பலாலி போன்ற பிரதே சங்களில் வாழ்ந்த கடற்றொழிலாளர்கள், கடற்படையினர் திடீரென அவர்களை அப்பகு தியில் மீன்பிடிப்பதற் குச் செல்லவிடாது தடைவிதித்து வேறு பிரதேசங்களுக்குச் செல்லுமாறு நிர்ப்பந்தித்திருக்கிறார்கள்.

இதைவிடசங்கானை பிரதேச செயலகப் பிரிவில் பொன்னாலையிலுள்ள ஜே/ 170 நெல்லியான் பிரதேசத்தைச் சேர்ந்த கிட்டத்தட்ட 966 உறுப்பினர்களைக் கொண்ட 270 குடும்பங்கள் மீள் குடியேறுவதற்கு கடற்படையினர் நீண்ட காலமாக அனுமதிக்கவில்லை. அவ்வாறு ஜே/ 172 சுழிபுரம் மேற்கு புளியந்துறை சவுக்குப்புளி போன்ற பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களும் ஜே/ 174 சுழிபுரம் கிழக்கு காட்டுப்புலப் பிர தேசத்தைச் சேர்ந்த 152 குடும்பங்களும் இன்னமும் மீள்கு டியேற அனுமதிக்கப்பட வில்லை.

எனவே, நீங்கள் எமது பிரதேச கடற் றொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான, நீதியான தீர்வைப் பெற்றுக் கொடுத்து அவர்கள் இலகுவாகவும் சுதந்திரமாகவும் தங்களது தொழிலில் ஈடுபடுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தால் வட மாகாணத்தில் நீங்கள் எதிர்பார்க்கும் இலக்கை அடைய முடியும் என்றார். (அ-2)

# 90 அரச நிறுவனங்களில் ஆயிரம் கோடி ரூபா நிதிமோசடி அம்பலம்

## கணக்காளர் திணைக்களம் தகவல்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் பல செலுத்தாது இரகசியமாக பல்வேறு வீண் விரயங்களுக்கு செலவிடுவதுடன் சுமார் ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான தொகை வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாக கணக்காய்வு விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது என தகவல் தரவல்ல அதிகாரி ஒருவர் தெரிவித்தார். சுமார் 90 கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள் இவ்வாறு அரசாங்கத்திற்கு தெரியாதவாறு நிதி கொடுக்கல் வாங்கல் மோசடியில் ஈடுபட்டுள்ளன.

நிறுவ்னத் தலைவர்கள் பொது திறைசேரிக்கு நிதி வழங்காமையினால் திறைசேரி குறித்த நிறுவனத் தலைவர்களிடம் அடிக்கடி அறிவித்த போதிலும் அவர்கள் போலி கார்ணங்களைக் கூறி நிதி வழங்குவதை தாமப்படுத்தி வருவதாக பொது திறைசேரியின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் அவர்கள் நிதியினை நிலையான வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் என்பவற்றிலும் இரகசியமான முறையில் முதலீடு செய்வதாகவும் தெரிய வந்துள்ளது.

எனினும் இவ்வாறான நிறுவனங்களின் தலைவர்கள் பல வருட காலமாக பல்வேறு விதமான மோசடிகள் மூலம் கோடிக்கணக்கான தொகையினை வீண்விரயம் செய்து வந்துள்ளதாகவும் கணக்காய்வுத்துறை தெரிவிக்கின்றது.

பொது திறைசேரியில் நிதி இல்லாத சந்தர்ப்பங்களில் அரசாங்கம் பல்வேறு வழிகளில் கடன் பெற்று வரும் நிலையில் இந்த நிறுவனங்கள் அதிகமான தொகையினை யாருடைய அனுமதியின் மீது நிலையான வைப்புக்களில் வைப்புச் செய்துள்ளன என்பது தொடர்பாகவும் அரச கணக்காய்வுத்துறை கேள்வி எழுப்புகின்றது. பொது திறைசேரிக்கு நிதியினை வழங்காமை மற்றும் திருட்டுத்தனமான முறையில் நிலையான வைப்பிலிட்டு நிதி சம்பாதித்தல் என்பன தொடர்பாக அரச கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் அந்த நிறுவனங்களுக்கு கணக்காய்வு விசாரணைகளை அனுப்பியுள்ள போதிலும் அவற்றிற்கு பதிலளிக்காது நழுவி வருவதாகவும் கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவிக் கின்றனர். (அ-2)


## சேவை நலன் பாராட்டு



**திரு.மு. உதயசங்கர் (SLPS-2 I)**

B.Ed.Sp.Trd.Maths,Dip.in.English

**சேவை விபரம்**

**ஆசிரியராக**

1975-மு/கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலை
1975-மு/நட்டாங்கண்டல் அ.த.க. பாடசாலை
1983- மு/கொக்குளாய் அ.த.க. பாடசாலை
1985-மு/ வித்தியானந்தாக் கல்லூரி
1988-மு/ அலம்பில் றோ.க. வித்தியாலயம்
1990- மு/ முல்லைத்தீவு ம.வி.
1992- மு/ கலைமகள் வித்தியாலயம்

**அதிபராக**

1999-மு/கலைமகள் வித்தியாலயம், முள்ளியவளை
2004-மு/ கொக்குத்தொடுக்வாய் அ.த.க. பாடசாலை
2007- கி/ஆனையிறவு அ.த.க. பாடசாலை

**முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிமனையில்**

2010- திட்டமிடல் பிரிவு -அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர்
2012- பிரதிக்கல்விப் பணிப்பாளர்

36 வருடமாக எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்காக அரும் பணியாற்றி 23.06.2012 உடன் தனது சேவையில் இருந்து ஓய்வு பெறும் எமது பாடசாலையின் முன்னை நாள் அதிபர் திரு.மு. உதயசங்கர் அவர்கள் எமது பாடசாலையின் கீர்த்திக்காக அரும்பாடுபட்டவர். ஆங்கிலத்திலும் கணனித் தொழில்நுட்பத்திலும் துறைபோனவர், சிறந்த நிர்வாகி, அவரது 36 வருடகால சேவையை பாராட்டுவதுடன் ஓய்வின் பின்பும் அவரது சேவை எமது பிரதேசத்திற்கு கிடைக்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**

(சி-307)


**மு/கலைமகள் வித்தியாலயம்.**

# ஈழத்தமிழர்களை இழிவுபடுத்திய இல.அமைச்சரின் பேச்சை இந்திய மத்திய அரசு கண்டிக்க வேண்டும்

## வைகோ வலியுறுத்து

(சென்னை)

**இலங்கை அமைச்சரின் திமிர்ப்பேச்சை மத்திய அரசு கண்டிக்க வேண்டும். தமிழர்கள் சிந்திய இரத்தத் துளிகளும், உயிர்ப்பலிகளும் இலங்கை அரசின் கொட்டத்தை அடியோடு ஒடுக்கி விடுதலை வெள்ளி முளைக்கும் களங்களாக அமையும். அகங்காரத்தோடு தமிழர்களை இழிபுபடுத்திப் பேசிய இலங்கை அமைச்சருக்கும் அந்த அரசுக்கும் கண்டனமும் எச்சரிக்கையும் இந்திய அரசு செய்யத்தவறுமானால் தமிழ் இனத்திற்கு தொடர்ந்து இந்திய அரசு துரோகம் இழைக்கும் பலிக்கே ஆளாகும் என ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.**



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கைத் தீவில் இலட்சக் கணக்கான ஈழத்தமிழர்களை கொடூரமாக படுகொலை செய்த இலங்கை அரசின் பேரினவாத உண்மையான கோரமுகம் மீண்டும் அம்பலத்திற்கு வந்து விட்டது.

தமிழ் இனத்தின் தாய்மார்களும் குழந்தைகளும் வயது முதிர்ந்தவர்களும் ஆயுதம் ஏந்தாதவர்களும் விமான குண்டு வீச்சாலும் பீரங்கி தாக்குதலாலும் முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்டனர்.

உலகத்தின் பல்வேறு கால கட்டங்களில் நடைபெற்ற கொலைக் களங்களை அந்தப் பெயர்கள் நினைவூட்டுவதைப் போல முள்ளிவாய்க்கால் என்று சொன்னாலே தமிழர்களின் நெஞ்சைப் பிளக்கின்ற வார்த்தை ஆயிற்று.

சிங்கள இனவாத கட்சியான ஜாதிக ஹெல உறுமய கட்சியை சேர்ந்த அமைச்சர் சம்பிக்க ரணவக்க தமிழர்களுக்கு ஒரு முள்ளிவாய்க்கால் போதும் என்று நினைக்கின்றோம். நூறு முள்ளிவாய்க்கால்களை ஏற்படுத்திக் கொள்ளாதீர்கள் என்று கொக்கரித்து ஊளைவிட்டுள்ளார்.

சிங்கள அமைச்சரின் ஆணவ திமிர்ப்பேச்சு இலங்கை அரசின் குரூரமான எண்ணத்தின் வெளிப்பாடே ஆகும். இந்திய அரசு தந்து வரும் உதவியினாலும் ஆதரவினாலும்தான் இலங்கை அமைச்சர் வாய்க்கு வந்தபடி பேசியுள்ளார்.

வேதனையில் வெந்துபோன தமிழர் நெஞ்சில் சூட்டுக்கோலைத் திணிக்க முயல்கின்றனர்.

இதற்கெல்லாம் சேர்த்து ஒட்டுமொத்தமாக இலங்கை அரசு பதிலும் விலையும் தர வேண்டிய காலம் வந்தே தீரும். முள்ளிவாய்க்கால்கள் மீண்டும் வரும் என அதில் கூறியுள்ளார். (அ-2)

# எகிப்து தேர்தல் முடிபு ஒத்திவைப்பு

(கெய்ரோ)

எகிப்து நாட்டில் நடைபெற்ற ஜனாதிபதி பதவிக்கான தேர்தலின் இறுதி முடிபு அடுத்த வாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எகிப்து நாட்டில் ஜனாதிபதி பதவியிலிருந்து ஹோஸ்னி முபாரக் நீக்கப்பட்ட பின்னர் அப்பதவிக்கு தேர்தல் நடைபெற்றது.

தேர்தலில் முகம்மது முர்ஷி மற்றும் முன்னாள் பிரதமர் அகமது ஷபீக் ஆகியோர் போட்டியிட்டனர்.

தேர்தல் நீதிபதி பரூக் சுல்தான் தலைமையில் நடைபெற்றது.

தேர்தலின் முடிபு இன்றைய தினம் அறிவிப்பதாக இருந்தது.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி உடல் நிலை பாதிக்கப்பட்டது உட்பட பல்வேறு காரணங்களால் தேர்தல் முடிபு அடுத்த வாரத்திற்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. (அ-2)

# அல்கொய்தாவின் முக்கிய தளபதி பிடிபட்டான்



பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த போது பாகிஸ்தான்-ஈரான் எல்லையில் அல்கொய்தா இயக்கத்தைச் சேர்ந்த முக்கிய புள்ளி பிடிக்கப்பட்டார்.

அவருடைய பெயர் நமீன் மாஷிசி.ஐரோப்பாவில் இவர் அல்கொய்தாவின் முகவராகச் செயற்பட்டு தாக்குதல்களை நடத்த மூளையாகச் செயற்பட்டவர்.

மேலும் இவர் ஆபிரிக்காவில் அல்கொய்தாவின் தளபதியாகச் செயற்பட்ட யூனுஸ் அல் மவுதாரியின் நெருங்கிய கூட்டாளி ஆவான். யூனுஸ் தனது கூட்டாளியுடன் கடந்த ஆண்டு பாகிஸ்தானில் பிடிபட்டு தற்போது சிறையில் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது பிடிபட்டுள்ள முக்கிய புள்ளியான நமீன் மாஷிசி சர்வதேச அளவில் அல்கொய்தா இயக்க முக்கிய பிரதிநிதியாக செயற்பட்டு வருபவன் என்றும் தேடப்படும் முக்கிய நபர் என்றும் பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# வட.பாகிஸ்தானில் 16 ஆயிரம் குழந்தைகளை கொடிய போலியோ நோய் தாக்கும் அபாயம்

(இஸ்லாமாபாத்)

போலியோ தடுப்பு மருந்துக்கு தலிபான் இயக்கம் தடை விதித்த தன் எதிரொலியாக வடக்கு பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் வாழும் குழந்தைகளை இந்தக்கொடிய நோய் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பழங்குடியினர் வாழும் பகுதியான கைபர், பஜெர், மொஹமண்ட், குர்ரம் ஆகிய இடங்களில் வாழும் ஐந்து வயதுக்கு கீழுள்ள சுமார் எட்டு இலட்சம் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு மருந்து வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக 2 ஆயிரத்து 700 குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன.

இந்த நிலையில் அங்கு வாழும் குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு மருந்து தருவதை அந்த இடத்தில் செல்வாக்கு மிகுந்துள்ள தலிபான் இயக்கத்தினர் தடை செய்துள்ளனர். இதனால் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகளை இந்தக் கொடிய நோய் தாக்கும் அபாயம் ஏற்பட்டிருக்கின்றது.


வசிரிஸ்தானில் ஆளில்லா விமானங்கள் மூலம் அமெரிக்கா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதை எதிர்த்து பயங்கரவாதிகளின் சுரா என்கிற ஆட்சிக்குழு போலியோ தடுப்பு மருந்தளிக்கும் திட்டத்திற்கு தடை விதித்தது.

போலியோ முற்றிலும் ஒழிக்கப்படாத மிகச் சில நாடுகளில் பாகிஸ்தானும் ஒன்று என்கிற நிலையில் ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு நோய்த்தடுப்பு மருந்து கிடைக்காமல் போவது சர்வதேச சுகாதார அமைப்புக்களைக் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

மிகவும் கடினமான நிலப்பகுதியாக உள்ள வடக்கு பாகிஸ்தானில் ஏற்கனவே பழங்குடியினர் இடையே போலியோ நோய் தாக்கு என்பது பரவலாக உள்ளது.

இந்த நிலையில் நோய்த்தடுப்புக்கு சுகாதார அமைப்புக்கள் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு இப்படியொரு புதிய தடையை அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

இந்த முடிபு அப்பகுதியில் வாழும் குழந்தைகளுக்கு மிகவும் அபாயகரமானதாக ஆகிவிட்டது. மேலும் அண்டை மாகாணங்களில் போலியோ வைரஸ் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது என குறிப்பிடப் பட்டுள்ளது. (அ-2)



மியன்மார் ஜனநாயக தலைவர் ஆங்சாங் சூகிக்கு ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் நேற்று முன்தினம் கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்கியதைப் படத்தில் காணலாம்.

# ஆப்கானில் தற்கொலைபடைத்தாக்குதல் 21 பேர் உடல் சிதறிப்பலி; 50 பேர் காயம்



ஆப்கானிஸ்தானில் முகாமிட்டிருக்கும் நேட்டோ படையினர் மீது தலிபான் மற்றும் அல்கொய்தா தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். கோஸ்ட் மாகாணத்தில் ஸ்பிடை ஜெமாத் பஷார் என்ற இடத்தில் அமெரிக்கா மற்றும் ஆப்கானிஸ்தான் இராணுவ சோதனை சாவடி உள்ளது.

இங்கு தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளனரா? என்பதை அறிய அப்பகுதி மக்களிடம் அடையாள அணி-வகுப்பு மற்றும் கைரேகை சோதனைகளை இராணுவ வீரர்கள் நடத்திக்கொண்டிருந்தனர். அப்போது கூட்டத்தில் புகுந்த தற்கொலை தீவிரவாதி தனது உடலில் கட்டியிருந்த குண்டை வெடிக்கச் செய்தான்.

அதில் 21 பேர் உடல் சிதறி பலியானார்கள். அவர்களில் 3 பேர் அமெரிக்க இராணுவ வீரர்கள். அவர்கள் தவிர பொதுமக்களும் குழந்தைகளும் அடங்குவர்.

மேலும் பொலிஸ்காரர்கள் உட்பட 50 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-2)

# சவுதியில் தலை துண்டித்து மரணதண்டனை விதிப்பு

சவுதி அரேபியாவில் நால்வருக்கு தலை துண்டித்து மரணதண்டனை நிறைவேற்றம் செய்யப்பட்டுள்ளது. சிறுமியை கடத்தியது, பாலியல் ரீதியான தாக்குதல் போன்ற வற்றின் அடிப்படையிலேயே இவர்களுக்கான தலையை துண்டித்து மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன்மூலம் சவுதி அரேபியாவில் இந்த ஆண்டு தலையை துண்டித்து மரண தண்டனை நிறைவேற்றத்துக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 39 ஆக உயர்ந்துள்ளது. (அ-2)

> நம் தவறுகளை நாமே உணர்ந்து கொள்வதை விட உயர்ந்த மனத்துணிவு வேறு கிடையாது.
> ~ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பாலும் பருப்பும் முட்டையும் குழைசோறும் நாம் தருவோம்...

நம் மண்ணில் இப்போது நடக்கின்ற கலாசாரப் பிறழ்வுகள், மோசமான போக்குகள் இவை யாவற்றுக்கும் அடிப்படைக் காரணம் எங்களிடம் குருபக்தி இல்லாமல் போனமைதான்.

ஒரு காலத்தில் ஆசிரியர் என்றால் அவருக்கு எல்லோரிடத்திலும் மதிப்பும் மரியாதையும் தாராளமாக உண்டு.

எத்தகைய உயர் பதவியில் இருந்தாலும் தனக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர் வருகிறார் என்றவுடன் எழுந்து நின்று மதிப்புச் செலுத்திய பண்பாடு இருந்த மண் இது.

ஆனால் இன்று நிலைமை அதுவல்ல. வடபுலத்தில் இப்போது மரியாதையற்ற தொழில் ஆசிரியத் தொழில் என்றாகிவிட்டது.

ஆசிரியத் தொழில் ஒன்றுதான் அரசியல் கலப்பில்லாத தொழிலாக இருப்பதனால் தான் இத்தகைய மரியாதையீனங்கள் என்று நாம் எண்ணத் தோன்றுவதும் உண்டு.

பொதுவில் ஆசிரியர்கள் மதிக்கப்படாதவரை வடபுலத்தின் வீழ்ந்த கல்வியை நிமிர்த்துவது முடியாத காரியம்.

ஆசிரியத் தொழில் தவிர்ந்த ஏனைய அத்தனை உத்தியோகத்தர்களும் மதிப்புக்குரியவர்கள் என அத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் நினைக்கின்றனர்.

அட! உங்களிடம் இருந்த அரசியல் வால்பிடிப்பு எங்களிடம் இல்லாததால் தான் நீங்கள் அந்தக் கதிரையில் இருக்கிறீர்கள். நாங்கள் வெண்கட்டி பிடிக்கிறோம் என்று ஆசிரியர்கள் நினைக்கின்றார்கள்.

இந்த நினைப்பில் எங்கள் சமூகம் அசைகின்ற வேளையில், இப்போது பாடசாலை மாணவர்களுக்கு பாலும் முட்டையும் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.

150 மில்லி லீற்றர் பால், பாதி முட்டை. அட! இராமா! பாடசாலை அதிபர், அங்கு கடமையாற்றும் ஆசிரியர்களின் நிலைமை என்னவாகும்?

அறிக்கைக் கலாசாரத்தில் மூழ்கி படிப்பை இழந்த இன்றைய பாடசாலைகளை மீட்க முடியாத நிலையில், மாட்டைப்பிடி, பாலைக் கற, முட்டையை அவி, கோதை உடை, அதை இரண்டாக வெட்டு இப்படியே அதிபர், ஆசிரியர்களின் காலம் கழிய,

வாகனத்தில் வருகின்ற உயர் அதிகாரிகள் நுனி முட்டை சிறிது, அடி முட்டை பெரிது, உடைந்த மஞ்சள் கரு. அதிபர் எங்கே? பொறுப்பான ஆசிரியர் எங்கே? முட்டையை சரிபாதியாக வெட்டத்தெரியாத நீரும்... இப்படிக் கேட்க, சிவசிவா. அதிபர், ஆசிரியர்கள் என்ன செய்ய முடியும்?

பால், முட்டை, குழைசோறு பள்ளிகளில் கொடுப்பது நல்லது. ஆனால் அதனை நடை முறைப்படுத்த ஆளணியை அரசு நியமிக்க வேண்டும் அல்லவா?

பாடசாலைகளில் உணவு வழங்கவென அரச நியமனம் வழங்கினால் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கு மல்லவா?

இதைவிடுத்து, காக்கொத்து அரிசிக்கு பெற்றோர் வந்து குழைசோறும் சமைத்து, பாலும் காய்ச்சி, முட்டையும் அவித்துக் கொடுப்பது என்றால் நடக்கிற காரியமாமோ?

அதிபரும் ஆசிரியர்களும், தேவையென்றால் மாணவர்களும் சேர்ந்து தான் முட்டைக் கோதை உடைக்க வேண்டும்.

ஓ! கல்வி அதிகாரிகளே! அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சியில் முட்டைக் கோது உடைத்தலுக்கும் ஒரு கொலம் ஒதுக்குங்கள்.

# 2001 ம் ஆண்டு கொள்ளைக்கு 2 வருட சிறைத்தண்டனை விதிப்பு

## குற்றவாளிகள் இல்லாமலேயே தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பகுதியில் 2001 -ம் ஆண்டு நடைபெற்ற கொள்ளை சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட 3 திருடர்களுக்கு யாழ். நீதிமன்றம் 11 வருடங்களுக்கு பின்பு 2 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

குறித்த திருட்டுச் சம்பவத்தோடு தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் நால்வர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றின் உத்தரவிற்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந் நால்வரில் மூவர் பிணையில் இருந்த காலத்தில் தலைமறைவாகியுள்ளதோடு இருபாலையைச் சேர்ந்த நபரொருவர் தொடர்ந்து வழக்குகளிற்கு சமுகமளித்து வந்ததனையடுத்து அவர் குற்றமற்றவர் என விடுதலை செய்யப்பட்டார்.

தப்பிச்சென்ற ஊர்காவற்துறை, கல்வியங்காடு, கட்டைப்பராய் ஆகிய இடங்களினைச் சேர்ந்த 3 நபர்களுக்கும் குறித்த வழக்கு நேற்று மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது யாழ். நீதவான் பகிரங்கப் பிடியாணை பிறப்பித்ததோடு குற்றவாளிகள் கைது செய்யப்படுவதற்கு முன்னரே 2 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார். (ந-4)

## சுனாமிக்கான பாசாங்கு எச்சரிக்கை நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

சுனாமிக்கான பாசாங்கு எச்சரிக்கை மற்றும் போலி நடிப்பு பயிற்சி மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் உள்ள மணற்காடு பிரதேசத்தில் ஜே/418 கிராம உத்தியோகத்தர் பிரிவில் மட்டும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரால் தேசிய ரீதியாக சுனாமிக்கான பாசாங்கு எச்சரிக்கை மற்றும் போலி நடிப்புப் பயிற்சிச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

இப்பயிற்சி சம்பந்தமாக பொது மக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (அ-9)

## உருத்திரபுரீசுவரர் ஆலய மகோற்சவம்

கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரபுரநாயகி உடனுறை உருத்திரபுரீசுவரர் ஆலய முதலாவது மகோற்சவப் பெருவிழா கடந்த 17-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

இன்று 6-ம் நாள் திருவிழா இடம் பெறுவதுடன், நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை சப்பறத் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும், அடுத்த நாள் காலை 7.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

இதேவேளை உற்சவகாலத்தில் 10 நாட்களும் 7 மணி தொடக்கம் 8 மணி வரை சொற்பொழிவு இடம்பெற்றுவருவதுடன், 11-ம் திருவிழா அன்று புதன் கிழமை பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும் என ஆலய அறங்காவல் அவையினர் அறிவித்துள்ளனர். (ந)

## அரச அதிபருக்கு அவதூறு கடிதம் எழுதியவர் நீதிமன்றால் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அதிபராக கடமையாற்றி தற்போது ஜனாதிபதி செயலகத்தில் கடமை புரியும் இமெல்டா சுகுமாருக்கும் அவரது பதவிக்கும் களங்கம் ஏற்படுத்தும் விதமாக கடிதம் எழுதிய முதியவரை யாழ். நீதிமன்றம் குற்றமற்றவர் என விடுதலை செய்துள்ளது.

2011 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 04 ஆம் திகதி யாழ் அரச அதிபராக கடமையாற்றிய இமெல்டா சுகுமாரின் பெயருக்கும் பதவிக்கும் களங்கம் ஏற்படுத்தும் விதத்தில் நல்லூரினைச் சேர்ந்த 80 வயது முதியவர் ஒருவர் கடிதமொன்றினை எழுதி அதனை இமெல்டா சுகுமாருக்கு அனுப்பியுள்ளார்.

இதற்காக யாழ் பொலிஸாரினால் இவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்த நிலையில் குறித்த வழக்கு மீண்டும் யாழ். நீதிவான் மா. கணேசராஜா முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கின் மனுதாரரான இமெல்டா சுகுமார் மன்றில் சமுகமளிக்காததன் காரணமாகவும் குறித்த சந்தேக நபரின் வயதினை அடிப்படையாக கொண்டும் குறித்த முதியவர் விடுதலை செய்யப்பட்டார். (ந-4)

## மஹோற்சவம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு- சொர்ணவடலி அருள்மிகு ஸ்ரீ சொர்ண சித்தி விநாயகர் தேவஸ்தான நந்தன வருட திவ்விய மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது. (ந-6)




ஒருவிடயத்தைப் பற்றி நன்கு அறிந்தவர்களே பேசுவது நல்லது. அதை நன்கு அறியாதவர் பேசமுறப்படுவது தவறு. இறையனுபவம் பற்றி எல்லோராலும் பேசமுடியாது. நேரடியாக இறை தரிசனம் பெற்ற மணிவாசகரே தன்னுடைய இறையனுபவம் போதாது எனக் கருதியுள்ளார். இறைவன் ஈசன் என்ற சிறப்பான பெயரைப் பெற்றவன். முத்தியென்னும் பெருஞ் செல்வத்தையுடையவன். இந்த உலகிலும் மறுஉலகிலும் துணையாக இருப்பவன். இக்கருத்தை இன்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத் தயங்குவர். வழிபாடு பற்றிய தெளிவான விளக்கம் பலரிடம் இல்லை. நமது முன்னோர் வாழ்வியலில் வழிபாடு சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. மக்கள் முன்னோர் கூற்றை ஏற்றுவாழும் பக்குவத்தில் இல்லை. இந்நிலையில் மணிவாசகரது வாழ்வியல் அனுபவம் விளக்கத்தைத் தருவதாக உள்ளது. அவர் இறைவனை மறந்த வேளையைப் பற்றியே பாடியுள்ளார்.

தன்னை ஒரு பேதை எனக்குறிப்பிட்டுள்ளார். பேதைப்பருவம் என்பது 7 வயதுக்குட்பட்ட பருவம் என இலக்கியம் பதிவு செய்துள்ளது. இப்பருவம் தானாக எதையும் விளங்கிக்கொள்ள முடியாத சிறுபிள்ளைப்பருவமாகும். அத்தகைய ஒரு சிறுபிள்ளைத்தனமான நிலையில்தான் இறைவனைப் பற்றிப்பேசுவதாகக்கூறுகிறார். தன் னிலையை ஒளிக்காமலே கூறுகிறார். அறிவில்லாத நான் வீட்டின்பம் பற்றிப் பேசினேன். எங்கள் தலைவனே கீழ் நிலையான என்னை வலிய வந்து ஆட்கொண்டருளிய தூயவனே! ஞானாசாரியனே! உன்னைத்தவிர வேறு தெய்வம் உண்டென என் மனம் நினைக்காது. எனவே நான் நின்னோடு ஒன்றுமாறு செய்யவேண்டும் எனப் பாடலிலே பாடியுள்ளார்.

நீசனேனை யாண்டு கொண்ட நின்மலா எனப்பாடலிலே அவர் தன்னை நீசன் எனக்குறிப்பிடுவது ஒரு தெளிவான கருத்தைக்கூறுகிறது. மெய்யன்பும் பக்குவ முதிர்ச்சியுமாகிய உயர்ந்த நிலையில்நின்று மணிவாசகர் தம்மைத் தாழ்த்தி நீசன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இறைவன் பற்றிய எண்ணக் கருத்தில் மணிவாசகர் மனம் தெளிவாக இருந்தது. இதுவே உண்மையான பக்திநிலை. எல்லையற்ற பேராற்றல் கொண்ட இறைவன் முன்னிலை சாதாரண மக்கள் மிகவும் கீழானவர்களே. இக்கருத்தை இன்று ஏற்றுக்கொள்ளாதவர்களும் இன்று இருக்கிறார்கள். இறைவன் பற்றிய எண்ணம் எப்போதும் இறைவனைப் பற்றி நினைப்பதால் ஏற்படும். முன்னர் பெற்ற அனுபவத்தை மீண்டும் மீண்டும் நினைப்பதால் இறையன்பு கைகூடும். மணிவாசகர் தான் பெற்ற தெய்வீக அனுபவத்தை எல்லோரும் எக்காலத்திலும் அறியவேண்டுமென எண்ணிச் பாடல்களைப் பாடியுள் ளார்.

உலக வாழ்க்கையில் இறைவன் பற்றிய நினைப்பைத் தடுக்கும் எண்ணங்களை அவர் நன்கு அறிந்திருந்தார். தன்னைத் தாழ்த்தி நிற்கும் மனப் பக்குவம் எல்லோருக்கும் வந்துவிட்டால் மனிதவாழ்வு விழுமியமுடையதாக இருக்கும்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

ஒரு தெய்வத்தை மனதிலே குடியேற்றி வழிபாடு செய்யும் உறுதியான மனம் வேண்டும். தற்காலத்தில் இத்தகைய உறுதியான மனம் படைத்தவர்களைக் காணமுடியாது. தெய்வ நம்பிக்கை தொடர்பாக அடிக்கடி மனம் மாறுவோர் உளர்.

அத்தகைய உறுதியற்றவர்களின் மதமாற்றம் மனிதவாழ்வியலின் சீர்மியத்தையே சீர்குலைத்து விடும். மணிவாசகரது பாடல்கள் மனித மனங்களைப் பக்குவப்படுத்தும் பண்புடையவை. மனித எண்ணங்கள் தெளிவாக இருக்க உதவுவன.

ஈசனே நீயல்ல தில்லையிங்கும்
அங்கும் என்பதும்
பேசினேனொர் பேதமின்மை பேதை
யேனென் எம்பிரான்
நீசனேனை யாண்டு கொண்ட நின்ம
லாவொர் நின்லால்
தேசனே யொர் தேவருண்மை
சிந்தியாது சிந்தையே

# டானியல் மீண்டும் நியூசிலாந்துக்கு

நியூசிலாந்து அணி சார்பாக மீண்டும் இருபதுக்கு இருபது சர்வதேசப் போட்டிகளில் பங்கு பெறுவதற்குத் தயாராக இருப்பதாக நியூசிலாந்து அணியின் சகலதுறை வீரரும் முன்னாள் தலைவருமான டானியல் விட்டோரி தெரி வித்துள்ளார்.



கடந்தாண்டு சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு வித்திருந்த அவர் தற்போது மீண்டும் போட் டிகளில் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார். கடந்தாண்டு உலகக் கிண்ணப் போட்டிகளை அடுத்து டெஸ்ட் முழுமையாகக் கவனம் செலுத்தும் முகமாகவும் தனது ஓய்வினை வழங்குவதற்காகவும் இருபதுக்கு வதேசப் போட்டிகளிலிரு ந்து ஓய்வுபெறு வதாகவும் ளிலிருந்து நிரந்தர ஓய்வினைப் பெற்றுக் ஓய்வினை டானியல்

பெறு வதாக அறி பங்குபற்றத் இடம்பெற்ற போட்டிகளில் உடலுக்கு இருபது சர் ஒருநாள் போட்டிக கொள்ளாத போதிலும் அறிவிப்பதாகவும் விட்டோரி தெரிவித்தி ருந்தார். இந்நிலையி லேயே இலங்கையில் இடம்பெறவுள்ள சர்வதேசக் கெட் சபையின் உலக இருபது இருபது தொடருக்கு 3 மாதங் கும் குறைவான நாட்களே உள்ள இருபதுக்கு இருபது சர்வதேசப் ஆடுவதற்குத் தயாராக இருப்பதாக வித்துள்ளார். இது நியூசிலா ந்து அணிக்கு வாய்ப்புக்களை வழங்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. இருபதுக்கு இருபது டானியல் விட்டோரி விரும்பி ஒருவர் எனத் தெரிவித்த நியூசிலாந்துக் யின் தேசிய தேர் வுக்குழு முகாமையாளர் டானியல் விட்டோரின் மீள் வருகையை வீரர்கள், பயிற்றுவிப்பு அதிகாரிகள் ந்துக் கிரிக்கெட்சபை ஆகியோர் மனதுடன் வரவேற்பதாகத் தெரிவித்தார். நியூ சிலாந்து அணிக்கு முக்கிய மானதாக வும் அவர் தெரிவித்தார். எதிர்வ ரும் ஆம் திகதி இலங்கையில் ஆரம் பதுக்கு இருபது உலகத் தொட லாந்துத் தற்காலி அணி எதிர் ஆம் திகதி அறிவிக்கப்படவுள்

கிரிக் க் கு களுக் நிலையில் போட்டிகளில் அவர் தெரி சிறந்த

போட்டிகளை விளையாடும் கிரிக்கெட் சபை கிம்லிட்டில் ஜோன், நியூசிலாந்து மற்றும் நியூசிலா முழுமையான அவரது அனுபவம் அமையும் என செப் டெம்பர் 18 பிக்கவுள்ள இரு ருக்கான நியூசி வரும் ஜூலை 18 ளமை குறிப்பிடத்தக்கது.

# விளையாடத் தயார் – யுவராஜ்

ஒரு புற்று நோயாளியால்தான் புற்றுநோயிலிருந்து மீள்வது என்றால் என்ன என்பதை புரிந்து கொள்ள முடியும் என்று இந்திய கிரிக் கெட் அணியின் நட்சத் திர துடுப்பாட்ட வீரர் யுவராஜ் சிங் தெரிவித் துள்ளார்.



மேலும் தான் உடல் நிலை தேறி விட்ட தாகவும் இலங்கையில் நடைபெறும் 20-20 ஓவர் உலக கிண்ண போட்டிக்கு தயார் என்றும் தெரிவித்துள்ளார்.

இது குறித்து யுவராஜ் சிங் கூறு கையில்,

இந்தியாவுக்கு விளையாடுவது என்பது மிகப் பெரிய சவால். ஏனெனில் உடல் நிறைய அதிர்ச்சியை சந் தித்து விட்டது.

அதனை என்னைத் தவிர வேறு யாரும் உணர முடியாது.

நா்ன் எப்போது திரும்புவேன் என்பதற்கு சரியான காலத்தைக் குறிப்பிட முடியாது என்றாலும் 75% உடல் தகுதியுடன் நான் விளையாட விரும்பவில்லை. 100% உடற்தகுதி அவசியமாகும்.

இதற்கு 6 மாத ஆகலாம். 2 மாதகாலமாகலாம். ஆனால் 100% உடற்தகுதி பெற்று விட்டேன் என்று உணர்ந்தால் நான் நிச்சயம் இந்திய அணியில் இடம் பிடிப்பேன் என்றார்.

டுபாயில் ஐசிசி கிரிக்கெட் 360 என்ற போட்டியில் கலந்து கொண்டுள்ள யுவராஜ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.




# சதுரங்கப் போட்டி

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான சதுரங்கப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற இப்போட்டியில் இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மூன்றாம் இடத்தை கிளிநொச்சி மகா வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

# முதல் டெஸ்ட்டில் மிஸ்பா இல்லை

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும் இலங்கை அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மிஸ்பா உல் ஹக் இற்கு ஒரு போட்டியில் விளையாடுவதற்கான தடையை சர்வதேசக் கிரிக்கெட் சபை விதித்துள்ளமையா லேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.



இலங்கை - பாகிஸ்தான் அணி களுக்கிடையில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற 5 ஆவதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேசப் போட்டியில் பாகிஸ்தான் அணி வழங்கப்பட்டுள்ள நேரத்துள் பந்து வீசி முடிக்காமை காரண மாகவே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

5 ஆவது போட்டியில் வழ ங்கப்பட்ட நேரத்திற்குள் பாகிஸ்தான் அணி 3 ஓவர்கள் தாமதமாகப் பந்து வீசியிரு ந்தமை கண்டுபிடிக்கப்பட்டமையினாலேயே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டு ள்ளது. அணி வீரர்கள் அனைவருக்கும் அவர்களது போட்டி ஊதி யத்தின் 40 சதவீதப் பணம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் ஏற்பட்ட நேர விரயங்கள் அனைத்தையும்கருத்திற் கொண்ட பின்பும் பாகிஸ்தான் அணி 3 ஓவர்கள் தாமதமாகப் பந்துவீசியிருந்தது எனவும் சர்வதேச கிரிக்கெட் சபையின் முறைகளின் படி இது பாரதூரமான குற்றம் என்பதால் மிஸ்பா உல் ஹக் இற்கு இந் தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணியின் தலைவராகத் தொடர்ச்சியாக பதினைந்து டெஸ்ட் போட்டிகளில் அணித் தலைவராகப் பணியாற்றியிருந்த மிஸ்பா உல் ஹக் 23 போட்டிகளில் தலைவராகக் கடமையாற்றியிருந்த அப்துல் காதரின் பாகிஸ்தான் சாதனையை முறியடிக்கும் வாய்ப்பை இதன்மூலம் இழந்துள்ளார்.

நடை

# யாழ்ப்பாணத்தில் அரவிந்த டி. சில்வா

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரும் அதிரடித் துடுப்பாட்ட வீரருமான அரவிந்த டி. சில்வா இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

யாழ்ப்பாணம் வருகை தரும் டி.சில்வா கொக்கக்கோலா நிறுவனத்தின் நிதி அனுரசணையுடன் அரவிந்த டி.சில்வா பவுண்டேசன் 512 ஆவது படைப் பிரிவின் ஒத்துழைப்புடன் இன்று நண்பகல் 12 மணிக்கு யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமா கும் மூன்று நாள் கிரிக்கெட் பயிற்சி முகாமில் வளவாளராக பங்கு கொள்கின்றார். கடந்த 2009 ஆண்டு, இந்தப் பயிற்சி முகாம் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதா னத்தில் நடைபெற்றிருந்தது.

இந்நிலையில் இம்முறை யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது.

இப்பாடசாலை மாணவர்கள், கிரிக்கெட் கழக வீரர்கள் இந்தப் பயிற்சி முகாமில் பங்கு கொள்ளவுள்ளனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் ஓய்வு பெற்ற துடுப்பாட்ட வீரரான அரவிந்த டி.சில்வாஇந்தப்பயிற்சிமுகாமில்பங்கு கொள்வதுயாழ்ப்பாணத் திலுள்ள கிரிக்கெட் வீரர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வருடம் யாழ்ப்பாணத்திற்கு இலங்கை அணியின் தற்போதைய அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தனே இலங்கை அணியின் முன்னால் தலைவரும் முன்னணித் துடுப்பாட்ட வீரரு மான குமார் சங்கக்




காரா ஆகியோரும் வருகை தந்திருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. (6)

# ஒலிம்பிக் போட்டி; பயஸ் விலகல்



ஒலிம்பிக் போட்டிகளில் இருந்து லியாண்டர் பயஸ் விலகுவதாக அறிவித்துள்ளார். டென்னிஸ் இரட்டையர் பிரிவு அணியின் ஜோடியை மாற்றியதால் பயஸ் அதிருப்தி அடைந்திருந்தார். இதனைத் தொடர்ந்து ஒலிம்பிக் போட்டிக்கான அணியிலிருந்து விலகுவதாக பயஸ் அறிவித்துள்ளார்.

ஒலிம்பிக் போட்டியின் டென்னிஸ் இரட்டையர் பிரிவில் பயஸ் பூபதி ஜோடி விளையாடும் என்று சங்கம் அறிவித்திருந்தது. ஆனால் பயஸுடன் பூபதி விளையாட மறுப்புத் தெரிவித்தார்.

பூபதியைத் தொடர்ந்து போபண்ணாவும் விளையாடத் மறுப்புத் தெரிவித்தார். இதனை தொடர்ந்து ஒலிம்பிக்கிற்கு இரண்டு அணிகளை அனுப்ப சங்கம் முடிபு செய்தது.

அதில் மகேஷ் பூபதி–போபண்ணாவும் ஒரு அணியாகவும் லியாண்டர் பயஸ்–விஷ்ணு வர்தன் மற்றொரு அணியாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஒலிம்பிக் போட்டிக்கான அணியிலிருந்து விலகுவதாக லியாண்டர் பயஸ் அறிவித்துள்ளார்.

# இலங்கை-பாகிஸ்தான் டெஸ்ட் இன்று ஆரம்பம்

இலங்கை அணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி இன்று காலை 10.00 மணிக்கு காலி சர்வதேச விளையாட்டரங்கில் ஆரம்பமாக வுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான இருபது–20 போட்டி சமனிலையிலும், ஒருநாள் போட்டித் தொடரை இலங்கை அணியும் வென்றிருந்த நிலையில் இரு அணிக ளுக்கும் இடையிலான டெஸ்ட் போட்டித் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது.

## இலங்கையை தட்டி ...

போக்கில் இத்தனை மாறுதல்கள் ஏன் என்று நேரிலேயே விளக்கம் கேட்க முடிபு செய்துள்ளது.

இதற்காகவே இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனை இம் மாதம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்புக்கு அனுப்பி வைக்கிறது.

அவர் சனிக்கிழமையும் அங்கு தங்கி இலங்கை அரச தலைவர்களுடன் ஆலோசனை நடத்துவார் எனக் குறிப்பிட்டுள்ளது.

மேலும் இலங்கையின் வடக்கில் தமிழர் வசிப்பிடங்களில் அளவுக்கு அதிகமாக இராணுவ வீரர்களைத் தங்கவைத்து பொது மக்களை அச்சுறுத்தக் கூடாது. அவர்களை வெளியேற்ற வேண்டும் என்ற ஒப்புக்கொள்ளப்பட்ட விடயத்திலும் அரசு வேண்டுமென்றே மெத்தனம் காட்டுகிறது.

அத்துடன் அது குறித்து இந்திய அரசுக்கு தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைப் போல நடந்து கொள்கிறது.

இராணுவத்தினரின் எண்ணிக்கையையும் குறையவில்லை. குடியியல் நிர்வாகத்தில் இராணுவத்தினரின் ஆதிக்கமும் குறையவில்லை.

தமிழர்களுடைய வீடுகளையும் நிலங்களையும் இலங்கை இராணுவம் தன்வசம் எடுத்துக் கொள்வது வேகமாகவும் அதிக அளவிலும் நடக்கிறது.

இது பற்றி எரியும் பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது. இந்திய அரசு இனியும் இதைக் கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது என்ற நிலைமை ஏற்பட்டு வருகிறது.

கிழக்கு மாகாண சபையின் பதவிக்காலம் இன்னும் ஓராண்டு இருக்கிறது என்றாலும் அதையும் கலைத்துவிட வேண்டும் என்று மாகாண முதலமைச்சர் எஸ்.சந்திரகாந்தன் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார். இதையும் இந்திய அரசு கவனத்தில் கொண்டுள்ளது.

இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் வசிக்கும் தமிழர்களின் துயர நிலை குறித்து நேரில் அறிய இந்தியத் தூதுவர் சமீபத்தில் விரிவாக சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அவர் அளித்த அறிக்கைகள் இலங்கையில் என்ன நடக்கிறது என்பதை இந்திய அரசு புரிந்து கொள்ள உதவி வருகிறது.

எனவே சிவசங்கர் மேனனின் பயணம் முக்கியத்துவம் பெறுகிறது என தினமணி நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. (ந-8,11)

## கழிவு எண்ணெய் அரசி ...

தாக்கப்படுகின்றன. ஊழல்களை வெளிக் கொணரும் அரச அதிகாரிகள், வைத்தியர்கள் வாழும் வீடுகள் மீது கழிவு எண்ணெய் வீசப்படுகிறது.

தமது சமுதாயத்தின் நாளைய தலைவர்களான பல்கலைக்கழக மாணவர்களின் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அவர்களது மண்டைகள் உடைக்கப்படுகின்றன. இது தொடர்ச்சியாக நடக்கிறது.

கழிவு எண்ணெய் வீசுவது, முகமூடி போட்டுக் கொண்டு சந்தியில் வைத்து தாக்குவது, வாகனங்களின் கண்ணாடிகளை உடைப்பது, மாணவர்களின் மண்டைகளை உடைப்பது, தொலைபேசியில் அழைத்து பயமுறுத்துவது ஆகிய நடவடிக்கைகளுக்கான முழுபொறுப்பையும் அரசாங்கம் ஏற்க வேண்டும்.

நாடு முழுக்க நடைபெறும் அனைத்து சம்பவங்களிலும் அரசாங்கத்தின் நிலைப்பாடுகளை எதிர்க்கும் பொது மக்களும், எதிர் கட்சி ஆதரவாளர்களும் தான் தாக்கப்படுகின்றார்கள்.

எனவே இந்த அரசாங்கம் இனியும் இவற்றை யார் செய்கிறார்கள் என்பது எமக்கு தெரியாது. நாம் விசாரணை செய்கிறோம் என்ற பதில்களை கூறமுடியாது.

இத்தகைய கோழைத்தனமான தாக்குதல்கள், தமிழ் மக்களின் சாத்வீக போராட்டங்களை தடுத்து நிறுத்திவிட முடியாது. இதன் மூலம் நமது ஜனநாயக போராட்டம் மேன் மேலும் வலுப்பெறும் என்பதை விரைவில் அரசாங்கம் உணரும் என மனோ கணேசன் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-8,11)

## வேலணை...

ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-6)

## அகதிகள் படகு...

ஆட்களை ஏற்றி வந்தமை காரணமாகவே படகு கவிழ்ந்ததாக அந்நாட்டுப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இலங்கையூடாக பயணத்தை மேற்கொண்டிருந்த படகொன்றே விபத்துக்குள்ளானதாக விசாரணை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவுஸ்திரேலியாவுக்கு வடக்கே உள்ள கிறிஸ்மஸ் தீவுக்கு அருகிலும் இந்தோனேஷியாவிலிருந்து 120 கடல் மைல்கள் தொலைவிலும் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளதாக பொலிஸ் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

படகு கவிழ்ந்தது. இந்தோனேஷியக் கடற்பரப்பு என்றாலும் இந்த மீட்பு நடவடிக்கையில் அவுஸ்திரேலிய நாட்டு அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டதன் காரணமாகவும் படகில் பயணித்தவர்கள் தங்களை அவுஸ்திரேலியாவுக்கு கொண்டு செல்லும்படியும் வேண்டுகோள் விடுத்ததன் காரணமாகவுமே அவர்கள் கிறிஸ்துமஸ் தீவுப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள் எனவும் அவுஸ்திரேலிய அரசின் பேச்சாளர் கூறுகிறார்.

இது தொடர்பில் வேறு எந்த மேலதிகத் தகவல்களையும் என்னால் இப்போது தர இயலாது எனவும் அவுஸ்திரேலிய கடல்சார் பாதுகாப்பு ஆணையத்தன் பேச்சாளர் ஜோமீ ஹான் தெரிவித்தார். (ந-8,11)

## சிங்கத்தை கண்டி ...

பொம்மையை எரித்துள்ளதுடன், இலங்கை தேசியக் கொடியையும் கிழித்தெறிந்து ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

சென்னையிலுள்ள இலங்கை துணைத் தூதரகத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்பாட்டத்தின் போது சம்பிக்க ரணவக்க தெரிவித்த கருத்து இலங்கைத் தமிழ் மக்களை அச்சுறுத்துவதாக அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், ஆர்ப்பாட்டத்தின் போது சம்பிக்க ரணவக்கவின் உருவப் பொம்மையை எரித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் இலங்கை தேசியக் கொடியையும் கிழித்தெறிந்ததை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்களில் சுமார் 15 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பில் அண்மையில் இடம்பெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில் இரா.சம்பந்தன் நிகழ்த்திய உரை தொடர்பில் கருத்து வெளியிட்ட இலங்கையின் அமைச்சரும், ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க, சம்பந்தனின் கருத்துக்கள் எம்மை கோபமடையச் செய்வதாக அமைந்துள்ளன. ஒரு முள்ளிவாய்க்கால் போதும் என்று கருதுகிறோம். இன்னும் 100 முள்ளிவாய்க்கால்கள் அவருக்குத் தேவையா? என கேள்வி எழுப்பியிருந்தார்.

இவரின் இக் கருத்துக்கு தி.மு.கவின் தலைவர் கருணாநிதி, பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் மருத்துவர் ராமதாஸ், இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் ஆகியோர் ஏற்கெனவே கடும் கண்டனம் வெளியிட்டிருந்தனர்.

அதேவேளை, அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்த கருத்துக்கு தமிழக அரசியல் கட்சிகள் வெளியிட்டுள்ள கண்டன தொடர்பில் இந்தியாவின் ஆங்கில ஊடகங்கள் பலவும் முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-8,11)

## நவநீதம்பிள்ளை ...

இலங்கையின் வெளிவிவகார அமைச்சு நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது.

இதன்போது இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆணைக்குழுவின் உண்மைகளைக் கண்டறியும் குழுவுக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் இவ்வாறம் அறிவிக்கப்படும் எனவும் வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19–வது கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்தின் படி இலங்கைக்கு ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் உண்மைகளைக் கண்டறியும் குழு ஒன்றை அனுப்பி வைப்பது தொடர்பில் நவநீதம்பிள்ளை இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அத்துடன், தனது இலங்கை விஜயத்துக்கு முன்னதாக ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் உண்மைகளைக் கண்டறியும் குழுவின் பயணம் அமையும் எனவும் அவர் முன்னரே இலங்கை அரசாங்கத்துக்கு தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ஜெனிவாவில் கடந்த 18 ஆம் திகதி ஆரம்பமாகிய ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 20–வது அமர்வில் உரையாற்றிய இலங்கை பிரதிநிதி இலங்கை மீதான தீர்மானத்துக்கு அப்பால் ஐ.நாவுடன் தொடர்ந்தும் இணக்கமாகச் செயற்படவே அரசாங்கம் விரும்புவதாக குறிப்பிட்டிருந்தார்.

அதேவேளை இலங்கையில் சர்வதேச நாடுகளின், தலையீடுகள் தேவையற்றது எனவும் அதனை மக்கள் விரும்பவில்லை எனவும் இலங்கை அரசாங்கம் வெளிப்படையாக கூறிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-8,11)

## அறிவிப்பில்லா...

யிருந்தனர்.

நேற்று முன்தினம் முழுநாளும் மின்சாரம் தடைப்பட்டிருந்ததாகவும் நேற்று நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை மட்டுமே மின்சாரம் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அப்பகுதியிலுள்ள மின் மாற்றி சாதனம் (ரான்ஸ்போமர்) வெடித்ததனாலேயே மின்சாரம் தடைப்பட்டிருக்கின்றது எனத் தகவல் கிடைக்கப் பெற்ற போதும் மின்சார சபையுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை.

எனினும் நேற்று இரவு 10 மணியளவில் அப்பகுதிக்கு மீண்டும் மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது. (ந-6)

## மகிந்த வந்த...

இடம்பெறவுள்ளதாக அமைச்சரவை தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சில செயற்பாடுகளினால் தெரிவுக்குழுவில் இடம்பெறுவது குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் இன்னமும் ஒருநிலைப்பாட்டுக்குவரவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (ந-8,11)

## இந்தியத் ...

நிலையில் இரா.சம்பந்தன் மருத்துவ சிகிச் சைக்காக சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றிருந்தார்.

அவர் சென்னையில் இருந்து கொழும்பு திரும்புவதற்கு முன்னதாக புதுடில்லியில் இந்திய அரசியல் தலைவர்கள் பலரையும் சந்தித்துப் பேசுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதாக இந்து நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் யாரை அவர் சந்திக்கவுள்ளார் என்ற தகவல் எதையும் இந்து நாளிதழ் வெளியிடவில்லை. (ந-8,11)


## மரண அறிவித்தல்

### கனகசபைப்பிள்ளை சோமசுந்தரம்

நயினாதீவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபைப்பிள்ளை சோமசுந்தரம் அவர்கள் நேற்று 21.06.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபைப்பிள்ளை-மீனாட்சி தம்பதியினரின் புதல்வரும் முத்துலக்சுமி, ருக்குமணிதேவி, காலஞ்சென்ற அருள்பிரகாசம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு, பாலசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிறிதரன், சிறிபாஸ்கரன், உமா, சிறிதரன், பாமா, மாலினி, பதுமா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.06.2012) வெள்ளிக்கிழமை அன்னாரது நயினாதீவு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணிக்கு நயினாதீவு சப்பித்தலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சிறிதரன் (மருமகன்)

(C-310)

## மரண அறிவித்தல்

### திருமதி றோகினி தர்மசீலன்



கொக்குவில் மேற்கு ஐயனார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட றோகினி தர்மசீலன் அவர்கள்20-06-2012 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருநாதன், சுப்புலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும், தர்மசீலன் அவர்களின் அன்பு மனைவியும், சங்கர் அவர்களின் அன்புத் தாயாரும்,

குலசேகரம் (குலம் - ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (கிளி - நோர்வே), நந்தினி (றஞ்சி - லண்டன்) சுதர்மன் (சோமன் - லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

செல்வராணி, தமயந்தி, பத்மநாதன். குசலகுமாரி (குசலா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், வாணுவி, றேஜீனா, விஜய், பரதன், லக்ஸ்மன், லக்மி, லக்சிகா ஆகியோரின் மாமியும், பவீசன், நர்மதா, தேணுகா ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (22.06.2012.) ஒரு மணிஅளவில் கொக்குவில் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு

| | |
|---|---|
| குலம் - ஜெர்மனி | - +495204887278 |
| கிளி - நோர்வே | - +4721384081 |
| றஞ்சி - பிரித்தானியா | - +442082050389 |
| சோமன் - பிரித்தானியா | - +442088383384 |
| இலங்கை | - +94778247683 |

(8684)

# சுற்றுச்சூழல் நெருக்கடியை எங்களிடம் தள்ளிவிடக்கூடாது

## - ஜனாதிபதி

சுற்றுச்சூழல் நெருக்கடிக்கு பெரிதும் காரணமான அபிவிருத்தியடைந்த நாடுகள் சுற்றுச்சூழலை பேணும் பொறுப்பை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிடம் விட்டு விடக் கூடாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நிலையான அபிவிருத்தி பற்றிய ஐக்கிய நாடுகள் றியோ மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், பொருளாதார அபிவிருத்தியை தியாகம் செய்து சுற்றுச் சூழலை பாதுகாக்கும் பாரிய பொறுப்பை சூழல் நெருக்கடிக்கு முக்கிய பங்காற்றிய அபிவிருத்தி அடைந்த நாடுகள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிடம் விட்டுவிட முடியாது. விட்டுவிடவும் கூடாது.

நிலைத்து நிற்க முடியாத நுகர்வு, உற்பத்தி செயல் முறைகளை ஆகவும் குறைந்தளவிற்கு கொண்டுவருவதற்கு உரிய வழிகளில் ஒன்று பசுமை பொருளாதாரத் துக்கு மாறுவதாகும் என்றார்.

மேலும் நிலைபேறான அபிவிருத்திக்கான உபாயங்கள், வறுமை ஒழிப்பு, மூல வளங்கள் மற்றும் சக்தி ஆகியவற்றின் வினைத்திறன் மிக்க பயன்பாடு, சமநீதி, உயர்ந்த வாழ்க்கை தரம் என்பவை சகலருக்கும் கிடைக்கும் வகையிலா[illegible] கொள்கைகள் எண்ணக் கருக்களிலிருந்து தோற்றம் பெற வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (ந-8-11)


## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பிரபல முகாமைத்துவ நிறுவனமான Optimo International Company க்கு வேலையாட்கள் தேவை. ஆறுமாத கால பயிற்சி வழங்கப்படும். பயிற்சியின் போது 10,000 சம்பளமும் பின் 38,000 சம்பளத்துடன் நிரந்தர வேலைவாய்ப்பு வழங்கப்படும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தங்குமிடம் இலவசம் (25 பேருக்கு முன்னுரிமை)

**077 8330074**

(8687)



## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N. குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா? நேரில் சந்திக்கவும்.
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை) செவ்வாய் விடுமுறை

**பீப்பில்ஸ் இன் (PEOPLE INN)**
இல. 112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
[பிள்ளையார் ஹோட்டல் முன்பாக]
T.P: 072 6816681, 072 6816691

(8645)



# RAINBOW TRAVELS JAFFNA BRANCH



20 வருடங்களாக கொழும்பு மாநகரில் சேவைகளை ஆற்றி வந்த எமது ஸ்தாபனம் தற்போது யாழ் நகரில் சேவைகளை தொடர்கின்றது.

## எமது சேவைகள்



### STUDENT VISA

Newzealand செல்வதற்குரிய visa ஒழுங்குகள் குறுகிய காலத்தில் செய்து கொடுப்பதுடன் அங்கு நிரந்தர குடியுரிமையும் Work Permit மூன்று வருட காலத்தில் பெற்றுக் கொடுக்கப்படும்.

MBBS - உங்கள் வாழ்நாள் கனவான நீங்கள் விரும்பும் Doctor பட்டத்தை குறைந்த கட்டணத்தில் பின்வரும் நாடுகளில் பெற்று சர்வதேச அங்கீகாரத்துடன் உலக நாடுகளில் Doctor ஆக தொழில் புரிய முடியும்.

நாடுகள் :- China, Poland, Czech Republic, Russia, Ukraine, London, Caribbean Countries (North America)

### SINGAPORE / MALAYSIA

மாதாந்த சம்பளமாக 65000 ரூபா பெற்று உங்கள் உயர் கல்வியையும் சிங்கப்பூரில் பெற்றுக் கொள்ளலாம்.
இரண்டு வருட பட்டப் படிப்பின் பின்பு நிரந்தர வதிவிட உரிமையை பெற்றுக் கொள்ளலாம்.

### Canada உயர் கல்வி

PhD/ Master (MA, MSc, MBA) போன்ற பட்டப் படிப்பினை கனடாவிலும் நியுசிலாந்திலும் கற்பதன் மூலம் அந்த நாட்டில் நிரந்தர வதிவிட உரிமையை குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம்.



### மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்பு

சவுதி அரேபியா, டுபாய், குவைத், டோகா கட்டார், ஓமான் போன்ற நாடுகளில் மேசன், தச்சுத்தொழில், பிளம்பர், எலக்ரீசன், மேற்பார்வையாளர் போன்ற வேலைகளுக்கு குறுகிய காலத்தில் அனுப்பி வைக்க முடியும்.

### சர்வதேச நாடுகளுக்கான பொதிகள் சேவை (Parcel Service)

பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன், இத்தாலி, கனடா, அவுஸ்திரேலியா, நோர்வே போன்ற நாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர், நண்பர்களுக்கு அனுப்பவேண்டிய உணவு, உடை, அலங்கார, அன்பளிப்பு பொருட்களை 3, 4 நாட்களில் அவர்களது விலாசத்தில் ஒப்படைக்கப்படும்.

**மேற்குறிப்பிட்ட சகல சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ளலாம்**

தொடர்புகளுக்கு:- **Rainbow Travels**

30/2, 3rd Lane,
Power House Road, Jaffna.
TP: 0778980652

(C-302)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.